# ISSUES IN PUBLIC SERVICE DELIVERY : A CASE STUDY OF ADDALAICHENAI DIVISIONAL SECRETARIAT IN THE EASTERN SRI LANKA

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

***M. Abdul Jabbar***
***T. Fathima Sajeetha***

## Abstract

*This study examines the major issues in public service delivery in the Addalaichenai divisional secretariat area of Eastern Sri Lanka. The government has the obligation to deliver the services to its citizens. Normally, the action of government which provides the services to the citizens is called as public service delivery. The objective of this study is to identify the empirical major issues in public service delivery in Addalaichenai divisional secretariat. This research is built on qualitative research methodology and it is explored by using both primary and secondary materials. In the primary source, the qualitative interviews and focus group discussion are used where necessary. In the secondary source such as books, magazines, internet articles are used. This paper finds out that two types of issues are in service delivery in Addalaichenai divisional secretariat faced by people and administrators such as unawareness of people, discrimination, delay, lack of modern facilities, political influence. These issues are the challenges to the day to day life of the people and they have to be solved to achieve the enhancement of the citizens.*

## Introduction

The concept of service delivery occupies important place in administrative studies. It is divided into public and private service delivery. As private sectors are almost money oriented, its service delivery does not reach all people. But the goals of public institutions are to deliver the services to the citizens and improve the social interests. Because of that the service consumers are called as customers and citizens in private and public institutions. This study has full concentrations on public service delivery. The public institutions which deliver the public services may be school, government hospital, local government bodies, police station and departments which have the authority from the law.

The primary purpose of government is to provide goods and services to the society such as education, health, welfare, safety and morals of its citizens (Ruchelman 1989:1).The democratic governments are obliged to provide these services through the central and local government bodies. Public services are defined as those services which are mainly or completely, funded by taxation (Humperes 1998: 6). These services can differ significantly from commercial private sector services in a number of ways. Normally, public services are concerned which services are provided by the government or institutions without profit oriented.

According to UNDP (1999) literature public service delivery is a set of institutional arrangements adopted by the government to

provide public goods and services to its citizens. Public service delivery system in Sri Lanka takes the important place like many other developed and developing countries over the hundred years. It effects on day to day activities of citizens at the grassroots level. As number of separate organizations at national level in the delivering public services may be large, many public service bodies are established for handling the vast majority of contacts with the general public. They have responsibilities either directly or indirectly to state and citizens.

In Sri Lanka, the many public institutions active to deliver the public services under the central government, provincial government and local government. They are ministries, authorities, departments, administrative offices and etc. Although every public institution delivers the public services according to the governmentøs policy, it faces many challenges and issues to do its service accurately. This study examines major issues in public service delivery based on Addalaichenai divisional secretariat area.

Divisional secretariat takes an important role in public service delivery. It delivers the services to all levels of citizens including the grass root and facilitate the public to get these services quickly and easily. It provides the essential public services which are need to drive the day to day life of public. It provides the multiple services such as the birth certificate, death certificate, marriage certificate, national identity card, passport, character certificate, license, social services to the people.

## Objectives

The objective of this research is to identify major issues in public service delivery of Addalaichenai divisional secretariat. Especially, it tries to find out the issues both faced by people and administrators in this regard. This research is organized as follows. The next section briefly examines the review of theoretical and empirical literature. The research findings are then summarized followed by data analysis. The last section sets out the conclusion of the research.

## Research Methodology

The research comprises the qualitative analysis which includes primary and secondary data. Addalaichenai divisional secretariat has been chosen for the case study. This paper is based on 20 qualitative interviews (administrators and public), limited observation and a discussion with target group are used to obtain primary data. Relevant academic writings, books, magazines, journals, government publication report are used as secondary data. The secondary data collection is based on literature survey which I reviewed theoretical and empirical literature available on the subject.

## Conceptual Framework

Public service delivery is one of the developing concepts. Goods are not only to fulfill the humanøs needs, but also services. These public services are delivered by the government through the public institutions. This part briefly explains the criteria of quality delivery of public services, approaches to public service delivery, methods of public service delivery and citizenøs rights on public service delivery.

Seidle mentions the criteria for quality delivery of public services, they are responsiveness, accessibility and reliability(1995: 11). If service delivery system is without the above, it will be not considered as a quality delivery of public services.

There are some approaches to deliver the public services. German Sociologist Max Webber has designed the bureaucratic model(Ruchelman 1989:1). It is a traditional approach for delivering services. Most prominent is the characteristic of hierarchy where in the few at the top of the pyramid assume overall administrative responsibly. And large number of personnel at the lower levels workers at the bottom of the pyramid.

The other approach is public choice theory. Where bureaucracies perform inefficiently or where there is strong pressure to cut the costs of services, an alternative model may be considered (Ibid: 3).This approach recognizes that while it is government that is usually responsible for arranging the delivery of services, the same government jurisdiction does not necessarily to produce the services. According to this approach, service providers may be a public agency, a private profit-making firm, a group of volunteers or just plain citizens.

There are four basic broad models of public service delivery arrangements that governments everywhere have adopted (Pradeep 2011: 7). They are direct service delivery model, privatization service delivery model, decentralization service delivery model and alternative service delivery model. In our country, the direct service delivery model and decentralization service delivery model are almost used.

According to the UN human rights declaration convention 21(2), every person has a right to enjoy the equal public services (Waldt 2004: 82). So public service delivery is concerned as an essential to fulfill their rights. OECD (1990) has identified the rights of people who are the tax payers. They are the right to be informed, assisted and heard, the right to be appeal, the right to pay no more than the correct amount of tax, the right to certainty, the right to privacy, the right to confidentiality and secrecy. Where these rights are abused or have crisis to get and enjoy the public services, peopleôs life will be weaken.

## Research Area

Sri Lanka, a small country of Asia, has a long history in public service delivery. It dates back to the times of ancient kings, though, during the time of British rule significant reforms were carried out. When Sri Lanka became independent in 1948, public service was brought under the public service commission established on the recommendations of the Soulbury Commission (Iqbal 2002). It has been developing step by step. In the second republic constitution of Sri Lanka, it has carried out the ministries, departments and commissions which are appointed by the president.Many public institutions are established under the law and services are brought to the people in national, provincial, district, divisional and rural level. Divisional secretariat provides the services to the citizen in particular division.

Addalaichenai D.S. Division is situated in Ampara district of Eastern Sri Lanka. It has four villages as follows;Addalaichenai, Palamunai, Oluvil, Deegavapi and 32 G.S. division. Its population (2009) is 43,632 (planning division, Addalaichenai divisional secretariat). There are three major ethnic and religious groups living together. They are Muslims, Tamils, and Sinhalese. Addalaichenai divisional secretariat delivers the services equally, although, people of this area are not satisfied on this service delivery. And there are many issues in service delivery faced by people and administrators.

## Findings and Discussion

This study explores that Addalaichenai divisional secretariat is an important public

institution to deliver the public services which are essential to the people in this area. It has many divisions such as land, administrative, social service, accounting, cultural and planning to provide the different types of services. Even though, all division of Addalaichenai divisional secretariat deliver the lots of services through the various ways such as direct service delivery, mobile service, Samurdhi and other ways,they face many issues in this regard. This part finds out the issues in public service delivery. There are two types of issues, one is faced by the people and other one is faced by the administrators.

## Issues faced by the People

Public service delivery is made for the people who are citizens of the country.It helps the people to get the services quickly and easily to fulfill their needs and develop them. But practically, people face many problems to get these services. As far as the issues faced by the people are concerned, they are found out from the interviews.

The first issue is that, people do not identify the administrator who is responsible for a particular service. As well as people do not have awareness on public service delivery and they do not understand the administratorôs instructions and criticize the officers. So that administrators also do their works without interesting. Some time administrators do not give the necessary information to the citizens and they deride the people. In this situation, people disturb other officers to ask some information and services.It is also concerned as an annoyance of administrators.

Other issues in public service delivery are discrimination and unequal treatment. Sometime administrators are unfair to deliver the services. They almost concern the people who are relatives and friends. When some services have to be delivered to the specific number of people, the administrators propose their relatives. It mostly affects the innocent general public.

As the mobile services are delivered for a few days, all people of this area are not able to get these services. Most of the people are going to get these services, a limited period of time is not enough to fulfill their needs and deliver the services. Nowadays, the administrators inform the people about the mobile service, but they do not give any information about the documents which are wanted to bring.

Some administrators are lazy to do their works. They are often gathering and talking in their working hours. When people go to meet them, they are not in their seats. Some time, they always find a fault from people and scold them, people are returned and their works are postponed.

When the service delivery, some administrators are not flexible to the citizens and they follow the rules and regulations harshly. It makes the people to the negative mind on the administrators. The service delivery not only depends on a division but also mingle with other divisions. If one division is delay to do its works, it will affect rest of them.

Public, as the tax payers, have a lots of rights on public service delivery, but most of them do not know about all these rights but the right to be informed. In divisional secretariat, information are given through directly, through the telephone, notice board, notice, and annual report. But they do not give these information on the accurate period. Most of the people do not satisfy with the enjoyment of this right.

## Issues, faced by administrators

The process of public service delivery is implemented by the administrators who get the authority from the government. They facilitate the people to get the services and welfares effective and efficiency. This study explores that when they deliver the services, they face many issues in proper service delivery. The issues faced by the administrators are as follow.

A basic problem for those who administer the public services is that while citizens usually want more from government, they generally are inclined to pay less in taxes. This is because payment of services in the public sector is almost always separated from the delivery of services; and where citizens do not pay directly for a service, government has difficulty imposing limits. It causes to deliver the limited services.

As far as Addalalaichenai divisional secretariat is concerned, most of the administratorô̂s language is Tamil. As many government secular received in Sinhala, a translator must be there. There is a translator in this divisional secretariat. If he has a leave for any reasons, the works will be remained still he come back. A service is not delivered immediately, and it has many procedures and takes a few days. But people who do not understand this, they scold and disturb the administrators.

Other issue is the lack of modern facilities. Its buildings and furniture have been broken and there is not enough the technical equipment. It has not the appropriate environment to do the office work. Excepting the few division, there is no enough space to work and keep the things.

Although e-governance system is spoken in worldwide, there is a traditional way following to deliver the services in this divisional secretariat. And political influence is as an issue in public service delivery, though, it is not a major issue but a little.

The reasons of these issues are as follow: the main reason is the lack of awareness of the citizens. They think that, they are only correct and most of the administrators are liars.

As the institutional arrangements are followed very strictly and the administrators are not flexible to the citizens, people hesitate to tell their needs and problems. Administrators cannot do their works independently as political influence is in public service delivery. Other one is the lack of facilities including the basic and modern. It causes to delay.

Most of the characteristics of good governance are not followed by the administrators. In modern era, there are not enough facilities in Addalaichenai divisional secretariat. People do not have the knowledge about the public service delivery and administrators do not provide the knowledge to the citizens. As people are trying to get the luxury life, these services are not enough to achieve the above.

Changing the public policy is a next reason to make an issue in public service delivery. One time government introduces a policy and orders to implement, but before the complete implementation, government orders again to stop the policy and introduce another policy. It not only disturbs the administrators but also people are affected by these changes.

## Recommendations

As the result of this study, there are many issues faced in service delivery of Addalaichenai divisional secretariat. These issues are shown as challenges to drive the usual common life.

So that, the recommendations are proposed below to handle the above issues and make the public service delivery effective and efficiency in this divisional secretariat.

The modern facilities should be given to the divisional secretariat and sufficient furniture and place should be allocated and it should be changed as a suitable place for working. Electrical equipment should be given and new public management system must be implemented to deliver the public service easily.

The administrators in divisional secretariat should learn and get the training in other languages including English. As well as administrators have to get the IT training ability and make the opportunities to do their work on computer.

To avoid the lateness, there should be maintained the time management and administrators should be compelled to work on time.

As transparency and accountability must be maintained in every public institution, the reports, publications, projects, news, notice should be reached the people through the media or what else. They should be instructed about the positive things which are gained by their service to people and nation, and the negative things which are the consequences of the lack of service delivery.

As well as if public opinion on public service delivery which are either positive or negative and their suggestions get from the people, it will help to improve the public service delivery and correct the mistakes.

Awareness programs should be organized in every G.S. division and instruct the people the day to come to the office and bring the documents to get the particular service. Like that must be given the explanation of the issues in public service delivery and its affects. And citizenös charter must be given to the service consumer.

Administrators must be flexible when it is necessary for delivering the services to the citizens who are vulnerable.

## Conclusion

As a result of this study, many issues are found out in public service delivery, it has become difficult to provide the required services to the citizens in efficiency and effectiveness manner. Divisional secretariat has the authority to deliver the services, though, it has no sufficient public support in this regard. Even, emerging the contemporary developments also does not make the changes in service delivery mechanism. Therefore, the divisional secretariat has to take the necessary actions to redesign the system of public service delivery with the co-ordination of people and administrators who are related to particular issues. It would make the opportunities to reduce and resolve the above issues and increase the efficiency and effectiveness of the public service delivery.

## Bibilography

Allan Rosenbaum, (2002, December 10-11).*Cooperative Delivery of Public Services: Reflections on the Dynamics of Public Sector – Private Sector – Civil Society Collaboration on Governmental Service Delivery.*The Fourth Global Forum on Reinventing Government: Capacity Development Workshops. Retrieved from http://unpan1.un.org/intradoc/groups/public/documents/un/unpan006494.pdf

Anita Karwal. *Effective Public Service Delivery and e-Governance: Who Drives Whom.*Ahmedabad: Sardar Patel Institute of Public Administration. Retrieved from http://www.csi-sigegov.org/casestudies/02_effect_public_service.pdf

Brendan Martin. (2004). *What is public about public services?.*London: World Development Report. Retrieved from http://www. public world.org/docs/WhatIsPublic.pdf

Carine Bachman & Christian Staerkle. *The Meanings of Citizenship: From Status to Social Process.* Retrieved from http://www.cimera.org/files/reports/rr1/chapter2.pdf

Center for tax policy and administration. *Taxpayer's Rights and Obligations – Practice Note.* Retrieved from http://www.oecd.org/tax/taxadministration/17851176.pdf

Gerrit Van Der Waldt. (2004). *Managing performance in the public sector: Concepts, Considaration and Challenges.*Jata and Co Ltd.

Iqbal, M.C.M. (2002). *The Public Service of Sri Lanka.* Annual Report in the State of Human Rights in Sri Lanka. Retrieved from http://www.ruleoflawsrilanka.org/resources/writings-of-m-c-m-iqbal/the-public-service-of-sri-lanka

Jean-Claude Thoenig, (2003). *Institutional theories and public institutions: Tradition and Appropriateness.* Retrieved from http://hal.archives-ouvertes.fr/docs/00/13/99/54/PDF/Institutional_theories._Pre-draft.pdf

Leslie Seidle, F. (1995). *Rethinking the delivery of public services to citizens.*Institute for research on public policy.

Lionard I. Ruchelman. (1989). *A workbook in redesigning public services.* Albany:State university of New York press.

Michael S. Josephson. (2005). *Preserving the public trust: The Five Principles of Public Service Ethics.*California: Josephson Institute of Ethics Los Angeles.

Ministry of Public Administration and Home Affairs. (2007). *Citizen-Client Charter. (2007).* Retrieved from http://www.idpsrilanka.lk/Doc/Related%20Articles/Citizen % 20 Charter % 20 of % 20 Sr % 20 Lanka % 20 % 20 English % 20. pdf

Organization for economic co-operation and development (OECD). (2011). *Together for Better Public Services: Partnering with citizens and civil society.* Retrieved from http://browse.oecdbookshop.org/oecd/pdfs/product/4211131e.pdf

Peter C. HUmperes. (1998). *Improving public service delivery.* Ireland: Institute of Public Administration.

Peter Kinderman& Frances Butler. (2006). *Implementing a human rights approach within public services: An Outline Psychological Perspective.* A Report for the Department for Constitutional Affairs. Retrieved from http://www.mhe-sme.org/assets/files/Human %20 Rights % 20 committee/Implementing_ a_ Human_ Rights_ Approach_ within_ Public_ Service.pdf

Pradeep, H.U.S. (2011). *Challenges of local government service delivery: A Case Study of Matara Municipal Council.* (Master thesis, North South University). Retrieved from http://mppg-nsu.org/attachments/339_ Pradeep %20 Thesis. pdf

Ranjanee Kusumsiri De Alwis. (2009). *The history of and prospects for public sector reforms in Sri Lanka.* (Ph.D. Thesis, Victoria University of Wellington). Retrieved from http://researcharchive.vuw.ac.nz/bitstream/handle/10063/1444/thesis.pdf?sequence=1.

The Office of the Queensland Parliamentary Counsel. (2008). *Public Service Act 2008.* Retrieved from http://www.legislation.qld.gov.au/legisltn/current/p/public Serv A08 .PDF

UNDP, (1999), *Evaluation of UNDP Role in Decentralization and Local Governance.* Working Paper. New York: UNDP.

William H. Holly., Kenneth M. Jennings., & Roger S. Wolters. (2009). *The labor relation process.* USA: South Western Cengage Learning.

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# கிழக்கிலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் : சர்வதேச செயற்பாட்டாளர்களின் பங்களிப்புக் குறித்த மீள்பரிசீலனை

***M.M.Fazil***

## சுருக்கம்

*இக்கட்டுரை கிழக்கிலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் சர்வதேச செயற்பாட்டாளர்கள் இலங்கை அரசுடன் இணைந்து மேற்கொண்ட பங்களிப்புக்கள் குறித்து மீள் வாசிப்புச் செய்கின்றது. யுத்தகாலத்தின் போது கிழக்கின் மக்களும் பௌதீக வளங்களும் கடுமையான பாதிப்புக்களுக்குள்ளாக்கப்பட்டிருந்தன. எனினும் யுத்தத்துக்குப் பின்னர் ஆயுதக் களைவு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம், ஏனைய இதர அபிவிருத்திச் செயன்முறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த சூழல் உருவாக்கப்பட்டது. எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலேயே சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இப்பிரதேசத்தில் இடம்பெற்று வந்திருப்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. அதேவேளை அதிகரித்த அரச தலையீடும் யுத்தம் முடிவுற்று குறுங்காலத்தினுள் சர்வதேச நிறுவனங்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறியமையும் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையின் வெற்றிகரத் தன்மையினைப் பாதிப்புறச் செய்துள்ளது.*

## அறிமுகம்

பொருளாதாரரீதியாக நலிவடைந்த ஒரு பிரதேசமாக இலங்கையின் கிழக்கு மாகாணம் உள்ளது. இப்பிரதேசம் நாட்டில் பல்வேறு காலங்களில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள் (சூறாவளி - 1978, சுனாமி - 2004) மற்றும் மூன்று தசாப்தகால இன மோதல்களினால் கடுமையான பாதிப்புக்குள்ளானது. விஷேடமாக இயற்கை அனர்த்தங்களும் மனிதரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அனர்த்தங்களும் இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தில் கணிசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தின. இதன் காரணமாக துரித சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியினை வேண்டிநிற்கும் ஒரு பிரதேசமாக இப்பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

விசேடமாக கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாரை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. 10,000 சதுரகிலோமீற்றர் பரப்பினை உள்ளடக்கிய இப்பிரதேசம், நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 15 சதவீதத்தினைக் கொண்டுள்ளது (Eastern Revival, 2015). கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகை 1.54 மில்லியன் களாகும். இது நாட்டின் மொத்த சனத்தொகையில் 7.5 சதவீதமாகும் (EPC, 2015).

இம் மாகாணம் இலங்கையின் ஏனைய மாகாணங்களைவிட தனித்தன்மைகள் பலவற்றினைக் கொண்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம், தமிழ், சிங்களவர், கிறிஸ்தவர் என மிகவும் சிக்கலான பன்மைத்துவ சமூகக்

கட்டமைப்பினைக் கொண்டிருப்பது அதன் தனிச்சிறப்பாகும். அதேவேளை இன மோதல் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் முக்கிய பேராட்ட மையமாகவும் கிழக்கு மாகாணம் இருந்து வந்துள்ளது.

யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இப்பிரதேசத்தின் ஜனநாயக சிவில் நிறுவனங்கள் முடக்கப்பட்டிருந்தன. குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்த பிரதேசங்களில் அவர்களது நிர்வாக நடைமுறை அமுலில் இருந்தது. எனினும் 2006இல் உருவான மாவிலாறு பிரச்சினையினை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமிடையே யுத்தம் உருவானது. இலங்கையில் யுத்தநிறுத்தம் அமுலில் இருந்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இவ் யுத்தம் 2007இல் கிழக்கு மாகாணத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதேவேளை முழு நாட்டிலும் 2009இல் யுத்தம் முடிவுற்றது.

கிழக்கின் இறுதி யுத்தத்தின் தொடக்கமாக அடையாளப்படுத்தப்படும் மாவிலாறு பிரச்சினை நீண்டகாலமாக செயற்பாட்டில் இல்லாமல் இருந்த ஜனநாயகத்தினை இப்பிரதேசத்தில் மீளஅமைப்பதற்கான சாதக சூழ்நிலையினை உருவாக்கியது. இதன்போது யுத்த பாதிப்பிலிருந்து மக்களையும் குறித்த பிரதேசத்தையும் மீட்டெடுத்தல், மக்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து மக்களை அபிவிருத்தி நோக்கி நகர்த்துதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இப்பிரதேச மக்களின் பிரதான தேவைகளாக இருந்தன.

யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட தேவைகள் சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் எனும் வரைபுச் சட்டகத்தினுள் நின்று சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் அவற்றினை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. இதற்கமைய கிழக்கில் சமதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கான சர்வதேச பங்களிப்பினைப்பெற இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொள்கையின் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை நீண்டகாலமாக சர்வதேச சமூகத்துடன் இராஜதந்திர உறவினைப் பேணிவருகின்ற நாடு என்றவகையில் கிழக்கில் யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையில் அத்தகைய உறவினைக் கொண்டு சமதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமுடியும் என்ற பலத்த எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் யுத்தத்திற்குப் பிந்திய சர்வதேச சமூகத்துடனான உறவானது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் கொள்கையாக விளங்கிய ‘மஹிந்த சிந்தனையின்’ அடிப்படையிலேயே நோக்கப்பட்டது. இதன்கீழ் அவரது வெளிவிவகாரக் கொள்கை சுதந்திரமானதும் முற்போக்கானதுமான அணிசேராக் கொள்கை என்பதாக இருந்தது. இதற்கமைய ஆசிய நாடுகளான இந்தியா, யப்பான், சீனா, பாகிஸ்தான் முதலான நாடுகளுடன் கூட்டுறவினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன (Ministry of External Affairs, 2013).

இத்தகைய வெளியுறவுக் கொள்கை யுத்தத்திற்குப் பின்னர் கிழக்கிலங்கையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு போதுமான ஒன்றாக இருக்கவில்லை. இந்நிலையில் கிழக்கிலங்கையின் யுத்தத்திற்குப் பிந்திய சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புக் குறித்த மீள்வாசிப்பொன்று இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

## ஆய்வுப் பிரச்சினை

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறையானது சர்வதேச சமுகத்தினால் தேசிய அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகும். யுத்தத்தின் பின்னர் மோதல் நிலையில் இருந்து ஜனநாயக வழிமுறைக்குத் திரும்புவதற்கு அவசியமான நீண்டகால செயன்முறையாகவும் இது கருதப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் 2007ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக தோற்கடிக்கப் பட்டதுடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து சர்வதேச சமூகத்தின் உதவியுடன் யுத்தத்துக்குப் பின்னரான ஆயுதக் களைவு, முன்னாள் போராளிகளின் விடுதலை, அவர்களை சமூகத்துடனும் பொருளாதாரத்துடனும் ஒன்றிணைத்தல், மீள் குடியேற்றம், புனர் நிர்மாணம், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, ஜனநாயக நிறுவனங்களின் உருவாக்கமும் மீளியங்கச் செய்தலும் போன்ற நடவடிக்கை களை மேற்கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பம் உருவாகியிருந்தது.

இச்சந்தர்ப்பத்தினை வெற்றிகரமாகப் பயன் படுத்துவதன் ஊடாக இலங்கையில் நீண்ட காலமாக இருந்துவரும் இனமோதலுக்கு அரசியல் தீர்வினை எட்டமுடியும் எனக் கருதப்பட்டதுடன் அதற்கான சர்வதேச சமூ கத்தின் பங்களிப்பும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. சமூக மட்டத்திலும் பரவலடைந்திருந்த இவ் எதிர்பார்ப்புக்கள் நாளடைவில் பல சிக்கல் களை எதிர்கொள்ளலாயிற்று.

## சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: எண்ணக்கரு விளக்கம்

அண்மைக்காலமாக யுத்தத்திற்கு பின்ன ரான சமாதானத்தை கட்டியெழுப்புதல் எண்ணக்கருவானது கல்வியலாளர்களினதும் செயற்பாட்டாளர்களினதும் பிரதான கவனத் தினைப் பெற்றுவருகின்றது. குறிப்பாக இவ்வெண்ணக்கரு கெடுபிடி யுத்தத்தின் பின்னர் (1990) கல்விசார் மற்றும் ஆய்வுக் கலந்துரையாடலில் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. இது தொடர்பாக Meernik மற்றும் Mason என்போர் குறிப்பிடுவதன்படி 1990 முதல் உலகில் அதிகரித்துவரும் உள்நாட்டு யுத்தங்கள் மற்றும் மோதல் களால் சமதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறையானது சர்வதேச ரீதியில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது (Call, 2004; Meernik & Mason, 2006).

சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் ஒரு செயன்முறை என்றவகையில் ஐக்கிய நாடு கள் சபை அதன் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அச்செயன்முறையினை முன்னெடுத்தது. இதற்கமைய அவ்வமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் Boutros-Boutros Ghali ‘சமாதானத்திற்கான நிகழ்ச்சி நிரல்’ (Agenda for Peace) என்ற திட்டத்தினை வெளியிட்டதுடன் அதனூடாக மோதலுக்குப் பின்னர் சமாதானத்தினைக் கட்டியெழுப்பு வதன் முக்கியத்துவத்தினை வெளிக்கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சித் திட்டமானது ஆயுத மோதலுக்கு பின்னர் யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினரிடம் இருந்து ஆயுதங்களை களை தல், சட்டத்தையும் ஒழுங்கையும் மீள நடை முறைப்படுத்துதல், அகதிகளை நாட்டுக்கு மீள அழைத்தல், பாதுகாப்பு பிரிவினருக்கு ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குதல் போன்ற விடயங்களையும் உள்ளடக்கியிருந்தது.

சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் எண் ணக்கரு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்ப வரைவிலக்கணத்தின்படி சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது “மோதலுக்கான அடிப்படை காரணிகளை கண்டறிந்து, அதனை முற்றுமுழுதாக களை வதற்கான கட்டமைப்பினை உருவாக்குவதன் ஊடாக மீண்டும் மோதலுக்குள் செல்வ தனைத் தடுப்பதற்கான நடவடிக்கையாகும்.” இவ்வரைவிலக்கணமானது பூத்ரோஷ் பூத்ரோஷ் காலியின் ஆரம்பகட்ட விளக்கங் களுடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டதாகும். எனினும் இவ் விளக்கம் ஒரு தத்துவார்த்த கட்டமைப்பிலான கருத் தினையே தருகின்றது என சில ஆய்வாளர் கள் குறிப்பிடுகின்றனர் (Call, 2004; Keating & Andy, 2004).

Meernik மற்றும் Mason (2006) எழுதிய ‘Conflict Prevention and Peace Building in Post-war Societies’ என்ற நூலில் மோதலை தடுத் தல், சிவில் யுத்தங்களை நிறுத்துதல், புனர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பேச்சுவார்த்தை மூலம் சமாதானக் கட்டமைப் பினை விருத்தி செய்தல், யுத்தத்திற்கு பின்னரான பொருளாதார அபிவிருத்தியினை

ஏற்படுத்துதல் முதலான விடயங்களை ஐ.நாவின் கோட்பாட்டு அடிப்படைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளனர். விஷேட மாக இவர்கள் பல நாடுகளின் யுத்தத்தின் பின்னரான உள்நாட்டு நிலைகளை ஆராய்ந்து, நடைமுறை அனுபவங்களுடன் தொடர்புபட்டவகையில் சமாதானத்தை கட்டி யெழுப்புதல் எண்ணக்கருவிற்கு பின்வரும் விளக்கத்தினை வழங்கியுள்ளனர்: ""சமாதா னத்தினைக் கட்டியெழுப்புதல் மோதலுக்குப் பின்னரான தீர்வு நிலையினை வெளிப்படுத் துகின்ற அல்லது மோதலின் பரவலை தடுக்கின்ற செயன்முறையாகும். மேலும் மோதலை ஒரு சாத்தியப்பாடான மாற்றுத் திசைக்குக் கொண்டு செல்லும் ஒரு வழி முறை என்றவகையில் சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் மீள் இணக்கப்பாடு, மீள் கட்டுமானம், நீண்டகாலப் பொருளாதார, சமூக அபிவிருத்தி போன்றவற்றை உள்ள டக்கிய ஒரு பல்பரிமாண அடிப்படைகளைக் கொண்ட செயன்முறையாகும்.""

எனினும் இவர்களது அணுகுமுறை யுத்தத் திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் ஆயுதக் களைவு, குழுக்களைக் கலைத்தல், மீள் ஒருங்கிணைத்தல் ஆகிய DDR (Disarma ment, Demobilization and Reintegration) செயற்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான சமூக, பொருளாதார அபிவி ருத்திகள், மனிதப் பாதுகாப்பு உள்ளிட்ட நிலையான சமாதானத்தினை ஏற்படுத்து வதற்கு யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினரை DDR செயன்முறைக்கு உட்படுத்துவதன் மூலம் சிறப்பான வெற்றிகளைப் பெற முடியும். இதற்கமைய யுத்தத்திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டி யெழுப்புதலின் முக்கிய அங்கமாக DDR செயன்முறை விளங்குகின்றது.

சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் தொ டர்பான மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் மரபுரீ தியான அணுகுமுறையுடன் தொடர்புபட்ட தாகும். இம் மரபுரீதியான அணுகுமுறை பல்வேறு ஆய்வாளர்களினதும் விமர்சனத் திற்கு உள்ளாகியுள்ளது. அரசுகள் உள்ளடங்கலான ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய சர்வதேச அமைப்புக்களும் பணத் தினையும் பொருளாதார உதவிகளையும் அடிப்படையாகக் கொண்ட சமாதானத்தி னைக் கட்டியெழுப்புதல் செயன்முறை யினைக் கண்டிக்கின்றனர். குறிப்பாக இத்த கைய செயற்பாடுகள் பல நாடுகளில் தோல் வியில் முடிவடைந்திருப்பதுடன் மீள யுத்தம் ஏற்படுவதனையும் இயலுமானதாக்கியுள்ளது. இதனால் இவர்கள் விரிவுபடுத்தப்பட்ட நவீன அணுகுமுறை ஒன்றின் அவசியத்தினை வலியுறுத்துகின்றனர்.

இவ்வணுகுமுறை நல்லாட்சி, பொறுப் புடைமை, நெகிழ்ச்சியுடைமை மக்கள் பங்கேற்புடன் கூடிய நிறுவனக் கட்டமைப்பு உருவாக்கம் என்பவற்றினை உள்ளடக்கி யதாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் (UNSC, 2011). இதன்படி அண்மைக்காலமாக பொருளாதார உதவி களுக்கப்பால் ஜனநாயக அடிப்படை யில் அமைந்த நிறுவன அமைப்புக்களை உரு வாக்குவதன் ஊடாக சமாதானத் தினைக் கட்டியெழுப்பும் செயன் முறைக்கு சர்வதேச சமூகம் முன்னுரிமை கொடுத்து வருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்களின் அடிப்படையில் சமாதானத்தினைக் கட்டி யெழுப்புதல் எனும் எண்ணக்கருவானது யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் மீளவும் வன்முறையினை நோக்கி நகர்ந்து விடமால் தடுப்பதனை இலக்காகக் கொண்ட சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் கூடிய ஒரு செயன்முறையாகும். இச் செயன் முறை யில் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட அரசு களுடன் ஒன்றிணைந்து மீள்கட்டுமானம், பொருளாதார, அபிவிருத்திசார் நடவடிக்கை களில் ஈடுபடுகின்றன. எனினும் மரபுரீதியான இவ்விளக்கம் ஆய்வாளர்களினால் விமர்சிக் கப்பட்டதனையடுத்து யுத்தத்திற்குப் பின்ன ரான சூழ்நிலையில் நிறுவனக் கட்டமைப் பினை உருவாக்குகின்ற செயன்முறை களையும் உள்ளடக்கியதாக சமாதானத் தினைக் கட்டியெழுப்புதல் எண்ணக்கரு வளர்ச்சி கண்டுள்ளது.

## கிழக்கில் யுத்தத்துக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

கிழக்கில் யுத்தம் முடிவடைந்த நிலையில் ஜனாதிபதியும் அரசின் சிரேஷ்ட அதிகாரிகளும் ‘கிழக்கிற்கான பாரிய அபிவிருத்தி திட்டம்’ குறித்து அறிவிப்புச் செய்தனர். இத் திட்டம் ‘Nagenahira Navodaya, or Eastern Re-awakening’ என அழைக்கப்பட்டது. இத்திட்டம் கைத்தொழில் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், மின்நிலையம், பாலங்களை அமைத்தல், நீர் மற்றும் கழிவகற்றல் வசதிகளை எற்படுத்துதல், உல்லாசப் பிரயாணத்துறையினை விருத்தி செய்தல், தனியார் வர்த்தகத் துறை வளர்ச்சியினை ஏற்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தது. மேலும் இடம் பெயர்ந்த மக்களினை மீளக் குடியமர்த்துதல், அவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், பொருளாதார வாய்ப்புக்கள் மற்றும் வீட்டு கட்டுமானம் போன்றவற்றினை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற விடயங்களும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதன் முதற்கட்டமாக கிழக்கின் நான்கு வருட அபிவிருத்தி திட்டங்களுக்காக அரசாங்கம் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவதற்கு உத்தேசித்திருந்தது. மேலும் அரசாங்கம் சர்வதேச முதலீட்டாளர்கள், பல்தரப்பு மற்றும் இருதரப்பு நன்கொடையாளர்களிடமிருந்தும் ஆதரவினையும் கோரியிருந்தது. ஆரம்பத்தில் சர்வதேச நன்கொடையாளர்களும் அபிவிருத்தி நிறுவனங்களும் தயக்கம் காட்டியிருந்த போதிலும் 2008இன் நடுப்பகுதியில் ஜனநாயகரீதியான தேர்தல் மூலம் கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதனையடுத்து பல உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நன்கொடையாளர்கள் ஒப்புதல் வழங்கினர். எனினும் இதன்போது பெறப்பட்ட வெளிநாட்டு மனிதாபிமான அபிவிருத்தி உதவிகளின் தொகையினை சரியாக கணிப்பிட்டு கூறுவது கடினமாயினும் 2007ஆம் ஆண்டு முதல் 1000 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் கடன் மற்றும் மானியம் என்ற அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. அதேவேளை உலக வங்கி 2008 ஜூன் மாதத்தில் 2009-2011 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 900 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவித் திட்டத்தினையும் அறிவித்தது. இத்தொகையில் சுமார் 300 மில்லியன் டொலர் வடக்கு கிழக்கின் அபிவிருத்திற்கு ஒதுக்கப்பட்டது (International Crisis Group – ICG, 2009).

மேற்குறிப்பிட்ட திட்டங்களின் ஊடாக கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் வேறுபட்ட வரையறைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. இதன்படி வீடமைப்பு, கிராமிய உட்கட்டமைப்பு, வாழ்வாதார உதவிகள், வீதி நிர்மாணம், நீர்ப்பாசனத்துறை வளர்ச்சி, விவசாய விருத்தி என்றவகையிலேயே இவ் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வேலைத்திட்டத்தினையும் கிழக்கில் ஆரம்பித்தது. இத்திட்டத்தின் மூலம் கிழக்கின் வீதி புனர்நிர்மாணம், மின்சக்தியினை வலுவுள்ளதாக்குதல், குடிநீர் மற்றும் கழிவகற்றல் வசதிகளை மேம்படுத்தல், சிறியளவிலான கட்டுமானத் திட்டங்களை முன்னெடுத்தல் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு நிறுவனப் பிரிவுகளும் கிழக்கில் அதிகளவிலான ‘ஆரம்ப மீளமைப்பு’ பணிகளில் பங்கெடுத்தன.

நீண்டகாலமாக இலங்கைக்கு சர்வதேச உதவிகளை வழங்கிவரும் யப்பான் கிழக்கின் அபிவிருத்திக்காக ஆரம்பகட்டமாக 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியது. பின்னர் இத்தொகையினைவிட அதிகமான நிதியுதவிகளையும் வழங்கியது. இவ்வுதவிகள் கடனாகவும் மானிய அடிப்படையிலும் வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுதவித் திட்டத்தினுள் கிராமிய வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன முறையினை கட்டியெழுப்புதல், சிறு கடன், விவசாயிகளுக்கும் சமூக மட்டத்திலான வர்த்தகர்களுக்குமான ஜீவனோபாய உதவி, கண்ணிவெடி அகற்றுதல் மற்றும்

ஏனைய மனிதாபிமான உதவிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இரு தரப்பு உதவித் திட்டத்தின் அடிப்படையில் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பன யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில், குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மீளக்கட்டியெழுப்புதல், வாழ்வாதாரத்திற்கான ஏனைய புனர்நிர்மாண உதவிகள் போன்றவற்றினை கிழக்கு மக்களுக்கு தொடர்ச்சியாக வழங்கி வருகின்றனர். அதேவேளை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID) மிக முக்கியமான செயற்திட்டம் என்ற அடிப்படையில் அரச சார்பற்ற மற்றும் தனியாள் துறையினூடாக கிழக்கில் அபிவிருத்தியினை ஏற்டுத்த கடும் பிரயத்தனம் எடுத்து வருகிறது. இந் நிறுவனத்தின் பொருளாதார மற்றும் சமூக பரிமாற்ற (Ecconamic and Social Transition (EASI)) தந்திரோபாயத்தின் மூலமாக பிராந்திய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்தல், உள்ளூர் ஆட்சி முறையினை வலுவூட்டல், குடிமக்களின் குடியேற்றங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து அதனூடாக கிழக்கு மாகாணத்தை உறுதியான அபிவிருத்தியினை நோக்கி நகர்த்த முயற்சிக்கின்றது.

எனினும் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் கோட்பாட்டின் அடிப்படையில் உள்நாட்டு மோதல் ஒன்று முடிவடைந்து அல்லது நிறுத்தப்பட்ட உடனேயே முதலில் முன்னாள் போராளிகளை விடுவித்து அவர்களிடம் காணப்படும் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இந்நிலையில் இலங்கை அரசாங்கம் கிழக்கில் ஆயுதக் களைவினை மேற்கொண்டு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தப் போவதாகக் கூறி சிறந்த திட்டம் ஒன்றினைத் தயாரித்தது. இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக USAID இன் நிதியுதவி பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் International Labour Oranization (ILO), International Organization for Migration (IOM) போன்றவற்றின் உதவிகளும் பெறப்பட்டன.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னாள் போராளிகளுக்கு (தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள்) தொழிற்பயிற்சியினை வழங்குதல், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு உள்ளடங்கலான ஜீவனோபாய வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. இது விடயத்தில் முன்னாள் போராளிகளுக்கு அரச படைகளில் இணைவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன. எனினும் இந் நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் ஆயுதக்களைவு, போராளிகளை விடுவித்தல், அவர்களை மீள் ஒருங்கிணைத்தல் (DDR) எனும் விடயத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல நெருக்கடிகள் காணப்பட்டன. குறிப்பாக இத்திட்டத்தினை வகுப்பதில் பங்காற்றிய அதிகாரிகள், திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டினர் (ICG, 2009). யுத்தம் முடிவுற்ற நிலையில் ஆயுதக் களைவினை ஆரம்பிக்க முடியும் என்றிருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு கிடைத்தாலே அதனை மேற்கொள்ள முடியும் எனக்கூறி அதிகாரிகள் கைநழுவினர். இதன் மூலம் கிழக்கின் ஆயுதக் களைவு விடயத்தில் சர்வதேச செயற்பாட்டாளர்கள் பெரும் ஏமாற்றத்தினை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

அதேவேளை முழு அளவிலான DDR நிகழ்ச்சித்திட்டமானது கிழக்கில் பாதுகாப்பற்ற சூழலை குறைப்பதற்கு உதவும் என்பதுடன் பிராந்திய அபிவிருத்திக்கான நீண்டகால செயற்திட்டமாகவும் அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இச் செயற்திட்டத்தினை அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த ஆயுதக்களைவின் ஊடாகவே சாத்தியப்படுத்த முடியும் என்றிருந்தது. ஆயினும் கிழக்கில் யுத்தத்திற்கு பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற குழுக்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் ஆயுதங்களைப் பயன்படுத்திவந்தனர். இருப்பினும் 2009 மார்ச் மாதம் 07ஆம் திகதி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்

களில் சிலவற்றை இலங்கை இராணுவத் திடம் ஒப்படைத்தனர். இதன் போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் கருணா மற்றும் பிள்ளையான் அணிகள் குறிப்பிட்ட ஆயுதங்களை தம்வசம் வைத்துக் கொண்டுள்ளதாக பல குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன. அதேவேளை இக் குழுக்கள் சிறுவர் போராளிகளை தமது அமைப்பில் இணைத்துச் செயற்பட்டதுடன் குறிப்பிட்ட ஒரு தொகையினை சர்வதேச நிறுவனங்களின் அனுசரணையுடன் ஒப்ப டைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் சட்டரீதியற்ற சில செயற்பாடுகளில் இவ்வமைப்புக்கள் தொடர்ந்து ஈடுபடுவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கிழக்கில் DDR நிகழ்ச்சி திட்டம் வெற்றி கரமாக செயற்படுத்தப்படவில்லை என்ப தனையே காட்டுகின்றது (ICG, 2009).

சமாதானத்தினை கட்டியெழுப்புதல் செயன் முறையின் மற்றுமொரு முக்கியமான விடய மாக யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி, அவர்களின் உடனடி நீண்ட கால தேவைகளை கவனத்திற் கொண்டு அரசும், சர்வதேச செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகமும் இணைந்த நிகழ்ச்சி திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்படி கிழக்கில் 200,000 இற்கு மேற்பட்ட மக்கள் இறுதி யுத்த காலத்தில் (2006ம் ஆண்டிலும் 2007 இன் ஆரம்பத்திலும்) இடம்பெயர்ந் திருந்தனர். அரசாங்கம் இம் மக்களை மீளக்குடியமர்த்த சர்வதேச செயற்பாட்டாளர் களின் உதவியுடன் ஒரு திட்டத்தினை வகுத்ததுடன் அதற்குரிய அதிகாரிகளையும் நியமித்து குறித்த திட்டத்தினை நடை முறைப்படுத்தியது. அதன்பயனாக இடம் பெயர்ந்து வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். எனினும் அவர்களுள் பெரும்பாலானோர் அடிப்படை வசதிகள் அற்ற தற்காலிக கொட்டகை களில் கடந்த 06-07 வருடங்களாக பல துன்பங்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் வேறு சில பிரதேசங்களில் குறிப் பாக திருகோணமலையின் சம்பூர் பிரதேச மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் (Higher Security Zone) என்ற அடிப்படையில் தமது சொந்த இடங்களுக்கு அனுமதிக்கப்பட வில்லை. பின்னர் இப் பிரதேசத்தினை அரசாங்கம் விசேட பொருளாதார வலயமாக அறிவிப்புச் செய்து இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பாரிய சக்திவள நிலையம் ஒன் றினை அமைப்பதற்கும் உத்தேசித்துள்ளது (TransCurrent, 2008). இதன்காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் வாழும் சம்பூர் மக்கள் தமது வாழ்விடங்களை இழக்க வேண்டிய நிர்க்கதியான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். எனினும் தமது சொந்த வாழ் விடங்களைப் மீளப் பெற்றுக்கொள்வதற்கான அம்மக்களின் தொடர்ச்சியான போராட்டம் எதிர்காலத்தில் வெற்றியளித்தாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

## நெருக்கடிகள்

முன்னைய பகுதியில் ஆராயப்பட்டது போன்று சர்வதேச செயற்பாட்டாளர்களின் சுதந்திரமான இயக்கம் மட்டுப்படுத்தபட்டமை, அதிகரித்த அரச தலையீடு, வன்முறை, இலஞ்சம், ஊழல், பாராபட்சம் போன்ற வற்றின் காரணமாக கிடைக்கப்பெற்ற முழு உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்களை அல்லது பிரதேசங்களை உரிய முறையில் சென்றடையவில்லை. மேலும் வடக்கில் 2009இல் யுத்தம் முடிவடைந்ததும் அங்கு பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதனால் பல சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங் களும் சர்வதேச நாடுகளும் கிழக்கை விட்டுவிட்டு வடக்குக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. இது கிழக்கின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியில் பாரிய வெற்றிடத்தினை ஏற்படுத்தியது (ICG, 2011). இதனால் யுத்தத்திலிருந்து மீண்டெழுந்த கிழக்கு மக்கள் தமது இருப்பிடம், வாழ்வா தாரம், கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற தேவைகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப் படாத நிலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

நில மறுசீரமைப்பு, நில அதிகாரத்தினை பகிர்ந்தளித்தல், மக்களுக்கான வாழ்விடங்கள்

மற்றும் வீதிகளை கட்டமைத்தல்,நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குதல் என்பனவும் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன் முறையின் அடுத்த முக்கிய அம்சமாகும். இச்செயன்முறையிலும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கமுடியும். எனினும் கிழக்கின் நிலம் சம்பந்தப்பட்ட கொள்கை விடயத்தில் சர்வ தேச செயற்பாட்டாளர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்ததாக அறியமுடியவில்லை. மறுபுறத்தில் அரசாங்கம் நிலம்சார் விடயத்தில் தமது முழுக்கட்டுப்பாட்டினை செலுத்திவந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான கிழக்கின் சமாதானக் கட்டுமானச் செயன்முறையில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதொரு நெருக்கடி கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் தொடர்பானதாகும். விசேடமாக மாகாண சபைகளுக்கான காணி அதிகாரம் தொடர்பில் கிழக்கு மாகாண சபை பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அதாவது இந்தியத் தலையீட்டினால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின்படி காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கு பிரித்து வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் தனது மத்திய அதிகாரத்தின் கீழ் காணி விவகாரத்தினை கையகப் படுத்தியுள்ளது. இதனால் எந்தவொரு அரச காணி தொடர்பான விடயத்திலும் மத்தியரசு அல்லது ஜனாதிபதி நேரடியாகத் தலையீடு செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை சிங்களக் குடியேற்றங்களுக்கும் தொடர்ச்சியான இராணுமயமாக்கத்திற்கும் அதிக வாய்ப்பாக அமைவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

வீதிகளைப் பொறுத்தவரையில் உலகவங்கி மற்றும் இன்னும் பல சர்வதேச செயற்பாட்டாளர்களின் உதவியுடன் கிழக்கில் A,B தரத்திலான பிரதான வீதிகள் பெரும்பாலும் கார்பற் வீதிகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளதுடன் மகாண சபை அதிகாரத்தின் கீழ் வரும் ஏனைய வீதிகளும் சிறப்பாக செப்பனிடப்பட்டுவருகின்றன. கிழக்கில் பல பகுதிகள் இவ்வாறு சிறந்த வீதி வசதிகளால் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதொரு அம்சமாகும். அதேவேளை கிழக்கை சூழவுள்ள ஏனைய மாகாணங்களான ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுடன் கிழக்கினை இணைக்க கூடிய சிறந்த வீதி வலைப்பின்னல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன (Eastern Provincial Council ï EPC, 2014).

மேலும் சர்வதேச செயற்பாட்டாளர்களின் நிதி உதவியால் இதுவரை மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் சவாலாக விருந்த பல பாலங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கிழக்கு மாகாணத்து மக்கள் யுத்தத்திற்கு பின்னர் தமது தேவைகளின் நிமித்தம் தலைநகர் மற்றும் ஏனைய நகர்களுக்கு தங்குதடையின்றி பிரயாணம் செய்வதற்கான சூழ்நிலை இதன் மூலம் உருவாகியுள்ளது. அதேவேளை உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தி வர்த்தகத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கும் இது பெரும் உதவியாக அமைந்துள்ளது. கிழக்கில் அபிவிருத்திசெய்யப்பட்ட பாலங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக சவூதி அரேபிய நிதியுதவியுடன் (Central Bank of Sri Lanka Annual Report, 2009) இலங்கையின் மிகப்பெரிய பாலங்களில் ஒன்றாக அமைக்கப்பட்ட கிண்ணியா பாலத்தினைக் குறிப்பிட முடியும்.

ஆனாலும் இவ்வீதி மற்றும் பாலங்களின் அபிவிருத்தி காரணமாக சிங்கள பெரும்பான்மை சமூகத்தவர்கள் மிகக் கச்சிதமான முறையில் வீதியோரங்களில் குடியேற்றப் பட்டு வருவதாகவும் வீதி நிர்மாண வேலைகளில் பிரதேச மக்களின் பங்களிப்பு குறைந்தளவில் இருப்பதாகவும் வேறு பிரதேசத்தவர்களே வீதி நிர்மாண பணிகளில் பயன் பெறுவதாகவும் பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அதேவேளை சர்வதேச உதவிகளுடன் மேற்கொள்ளப்பட்ட வாழைச்சேனை பிள்ளையடி துறைமுகத்தின் புனர்நிர்மாணம் பல்லாயிரக்கணக்கான கூலித் தொழிலாளர்களின்

ஜீவானோபாய தொழிலை இலகுபடுத்தியிருந்தது. Danis நிறுவனத்தினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகம் இதுவரை பயன்பாட்டிற்கு வராத ஒரு அபிவிருத்தி திட்டமாக உள்ள போதிலும் ஒலுவில் மீன்பிடி துறைமுகம் மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அனைத்து துறைசார் தொழிலாளர்களும் பயன்பெற்று வருகின்றனர். மறுபுறும் காலப்போக்கில் இந்த துறைமுகத்தின் செயற்பாடு மேலும் விஸ்தரிக்கப்படும் போது சிங்கள குடியேற்றம் முஸ்லீம்கள் வாழும் இப்பிரதேசத்தில் இடம்பெறக்கூடும் என இப்பிரதேச மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். அதேவேளை சூழலியல் தாக்கங்கள் பலவற்றையும் இத்துறைமுக நிர்மாணம் ஒலுவில் பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ளதுடன் இப்பிரதேச மக்களின் மரபுரீதியிலான மீன்பிடி தொழிலிலும் அது பாதிப்புச் செலுத்தியுள்ளது.

வீடமைப்பினை எடுத்து நோக்கும் போது யுத்தத்துக்கு பின்னரான கிழக்கில் அது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. வடக்கில் அதிக அக்கறையுடன் UN-Habitat மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்கள் துரிதமாகவும் அதிகளவான நிதியினையும் செலவு செய்து பல வீட்டுத்தொகுதிகளை அமைத்துள்ள போதிலும் கிழக்கில் வீட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக இந்தியாவின் பல்லாயிரக்கணக்கான வீடுகளை அமைப்பதற்கான திட்டத்திலும் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் பல்வேறு கோரிக்கைகளின் பின்னர் அண்மையில் கிழக்கும் அவ்வீடமைப்புத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் உலகவங்கியினால் ஐரோப்பிய யூனியன் நிதியின் மூலம் கிழக்கில் பல வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு யப்பான், பிரான்ஸ் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. எனினும் துரதிஷ்ட வசமாக யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேற்றப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் வீட்டு வசதிகள் இல்லாது துன்புறுகின்ற நிலை உள்ளது. அதே போன்று சர்வதேச நிதியுதவியுடன் கட்டப் பட்ட வீட்டுத்திட்டங்கள் பல உரியவர்களுக்கு வழங்கப்பட முடியாதவாறு இனரீதியான பாகுபாடு செல்வாக்குச் செலுத்துவதனையும் இம் மாகாணத்தில் அவதானிக்க முடிகின்றது (நுரைச்சோலை வீட்டுத் திட்டம்).

சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் இம் மாகாணத்தின் நீர்பாசன வசதிகள் விஸ்தரிக்கப்பட்டு விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்ற சூழ்நிலையொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதேவேளை மின்சார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், புதிய கைத்தொழில் நிலையங்களின் உருவாக்கம் என்பனவும் யுத்தத்திற்குப் பின்னரான கிழக்கில் இடம்பெற்றுள்ளன. எனினும் குடிநீர், மின்சாரம், வீதி வசதிகள் இல்லாத பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் கிராமப் பிரதேசங்களும் கிழக்கில் இன்னும் இருந்து வருகின்றன.

அதேவேளை மத்திய, மாகாண அரசுகளின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக கிழக்கில் குறிப்பிட்ட சில அபிவிருத்திகள் நடந்தேறியுள்ளன. இதன்படி மீன்பிடி துறைமுகம் தவிர்ந்த சந்தை வசதிகள், களஞ்சிய சாலைகள், பல்வேறு கட்டடங்கள், மீன் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் குளிர்சாதன வசதிகள் போன்றவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன (Sutharsan, 2013). இதன் மூலம் அன்றாட வர்த்தகம் உயர்ந்த நிலையில் அமைந்துள்ள போதிலும் வெளிப்பிரதேசங்களைச் சேர்ந்த அதிகளவான சிங்கள வர்த்தகர்களின் வருகையால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக இம்மாகாண மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மேற்காசிய மற்றும் மத்தியகிழக்கு நாடுகளும் யுத்தத்தின் பின்னரான கிழக்கின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளன. விசேடமாக கிழக்கில்

காணப்படும் இரண்டு பல்கலைகழகங்கள், கல்விக் கல்லூரிகள், தொழிநுட்ப கல்லூரிகள், பாடசாலைகள் என்பவற்றின் நிலையான தொழிற்பாட்டிற்கு பல பில்லியன் நிதி உதவி வழங்கப்பட்டதுடன் தொழிநுட்ப உதவிகள், புலமையாளர்களுக்கான உதவிகள், மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற நிகழ்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன (Sutharsan, 2013). இதன் மூலம் கிழக்கின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை கிழக்கின் வர்த்தக வசதிகளை அதிகரிக்க உலக நாடுகள் பல ஆதரவுக் கரம் நீட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

மேற்குறிப்பிட்டவாறு கிழக்கின் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் சர்வதேச செயற்பாட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து பல அபிவிருத்திகளை மேற்கொள்வதில் பங்களிப்பு செய்து வருகின்றனர். அதேவேளை குறித்த சர்வதேச செயற்பாட்டாளர்களுள் பலர் வடக்கின் அபிவிருத்தி தேவை கருதி கிழக்கினை கைவிட்டுச் சென்றுள்ள நிலையும் உருவாகியுள்ளது. மேலும் சில நன்கு ஒழுங்குபடுத்தப்படாத அபிவிருத்தி திட்டங்கள், அரசின் ஒத்துழைப்பு கிடைக்காத திட்டங்கள் போன்றவற்றின் காரணமாக யுத்தத்தின் பின்னர் ஒரு நிலையான அபிவிருத்தியினை நோக்கிய கிழக்கின் பயணம் தடைப்பட்டுள்ளது.

## References

Call, C.T. (2004). *The Problem of Peacebuilding: How UN Thinking Has Evolved in Recent Years, draft paper prepared for DPA, 27.*

____ & Cousens, E.M. (2008). *Ending Wars and Building Peace:International Responses to War-TornSocieties. International Studies Perspectives. 9, 1–21.*

Call, C.T., & Cook, E.C. (2003). Introduction: Post Conflict Pecae Building and Democratization. *Global governance 9*. EBSCO Publishers. 135-139.

Central Bank of Sri Lanka. (2009). *Annual Report*.

Eastern Provincial Council (EPC). (2012). *Eastern Development Plan 2012 – 2016*.

Eastern Revival. (2007). *Three Years Master Plan - Government of Sri Lanka*. Retrieved from www.neweast.lk.

Ghali, B.B. (1994). An Agenda for Development, *Report of the Secretary General*, A/48/935, New York, United Nations.

Keating, T.F. & Andy, W.A.K. (Eds.). (2004). *Building Sustainable Peace.* Tokyo: United Nations University Press.

Meernik, J., & Mason, T. (2006). Conclusion. In J. Meernik & T. Mason (Eds.), *Conflict Prevention and Peace-building in Post-War Societies: Sustaining the Peace*. Routledge.

Ministry of Foreign Affairs (MOFA). (2013). *The post-independence foreign policy of Sri Lanka could be divided into a number of phases*.

Sutharsan, S. (2013). *Post – War Socio Economic Development in the Eastern Province of Sri Lanka (Batticaloa & Trincomalee districts)*.

TransCurrent (2008). *Coastal areas from Nayaaru to Nilaweli to be declared a security - economic zone.*

UNSC ï Ban-ki-Moon (2011) *Post-conflict peacebuilding: institution-building Security Council open debate: Bosnia and Herzegovina*. concept paper S/2011/16.

# தென்னாசிய அரசியலில் இராணுவமயமாக்கம் பாகிஸ்தானின் அனுபவங்கள்

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# MILITARIZATION IN POLITICS OF SOUTH ASIA: EXPERIENCES OF PAKISTAN

*எம்.ஏ.எம்.பௌசர்*

## ஆய்வுச் சுருக்கம்

*அரசுகளின் அரசியல் சுதந்திரத்தினைப் பாதுகாத்து, அவ்வரசின் தொடர்ச்சியான இருப்புக்குப் பங்காற்றும் ஒரு அரசின் அடிப்படை நிறுவனமே இராணுவம் அல்லது ஆயுதப் படைகள். அரசின் சட்டத் தன்மையினையும் மக்களின் ஜனநாயக விருப்பங்களையும் பாதுகாப்பதற்கு அவை கடமைப்பட்டுள்ளன. இப்படைகள் ஒரு அரசின் ஜனநாயகத் தொழிற்பாட்டிற்கு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வரும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் ஒரு நிறுவனமாகும். இத்தத்துவம் தென்னாசிய அரசுகளில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம். இந்தியாவினைப் பொறுத்தவரையில் ஆயுதப் படைகளானது இந்திய ஜனநாயக அரசாங்கத்தின் ஒரு நிறுவனமாகப் பார்க்கப்படுகின்றது. பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் பாகிஸ்தானிய கருத்தியலின் (இரு தேசக் கோட்பாடு) பாதுகாவலனாக, அதன் தோற்றத்தினை வெளிப்படுத்தும் அங்கமாக ஆயுதப்படைகள் நோக்கப்படுகின்றன. இலங்கை இந்திய மாதிரியிலான பாணியினையே ஆயுதப்படைகள் விடயத்தில் பின்பற்றுகின்றது. வங்காளதேசினைப் பொறுத்தவரையில் தென்னாசியாவில் மிகவும் பிந்திய சுதந்திர அரசு என்ற ரீதியில் அதனது இருத்தலுக்கான ஒரு பாதுகாப்பு நிறுவனமாக ஆயுதப் படைகள் நோக்கப்படுகின்றன. நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்படும் வரை மன்னரின் அதிகாரத்தினைப் பாதுகாப்பதற்கான இயந்திரமாக அது பார்க்கப்பட்டு வந்தது. இவ்விதம் ஆட்சிச் செயற்பாட்டில் இராணுவத்தின் பங்கு குறித்து தென்னாசியாவின் பல்வேறு அரசுகளும் பல்வேறு மாதிரிகளினை உலகுக்கு வழங்குகின்றன. இதன்படி தென்னாசிய அரசியலின் மிகப் பிரதான இரு பண்புகள் ஜனநாயகத்தின் வீழ்ச்சியும் அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கும் ஆகும். விசேடமாக தென்னாசியாவின் இரு முக்கிய அரசுகளான பாகிஸ்தானினதும் வங்காளதேசத்தினதும் அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியது. இப்பின்புலத்தின் கீழ் பாகிஸ்தானிய அரசியலில் இராணுவம் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## அறிமுகம்

1947இல் சுதந்திரம்பெற்ற பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு 1971இல் வங்காளதேஷ் சுதந்திரமடையும் வரை மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என இரு பகுதிகளைக் கொண்டிருந்தது. பஞ்சாபியர்கள், சிந்து, பத்தான், பலூச், முஹாஜிர் ஆகிய பல இனங்கள் இங்கு வாழ்கின்றன. இந்நாட்டின் பெரும்பான்மையோர் பின்பற்றும் மதம் இஸ்லாம் (90%) ஆகும். இவர்களுள் சுன்னி, ஷியா என்ற இரு பிரிவுகள் காணப்படுகின்றன. சிறு அளவிலான கிறிஸ்தவர்களும் இந்துக்களும் இங்கு வாழ்கின்றனர். மொழி ரீதியாக பஞ்சாப், உறுது ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. எனினும் இந்நாட்டின் உத்தியோகபூர்வ மொழி உறுது ஆகும்.

அரசியலமைப்பு ரீதியாக மூன்று குடியரசு யாப்புக்கள் பாகிஸ்தானில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி முதலாவது அரசியலமைப்பு பாகிஸ்தானை இஸ்லாமியக் குடியரசாக அறிமுகம் செய்ததுடன் 300 பேர் கொண்ட தேசியப் பாராளுமன்றம் ஒன்றையும் உருவாக்கியது. அதேவேளை பிரதமரும் அமைச்சர்களும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களாக மாற்றப்பட்டனர். எனினும் 1958இல் ஐயூப் கான் மேற்கொண்ட

இராணுவ சதிப் புரட்சியினால் அரசியலமைப்புச் செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டன. இருப்பினும் 1962இல் புதியதொரு அரசியலமைப்பினை அவர் அறிமுகம் செய்தார். இவ்வரசியல் அமைப்பு ஜனாதிபதி நிருவாக முறையினை அறிமுகம் செய்ததுடன் பிரதமர் பதவியினையும் இல்லாமற் செய்தது.

ஐயூப்கானின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஐயூப்கான் தனது பதவியினை இராஜினாமாச் செய்வதற்கு வழிவிட்டது. இவ் இராஜினாமாவினை அடுத்து ஜஹ்யாகான் அதிகாரத்திற்கு வந்ததுடன் 1962இல் அரசியல் திட்டத்தினையும் தடைசெய்தார். இதன் மூலம் பாகிஸ்தான் ஜனநாயகத்திற்கு பாதகம் ஏற்படுத்தப்பட்டதுடன் அவரது ஆட்சிக்கு எதிரான உள்நாட்டுக் கலகங்களும் சடுதியாக அதிகரித்தது. இதனால் அவர் 1971இல் தனது பதவியினை இராஜினாமாச் செய்தார்.

இதனையடுத்து 1970 தேர்தலில் வெற்றி பெற்றிருந்த சுல்பிகார் அலி பூட்டோ 1971இல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் வரை பூட்டோ இராணுவத்தின் உதவியுடன் ஆட்சி நடத்தினார். பின்னர் இராணுவச் சட்டத்தினை நீக்கி 1973இல் புதிய அரசியல் திட்டமொன்றினையும் அறிமுகம் செய்தார். இதன்பிற்பாடு குறிப்பிட்ட காலம் வரை ஜனநாயக மாதிரிலான ஆட்சியினைக் கொண்டு நடத்திய பாகிஸ்தான் மீண்டும் பர்வேஸ் முஸர்ரபின் காலத்தில் இராணுவ ஆட்சிக்குள் சிக்குண்டது. பின்னர் முஸர்ரபின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஜனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளது. இவ்விதம் பாகிஸ்தானின் அரசியலில் இராணுவத்தின் ஈடுபாடு தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வந்துள்ளது.

## இராணுவ ஆட்சி: பொருள் விளக்கம்

பொதுவாக இராவணுத்தினரால் மேற்கொள்ளப்படும் ஆட்சி இராணுவ ஆட்சி எனப்படும். விரிவாகக் கூறுவதாயின் ῝இராணுவ அதிகாரிகளினால் அல்லது ஓர் இராணுவக் குழுவினால் இராணுவச் சதிப்புரட்சியின் மூலம் இராவணுத்தின் ஆதரவுடன் அரசின் அதிகாரத்தைப் பொறுப்பற்ற தன்மையுடன் நடாத்தும் முறைῼ இராணுவ ஆட்சி முறை எனலாம். இதனால் இராணுவ ஆட்சியில் சகலவிதமான செயற்பாடுகளிலும் இராணுவம் முதன்மை பெற்றுக் காணப்படுவதுடன் அவர்களது சட்டத்தின் மையின் ῾மூலம்ῼ என்பது இராணுவத்தினரது ῾பலத்தின்ῼ கொள்ளளவினைக் கொண்டே தீர்மானிக்கப்படும். இவ்விதமான இராணுவ ஆட்சியின் கீழ் அரசியல் திட்டம் என்பது வெற்றுத்தாளாகவே மதிக்கப்படுகின்றது (Bahader, 1984).

இங்கு இராணுவ ஆட்சியாளர்கள் சட்டத்தினைக் கையில் எடுத்திருப்பதுடன் அவர்களே சட்டத்தினைத் தீர்மானிப்பவர்களாகவும் இருப்பர். அவ்வாறே முழுமையான ஜனநாயகச் செயற்பாடுகளையும் இராணுவ ஆட்சியின் கீழ் எதிர்பார்க்க முடியாது. எனினும் இராணுவ ஆட்சியாளர்கள் தாம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் என்பதை வெளிக்காட்டுவதற்கு தேர்தல்களை நடாத்துவது வழக்கம். இது விடயத்தில் தென்னாசியா சிறந்த அனுபவத்தினை எமக்குத் தருகின்றது.

இராணுவ ஆட்சி இராணுவத்தினரைக் கொண்ட ஆட்சி முறையாயினும் அது தனித்து இராணுவ வீரர்களைக் கொண்ட ஆட்சி முறையாக மட்டும் காணப்படாமல் சிவில் சேவையாளர்கள், முகாமையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோரை இராணுவம் தமக்குச் சாதமாகக் கொண்டதாக உள்ளது. எனினும் இச்சூழலில் இறுதித் தீர்மானம் எடுக்கும் விடயத்தில் இராணுவமே முதன்மை பெறுகின்றது (Panandiker, 2000).

சமகாலத்தில் உலக மட்டத்தில் இராணுவத்தினரின் செல்வாக்கு அரசியலில் அதிகரித்திருப்பதற்கு அல்லது இராணுவ ஆட்சி இடம்பெறுவதற்கு இராணுவத்தினருக்குச் சாதகமாகப் பல சூழ்நிலைகள் இருப்பதே காரணமாகும். அதிகரித்துள்ள உலகமயமாக்கம், தொடர்பாடலின் துரித வளர்ச்சி, தொழில்நுட்பத்தின் பரவல், மலிவான

செய்ய முடிதல், ஆயுதப் போட்டி, உள் நாட்டு முரண்பாடு, பயங்கரவாதம், அரசுகள் இராணுவத்தினரை பலப்படுத்த எடுக்கும் முயற்சிகள், மக்கள் மத்தியில் இராணுவத் தினருக்கு இருக்கும் மதிப்பு, இராணுவத் தினரின் இறுக்கமான கட்டுப்பாட்டு அமைப்பு என்பன இராணுவத்தினர் அரசியலில் நேரடி யாகத் தலையிடுவதற்கான வழியினைத் திறந்துவிட்டுள்ளது.

## பாகிஸ்தானில் இராணுவமயமாக்கம்

அடிக்கடி இராணுவத் தலையீட்டுக்கு உட்படும் பாகிஸ்தான் குறை விருத்தி நாடு களுள் ஒன்றாகும். அதனது சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலான அரசியல் வாழ்க் கையில் அரைவாசிப் பகுதி இராணுவத் தினரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்துள்ளது அல்லது அரசியலில் இராணுவத்தினரின் ஆதிக்கம் இடம்பெற்றுள்ளது. இதுவரை காலமும் நான்கு தடவைகள் (1958,1969, 1977,2000) இராணுவச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்திக் கொண்டு இராணுவம் அரசியலில் தலையிட்டுள்ளது.

இந்நாட்டின் அரசியலில் இராணுவம் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பு 1953இல் இடம்பெற்ற இந்து ï முஸ்லிம் கலவரத்தினைத் தொடர்ந்தே ஏற்பட்டது. அதாவது இக்கலவரத்தினைத் தொடர்ந்து இயற்றப்பட்ட இராணுவச் சட்டம் மற்றும் அதன் நீடிப்பு என்பன பின்நாட்களில் இராணுவத்தின் நேரடியான செல்வாக்கு அரசியலில் ஏற்பட வழிவகுத்தது (சிவராஜா, 2001). இந்தவகையில் பாகிஸ்தானிய அரசியலில் இராணுவம் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை பாகிஸ்தானின் அரசியலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களுக்கு ஏற்ப பின்வருமாறு பல்வேறு கால கட்டங் களாகப் பிரித்து நோக்கலாம்.

### கட்டம் - 1 : 1947 – 1956

இக் கட்டம் பாகிஸ்தான் சுதந்திரமடைந்த ஆரம்ப காலகட்டமாகும். இக்கால கட்டத்தில் (1953 இல் ஏற்பட்ட) இந்து ï முஸ்லிம் கலவரத்தினை அடக்குவதற்கு லாஹூரில் இராணுவச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. இது சுதந்திர பாகிஸ்தானில் இயற்றப்பட்ட முதலாவது இராணுவச் சட்டம் - Martial Law ஆகும். இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து ஜெனரல் முஹம்மட் அசாம் கான் அதனை கால வரையறையின்றி நீடித்தார். முழு அளவிலான சமூக அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு அவ்விதம் மேற்கொள்ளப் படுவதாக அதற்குக் காரணம் கூறப்பட்டது. எனினும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டு 45 நாட்களுக்குள் ஆளுநர் நாயகம் குலாம் முஹம்மதினால் பிரதமர் நஜிமுடீன் நீக்கப்பட்டார். இதன் பின்னர் ஆளுநர் முஹம்மது அலி என்பவரை பிரதமராக நியமித்ததுடன் சர்வாதிகார ஆட்சியையும் தந்திரமாக அமைத்துக் கொண்டார். இவ்விதம் செயற்பட்டமையானது முன் ஒருபோதும் இல்லாத அளவு இராணுவத்தின் ஆதரவுடன் பணிக்குழு ஒன்று அரசியல் அதிகாரத்தை அடையக் காரணமாகியது (Panandiker, 2000).

இராணுவத்தின் ஆதரவுடன் பணிக்குழு ஆட்சி இடம்பெற்றதற்கான பிரதான காரணம் இராணுவத் தளபதி ஐயூப் கான், ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா ஆகியோர் அமைச்சர வையில் புகுத்தப்பட்டமையே ஆகும். இதனால் பாகிஸ்தான் உதயமாகிய ஆரம்ப ஆண்டுகளிலே அது இராணுவத்தின் தலையீட்டினை அரசியலில் எதிர்நோக்க ஆரம்பித்தது. இவ்விதமான தலையீட்டு அனுபவம் பின்நாட்களில் முழு அளவிலான இராணு ஆட்சி இந்நாட்டில் நிலைபெறக் காரணமாகியது.

முஹம்மது அலி ஜின்னாவின் இழப்பு மற்றும் பிரதமர் லியாகத் அலி கானின் படுகொலை என்பன பாகிஸ்தானில் வசீகரத் தலைமைத் துவம் இல்லாத நிலையை ஏற்படுத்தியது. அதேவேளை 1954 தேர்தலில் பாகிஸ்தானின் முக்கிய கட்சியான முஸ்லிம் லீக் அடிமட்ட மக்களின் ஆதரவினை இழந்ததுடன் ஒரு அரசியலமைப்புக்கு உட்படாத ஆட்சியே பாகிஸ்தானில் தொடர்ந்தும் நீடித்தது. அதாவது 1947இல் பாகிஸ்தான் சுதந்திர மடைந்த போதிலும் அந்நாடு 1956 வரை அரசியல் திட்டத்திற்குட்பட்ட ஒரு ஆட்சி யினை நிறுவியிருக்கவில்லை. அதாவது 1956 வரை அந்நாடு ஒரு அரசியல் திட்டத்தினைக் கொண்டிருக்க வில்லை (சிவராஜா, 2001).

அரசியலமைப்பில்லாத வெற்றிடம் இராணுவம் இலகுவான முறையில் தனது ஆதிக்கத்தினை நிலைநாட்ட பெருமளவு பங்களிப்புச் செய்தது.

## கட்டம் - 2 : 1956 – 1958

பாகிஸ்தானின் அரசியல் வரலாற்றில் வெளிப்படையான இராணு ஆட்சி நிறுவப்பட்ட முதலாவது கால கட்டம் இக்கால கட்டமாகும். இக்காலத்தில் 1955இல் கவர்ணராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஜெனரல் இஸ்கந்தர் அலி மிர்சா புதிய அரசியல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதுடன் அதன் மூலம் அவர் குடியரசின் ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்படி பாகிஸ்தானிய அரசின் முதலாவது இராணுவ ஆட்சித் தலைவராக மிர்சா விளங்குகின்றார். இவர் தனது ஆட்சியின் போது ஒரு புதிய அரசியல் திட்டத்தினை வகுப்பதற்கான தலைமைத்துவத்தினை வழங்கியதோடு பிரதமரின் நியமனம் தொடர்பான அரசியல் திட்ட அசம்பிளியின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டார் (சிவராஜா, 2001).

மிர்சா தனது ஆளுகையின் ஆரம்ப நாட்களில் ஜனநாயகச் செயன்முறைக்கு வாக்குறியளித்திருந்த போதிலும் அவரால் வாக்குறுதியளிக்கப்பட்ட செயன்முறைகள் விரைவாகக் கைவிடப்பட்டன. அதேவேளை 1958இல் இவர் இராணுவச் சட்டத்தினைப் பாகிஸ்தானில் பிரகடனப்படுத்தியதுடன் அரசியல் கட்சிச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தினார். இதன்படி அரசியல் கட்சிச் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டதுடன் இயற்றப்பட்ட அரசியல் திட்டமும் இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் ஐயூப் கானின் இராணுவச் சதிப்புரட்சியினால் இவரது ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது (Panandiker, 2000).

## கட்டம் - 3 : 1958 – 1969 (ஜெனரல் ஐயூப் கான்)

1958இல் ஜெனரல் ஐயூப் கான் இராணுவச் சதிப்புரட்சியின் மூலம் பாகிஸ்தானின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். இவர் இராணுவச் சட்டத்தின் மூலம் தனது நிர்வாகத்தினை மேற்கொண்டதனால் இராணுவச் சட்ட நிர்வாகியாக அறியப்படுகின்றார். எனினும் 1962 இல் ஐயூப் கான் இராணுவச் சட்டத்தினை முடிவிற்குக் கொண்டு வந்ததுடன் ஜனநாயக அடிப்படைகளையும் ஏற்றுக்கொண்டார். இவரது ஜனநாயச் சீர்திருத்தமானது அடிப்படை ஜனநாயகம் (Basic Democracy) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இவ்வடிப்படை ஜனநாயகக் கொள்கைக்கு ஏற்ப ஐயூப் தனது அரசாங்கத்தினை மீளமைத்ததுடன் தனது கொள்கைக்கு இசைவாக புதிய அரசியல் திட்டத்தினையும் வகுத்தளித்தார். இவ்யாப்பு அவரது பெயராலேயே ஐயூப்பின் அரசியல் திட்டம் என அழைக்கப்படுகின்றது (Ahamad, 1993).

ஐயூப் தனது நிர்வாகத்தினை முழுமையான இராணுவ நிர்வாகமாக அன்றி சிவில் நிர்வாகிகளையும் அரசாங்கத்தில் இணைத்திருந்தார். இதனாலேயே இவரது அரசாங்கம் சிவில் மற்றும் இராணுவப் பணியகத்தினரின் கலவையைக் கொண்ட அரசாங்கம் என அழைக்கப்படலாயிற்று. ஐயூப்பின் அரசாங்க ஆட்சியின் போது முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் பொருளாதார ரீதியாக 23 குடும்பங்களே முன்னுரிமை பெற்றது. குறிப்பாக ஐயூப் பாகிஸ்தானின் பொருளாதார விருத்திக்கு முதலாளித்துவப் பொருளாதாரமே உகந்தது என நம்பினார். அவர் சுமார் 11 வருடங்கள் ஆட்சியில் இருந்ததனால் அவரது ஆட்சியில் ஐந்து தேசியத் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தினார். இத்தேர்தல்களில் சர்வஜன வாக்குரிமை என்பது மிகவும் இறுக்கமான வகையில் கட்டுப்படுத்தப்பட்டது. இந்நிலையில் 1969இல் அரசியல் ரீதியான அழுத்தங்களுக்கு மத்தியில் ஐயூப் தனது பதவியினை இராஜினாமாச் செய்தார் (Baxter, et al. 1987).

## கட்டம் - 4 : 1969 – 1970 (ஜெனரல் ஜஹ்யா கான்)

1969இல் ஐயூப் கான் இராஜினாமாச் செய்த்ததை அடுத்து இராணுவ ஜெனரல் ஜஹ்யா கான் அதிகாரத்திற்கு வந்தார். இவர் அதிகாரத்திற்கு வந்ததும் பாகிஸ்தானில்

இராணுவச் சட்டம் திணிக்கப்பட்டது. இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதும் 1962ஆம் ஆண்டைய ஐயூப்பின் அரசியல் திட்டமும் இடைநிறுத்தப்பட்டது. மேலும் ஐயூப்பின் அடிப்படை ஜனநாயகத்தில் இருந்த தெரிவு முறையையும் முடிவிற்குக் கொண்டு வந்தார். ஜஹ்யா கானின் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பரப்பின் பரவலுக்கு மத்தியில் 1970இல் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டது. இத்தேர்தல் அதிகாரம் இராணுவத்திடமிருந்து சிவில் ஆட்சிக்கு உருமாற்றம் பெறுவதற்கான சமிக்ஞையினை வெளிக்காட்டி நின்றது. இத்தேர்தலில் மேற்குப் பாகிஸ்தானில் சுல்பிகார் அலி பூட்டோவும் கிழக்குப் பாகிஸ்தானில் சேக் முஜிபுர் ரஹ்மானும் வெற்றி பெற்றனர் (Baxter, et al. 1987).

தேர்தல் வெற்றியினை அடுத்து யஹ்யா கான் தேசிய அசம்பிளிக் கூட்டத்தினை கால வரையறையின்றி ஒத்திபோட்டார். இந்நிலையில் கிழக்குப் பாகிஸ்தானின் விடுதலைக்கான போராட்டமும் தீவிர மடைந்தது. குறிப்பாக கிழக்குப் பாகிஸ் தானில் முஜிப் வன்முறையற்ற ஒத்துழையா மையினை கொண்டு நடாத்தினார். இச் செயற்பாடு காரணமாக மேற்குப் பாகிஸ் தானியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தானில் இனப் படுகொலையை மேற்கொண்டது. இதன்போது மேற்குப் பாகிஸ்தான் காஷ்மீர் தொடர்பான எல்லைப்புற முரண்பாடு காரணமாக இந்தியா மீது யுத்தத்தினைப் பிரகடனம் செய்தது. இதன் காரணமாக மேற்குப் பாகிஸ்தானியப் படைகளுக்கு எதிரான கிழக்குப் பாகிஸ்தானியப் படைகளின் போராட்டத்திற்கு இந்தியா ஆதரவளித்ததுடன் வங்காளியர்களின் போராட்டம் வெற்றியடைவதற்கும் தனது ஆதரவினை வழங்கியது. இறுதியில் பாகிஸ்தானியப் படைகள் டாக்காவில் சரணடைந்ததுடன் 1971 டிசம்பர் 16 இல் கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ் தானியப் படைகளிடமிருந்து விடுவிக்கப் பட்டது (Ahamad, 1993).

வங்காளதேசத்தின் உதயத்தோடு இரு புதிய அரசுகளாக பாகிஸ்தான் மாற்ற முற்றது. இதன்படி 1970ஆம் ஆண்டு தேர்தல் வெற்றிக்கமைய 1971இல் சுல்பிக் கார் அலி பூட்டோ மேற்குப் பாகிஸ்தானின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். எனினும் இவரது ஆட்சியின் 1973 வரையான காலப் பகுதியில் இராணுவத்தின் ஆதரவினைப் பெற்ற அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. பூட்டோவின் அரசாங்கம் ஜனநாயக மாதிரியிலான அரசாங்கமாக இருந்ததனால் பின்நாட்களில் இராணுவச் சட்டத்தினை நீக்கியதுடன் நிறுவனமயப்படுத் தப்பட்ட இடைக்கால அரசியல் திட்டம் ஒன்றினையும் அறிமுகம் செய்தது. இவ்வர சியல் திட்டம் பாகிஸ்தானின் நான்காவது அரசியல் திட்டம் என அழைக்கப்படுகின்றது. இது பாராளுமன்ற அரசாங்க முறைக்கு அழைப்பு விடுத்ததுடன் பாகிஸ்தானில் ஜன நாயகத்தினை மீளமைப்பதற்கான சீர்திருத் தங்களையும் உள்ளடக்கியிருந்தது (சிவராஜா, 2001). எனினும் பூட்டோவின் ஜனநாயக ஆட்சி என்பது நீடிக்கவில்லை. இவரது ஆட்சி ஜெனரல் சியாஉல் ஹக்கின் இராணுவச் சதிப்புரட்சியுடன் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

## கட்டம் - 5 : 1977 – 1988 (ஜெனரல் சியாஉல் ஹக்)

இக்கால கட்டம் பாகிஸ்தானில் ஜெனரல் சியாஉல் ஹக்கின் இராணுவ ஆட்சி இடம் பெற்ற கால கட்டமாகும். இதன்படி 1977இல் சியாஉல் ஹக், சுல்பிகார் அலி பூட்டோ வினை இராணுவச் சதிப் புரட்சியின் மூலம் அதிகாரத்தில் இருந்து அகற்றியதுடன் அவ்வதிகார வெற்றிடத்தில் சியா அமர்ந்து கொண்டார். இவர் அதிகாரத்திற்கு வந்ததும் பூட்டோவின் ஜனநாயக மாதிரியிலான அரசியலமைப்பின் செயற்பாட்டினையும் இடைநிறுத்தினார். இவர் தனது ஆட்சியினை இராணுவச் சட்டத்தினூடாக மேற்கொண்ட துடன் 1979இல் பூட்டோவினைத் தூக்கி லிட்டார். கடுமையான வகையில் இராணுவச் சட்டத்தினைப் பிரயோகித்து சியா தனது ஆட்சியினை முன்கொண்டு சென்றதனால் இவரது ஆட்சியின் 1977 - 1981 வரையான காலப்பகுதியில் எந்தவொரு சட்டவாக்க நிறுவனமும் செயற்பாட்டில் இருக்கவில்லை. எனினும் சியா தனது இஸ்லாமியமயமாக்கற் கொள்கைக்கு இணங்க மஜ்லிஸ் சூரா என அழைக்கப்படும் சமஷ்டிக் கவுன்சிலை ஏற்படுத்தினார் (Ahamad, 1993).

சியா தனது அதிகாரத்திற்கான மக்கள் ஆணையினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒரு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பினை நடாத் தியதுடன் அதனூடாக ஜனாதிபதிப் பதவிக்கு சியா தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1985இல் கட்சிசார்பற்ற தேர்தல் ஒன்று பாகிஸ்தானில் நடாத்தப்பட்டது.

இத்தேர்தலின் மூலமும் சியா தனது அதிகாரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்தார். 1985 தேர்தலை அடுத்து சியா பாகிஸ்தானிய அரசியல் திட்டத்தின் நீண்டதூர எதிர்பார்ப்புமிக்க மீளமைப்பினை அறிவித்தார். இதற்கமைய மீளமைக்கப்பட்ட அரசியல் திட்டம் 1985 இலிருந்து பாகிஸ்தானில் அமுல்படுத்தப்பட்டது. இவ்வரசியல் திட்டத்தின் மூலம் சியா ஜனாதிபதியின் அதிகாரத்தினை அதிகரித்துக் கொண்டதுடன் தன்னை ஒரு இஸ்லாமிய அரசின் j i y t u h f v j ph g h h j j h h ; (Panandiker, 2000).

இவரது ஆட்சியின் மைய அம்சமாக இருந்தது நிசாம் ஈ முஸ்தபாவி (நபிகள் நாயகத்தின் ஆட்சியி)னை நிறுவுவதாகும். இவரது பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவ அடிப்படைகளைக் கொண்டதாகவே அமைந்திருந்தது. சியா தனது ஆட்சியில் பாகிஸ்தானை இஸ்லாமியமயப்படுத்தும் செயன்முறைக்கு முன்னுரிமை கொடுத்தார். இதற்கமைய பல்வேறு இஸ்லாமிய சீர்திருத்தங்களையும் சியா அறிமுகம் செய்தார். இவ்விதம் இஸ்லாமிய மயமாக்கத்தினை அடிப்படையாகக்கொண்ட இராணுவ ஆட்சியினைப் பிரகடனப்படுத்தி இருந்த சியா 1988இல் இடம்பெற்ற விமான விபத்தில் அகால மரணமடைந்தார் (Ahamad, 1993).

சியாவின் மரணத்தினைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டதுடன் இத்தேர்தலினூடாக மீளவும் ஜனநாயக மாதிரியான அரசாங்கம் பாகிஸ்தானில் நிறுவப்பட்டது. இத்தேர்தலினை அடுத்து சுல்பிகார் அலி பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1988இல் பெனாசிர் பிரதமரானதைத் தொடர்ந்து அவரது ஆட்சி 1990 வரை நீடித்தது. இதன் பிற்பாடு 1990 லிருந்து 1993 வரை நவாஸ் ஷரிபும், 1993 லிருந்து 1996 வரை பெனாசிர் பூட்டோவும், 1997 லிருந்து 1999 வரை நவாஸ் ஷரிபும் பாகிஸ்தானில் ஜனநாயக மாதிரியிலான அரசாங்கத்தினை நிறுவியிருந்தனர் (Kukreja, 2003).

இக்காலகட்டத்தில் நிறுவப்பட்ட அரசாங்கங்கள் ஜனநாயகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகளைக் கொண்ட அரசாங்கங்களாக இருந்த போதிலும் ஊழல், அரசியல் நெருக்கடி, கட்சிப் போட்டி போன்ற பல்வேறு காரணங்களால் இவ்வரசாங்கங்களின் ஜனநாயகத் தன்மைமிக்க செயற்பாடுகள் சவால்களுக்குள்ளானதுடன் மீண்டும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்குள் அகப்படுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

## கட்டம் - 6 : 1999 – 2008 (ஜெனரல் பர்வேஸ் முஸர்ரப்)

பாகிஸ்தானிய அரசியலின் அண்மைய இராணுவ ஆட்சிக் கால கட்டமாக ஜெனரல் பர்வேஸ் முஸர்ரபின் ஆட்சிக் காலம் காணப்படுகின்றது. பின்நாட்களில் முஸர்ரப் இராணுவச் சீருடையினைக் கழைந்து ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்த போதும் இவரது அதிகார நுழைவு என்பது இராணுவச் சதிப்புரட்சியின் மூலம் ஏற்பட்ட ஒன்றே. முஸர்ரப் 1999இல் மேற்கொண்ட இராணுவச் சதிப்புரட்சியின் (விமானத்தில் இருந்தவாறு மேற்கொண்ட) மூலம் பிரதமராகப் பதவி வகித்த நவாஸ் ஷரீபினை அதிகாரத்தில் இருந்து அகற்றி தாமாக அதிகாரத்தினைப் பெற்றுக்கொண்டார் (Panandiker, 2000).

முஸர்ரப் அதிகாரத்திற்கு வந்தமையானது சுமார் 21 வருடகால பாகிஸ்தானின் ஜனநாயக ஆட்சினை முடிவிற்குக் கொண்டு வந்தது. எனினும் முஸர்ரப் அதிகாரத்திற்கு வந்த விதம் எவ்விதமான வன்முறையுமற்ற எளிதான முறையில் இடம்பெற்ற ஒன்றாகும். அவர் அதிகாரத்திற்கு வந்ததும் முன்னைய இராணுவ ஆட்சியாளர்களைப் போன்று ஜனநாயக அரசியல் கட்சிகளைத் தடை செய்தார். இதனால் முந்நாள் பாகிஸ்தானியப் பிரதமர்களான பெனாசிர் பூட்டோ மற்றும் நவாஸ் ஷரீப் ஆகியோர் நாட்டை

விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது (Kukreja, 2003). இதன் மூலம் பாகிஸ்தானின் ஜனநாயகம் மீண்டும் மீழ முடியாத சவால்களுக்குள்ளானது.

முஸர்ரப் தனது ஆட்சியின் ஆரம்ப நாட்களில் தீவிர முஸ்லிம் பகுதியினருக்கு தனது ஆதரவுக் கரத்தினை நீட்டியிருந் தார். குறிப்பாக ஆப்கானிஸ்தானின் தலி பான் ஆட்சியினை இவர் அங்கீகரித்திருந் தார். எனினும் பின்நாட்களில் அமெரிக்க தலைமையிலான பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டணியில் பாகிஸ்தானை இணைத்துக் கொண்டதன் மூலம் மேற்குலகின் நண்பனாகவும் தீவிர முஸ்லிம் பகுதியினரின் எதிரியாகவும் முஸர்ரப் அடையாளப் படுத்தப்பட்டார். முஸர்ரப் தனது அதிகாரத்தினை மீள நிலைநிறுத்திக் கொள்வதற்காக 2001இல் ஜனாதிபதியானதுடன் இராணுவத்தினரின் ஆதரவினை பின்புலமாகக் கொண்ட அரைகுறை ஜனநாயக ஆட்சியினை (Army backed Quasi-Democracy) எதிர்பார்த்தார் (Panandiker, 2000). எனினும் அவரது அரசியல் இருப்பினை உறுதி செய்யும் நோக்கில் ஜனநாயகத்தினை மீளமைப்பதற்கும் முயற்சித்தார்.

முஸர்ரபின் ஆட்சியின் இறுதிப்பகுதியில் அவர் அரசியல் இழுபறியில் சிக்குண்டதனால் தொடர்ந்தும் தனது ஆட்சியினை நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக பிரதம நீதியரசர் நியமனம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை, அவரது ஆட்சிக்கு எதிரான விமர்சனங்கள் போன்றன அவர் தனது ஆட்சியினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான அழுத்தத்தினை அவருக்குக் கொடுத்தது. இதனால் 2008இல் முஸர்ரப் தனது பதவியினை இராஜினாமாச் செய்து அதிகாரத்தில் இருந்து தமாகவே விலகிக் கொண்டார். இதன் மூலம் முஸர்ரபின் சுமார் 9 வருடகால ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. அவரைத் தொடர்ந்து பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பெனாசிரின் கணவர் ஆசிப் அலி சர்தாரி பதவியேற்றதுடன் அவரது பாகிஸ்தான் மக்கள் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினையும் பெற்றுக் கொண்டது. மிக அண்மையில் இடம் பெற்ற தேர்தலின் மூலம் நவாஸ் ஷரீப் ஆட்சியினை தமதாக்கியுள்ளார். இதனால் விலையில் ஆயுதங்களைக் கொள்வனவு ஜனநாயக மாதிரியிலான அரசாங்கம் ஒன்று தற்சமயம் பாகிஸ்தானில் நிறுவப்பட்டுள்ளது.

## முடிவுரை

சுதந்திர பாகிஸ்தானின் இருத்தலில் சுமார் அரைவாசிப் பகுதி அந்நாடு இராணுவத்தினரின் ஆதிக்கத்திற்குட்பட்டு வந்துள்ளது. அதன் அரசியலில் இராணுவத் தலையீடு என்பது அடிக்கடி இடம்பெற்று வரும் ஒரு நிகழ்வாகும். இப்போக்கு இராணுவத்தினரின் பலமான செல்வாக்கினை பாகிஸ்தானிய அரசியலில் ஏற்படுத்தியுள்ளது. இச்செல்வாக்குக் காரணமாக இராணுவம் பாகிஸ்தானிய அரசியலின் ஒரு ஆட்சிப் பகுதியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அந்நாட்டின் 67 வருடகால அரசியல் வரலாற்றில் இது வரையும் நான்கு தடவைகள் இராணுவச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்திக் கொண்டு இராணுவம் அரசியலில் நேரடியாகத் தலையிட்டுள்ளது.

அடிக்கடி பாகிஸ்தானிய அரசியல் இராணுவத்தினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டமையானது அந்நாட்டின் ஜனநாயக அரசியலின் தொடர்ச்சியான இருத்தலைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளதுடன் அரசியல் நெருக்கடிகளையும் துரிதப்படுத்தியுள்ளது. எனினும் அண்மைய ஆண்டுகளில் பாகிஸ்தான் மீண்டும் ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்துள்ளதுடன் ஜனநாயக முறைப்படி அமைந்த அரசாங்கம் அங்கு நிறுவப் பட்டுள்ளது.

எனினும் ஸ்திரமான இராணுவக் கட்டுமானம், இராணுவத்தினரின் அரசியல் தலையீட்டு அனுபவம், உள்நாட்டு அரசியல் நெருக்கடி, தலிபான் - அல்கைதா அமைப்புகளுக்கு எதிரான தீவிரமான தாக்குதல்கள், பாகிஸ்தான் - இந்திய உறவு நிலை போன்றன பாகிஸ்தானின் அரசியலில் இராணுவம் தலையிடுவதற்கான வாய்ப்பினை இன்னும் திறந்துவிட்டுள்ளது. எனவேதான் மீண்டும் பாகிஸ்தானிய அரசியல் இராணுவத்தினரின் ஆதிக்கத்திற்குள் சிக்குண்டால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

## உசாத்துணைகள்


Ahamad, B. (1993) The Generals of Pakistan and Bangladesh. New Delhi: Vikas Publishing Pvt. Ltdd.

Graig Baxter, Yogendra K. Malik, Charles. H. Kennedy & Robert. C. Oberst (ed), (1987) Government and Politics in South Asia. United States of America: Westview Press. pp 202 ï 215, 277 ï 283

Kalim Bahader, (1984) Military and Politics in Pakistan, in Urmila Phadnis, (1984), vol ï 01, *Domestic Conflict in South Asia.* New Delhi: South Asian Publisher. p - 128

Kukreja, V. (2003) Contemporary Pakistan: Political Process, Conflicts and Crisis, London: SAGE Publications. pp 43 ï 74, 258 ï 290

V.A. Pai Panandiker (2000) Problems of Governance in South Asia. New Delhi: Konark Publishers Pvt. Ltd. pp 201 ï 228

é é é (2000) Defence Expenditure in South Asia: An Overview. Colombo: Regional Center for Strategic Studies.

é é é (2000) Defence Expenditure in South Asia: Bangladesh and Sri Lanka. Colombo: Regional Center for Strategic Studies.

é é é (2000) Defence Expenditure in South Asia: India and Pakistan. Colombo: Regional Center for Strategic Studies.

é é é (2001) Governance and Defence Spending: View from South Asia. Colombo: Regional Center for Strategic Studies.

சிவராஜா, அ. (2001) தென்னாசிய அரசியல் ஓர் அறிமுகம். கொழும்பு: குமரன் பதிப்பகம். பப 75 - 82

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# ஒழுக்கவியல் நியாயித்தல் : விஞ்ஞான நியாயித்தலுடனான ஓர் அறிவாராய்சியல் நோக்கு

# ETHICAL REASONING: AN EPISTEMOLOGICAL VIEW WITH SCIENTIFIC REASONING

***M.L. Issadeen***


## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வு பொதுவாக ஒழுக்கவியலில் உள்ளவைகளை நியாயிப்பது பற்றிய பிரச்சனைகளை பற்றி ஆராய்கிறது. மேலும் இது ஒழுக்கவியல் ஆராய்கின்ற விடயங்களின் விசேட இயல்பினையும், பரிமாணங்களையும் தெளிவுபடுத்துகின்ற அதேநேரம் விஞ்ஞான நியாயித்தல் முறையின் அடிப்படைகளையும் ஆராய்ந்து ஒழுக்கவியலில் உள்ளவைகளை நியாயிப்பதற்கு விஞ்ஞான நியாயித்தல் முறை ஏற்புடையதன்று என வாதிக்கின்றது. விஞ்ஞானம் ஆராய்கிற இயற்கை நிகழ்சி சம்பவங்களிலிருந்து ஒழுக்கவியல் ஆராய்கின்ற விடயங்களின் தன்மைகள் வேறுபட்டிருப்பதால் அதனை நியாயிப்பதற்கு ஒரு விசேட முறை அவசியமாகும் என்பதை இவ்வாய்வு உணர்த்துவதோடு, அதன் சாத்தியப்பாட்டினை இமானுவல் காண்ட்டினது சிந்தனையின் துணை கொண்டு ஆராய்கிறது.


## அறிமுகம்

ஒழுக்கம்சார் சம்பவமொன்றினுள் மனித நடத்தை அல்லது செயற்பாடு, சமூக இசைவு (பொருத்தம்), மனித இலட்சியம் என்ற மூன்று அம்சங்கள் மிகவும் அடிப்படை யானவை. இவற்றில் ஏதாவது ஒன்று கருத்தில் கொள்ளப்படாது அறவியல் ஆய்வு இடம்பெறுமாகில் அது அறவியலின் உண்மையான இயல்பை சிதைத்துவிடும். இதனால் இத்துறையிலுள்ளவற்றை நியா யிப்பதற்கு மிகப் பொருத்தமான நியாயித் தல் முறையொன்று அவசியமாகிறது. அதற்கு விஞ்ஞான விடயங்களிற்கு பயன் படுகின்ற நியாயித்தல் முறை போது மானதன்று. குறிப்பாக விஞ்ஞான நியாயித்தல் முறை அறவியலின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகிய மனித இலட்சியப் பகுதியை உள்ளடக்கிக் கொள்ள ஆற்றல் அற்றது.

ஆகவே அறவியலின் இயல்பு சிதையா வண்ணம் அதனை நியாயிப்பதற்கு ஏற்ற தொரு நியாயித்தல் முறை ஒன்று விருத்தி செய்யப்படுவது இன்றியமையாதது. இது தானே விளங்கும் அறிவின் எல்லைவரை சென்று நியாயித்தலைக் கைக்கொள்ளக் கூடிய இயலுமையைப் பெற்ற ஒரு முறையாக அமைய வேண்டும்.

இதற்கு இமானுவல் காண்டின் சிந்தனை களை உதவிக்கு கொள்ள முடியும்.

## ஒழுக்கவியல்

ஒழுக்கவியல் என்ற சொல் ஆங்கிலத்தில் ôEthicsô என்ற சொல்லால் குறிக்கப் படுகிறது. Ethics என்ற இவ்ஆங்கிலச் சொல் ôEthosô என்ற கிரேக்க சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச் சொல்லின் நேரடி அர்த்தம் வழக்கம், மரபு, பழகிப்போன நடத்தை எனக் குறிக்கப்படுகிறது. பின்னர் இது சீலம் என்பதாக அர்த்தம் கொண்டது. இது போன்று ஒழுக்கவியலுடன் மிகவும் தொடர்புடைய இன்னுமொரு சொல்லாகிய ôMoralô என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியில் உள்ள ôMoresô என்ற சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச்சொல்லும் பழக்கம், வழக்கம் என்ற அர்த்தத்தினையே பெறுகிறது. ôவழக்கம்ô என்ற இச்சொல் வெறும் வழமையான செயற்பாடுகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. மாறாக அது ஒரு பரந்துபட்ட அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது சமூகத்தால், குழுக்களால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தை வழியைக் கொண்டது என்று கருதப்படலாம். இன்று இவ்வார்த்தைப் பிரயோகம் மிகவும் சிக்கலான, உயர்ந்த வாழ்க்கைக் கோலத் துடன் தொடர்புபட்டதாக அமைகிறது.

ஒழுக்கம் பற்றிய ஆய்வானது மனித ஒழுக் கத்தை மையப்படுத்தியது. இவ்வாய்வுத் துறை மனிதனின் ஒழுக்கம், ஒழுக்கத்தோடு தொடர்பான பல்வேறு நடத்தைகள் மற்றும் அவை பற்றிய கோட்பாடுகள் பற்றி ஆராய்கிறது. இதனால் ஒழுக்கவியலை ôமனித ஒழுக்கம் பற்றி ஆய்வு செய்யும் இயல்ô என ஓரளவு வரையறுக்கலாம்.

ஒழுக்கவியல் பற்றி ஆராயப்படுகின்ற வற்றுள் குறிப்பாக தற்கால ஆய்வுகளில் ôஒழுக்கவியலை விஞ்ஞான விடயமாக ஆய்வு செய்கின்ற போக்குô பிரபலமானதும் அறிஞர்களைக் கவருவதுமாகும். இதில் கைதேர்ந்தவர்கள் அறிவியலின் அனைத்து வழிகளாலும் ஒழுக்கவியலை வரையறுக்க முயற்சி செய்கின்றனர். இருப்பினும் ஒழுக்க வியலை ஒரு விஞ்ஞான விடயம் போன்று சீரிய நெறிமுறையில் வரையறுக்க முடியா திருப்பதை அவர்களுடைய ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. ஏனனில் இவர்கள் ஒழுக்கவியலை ஆய்வு செய்யக்கையாளும் வழிமுறை பெரும்பாலும் விஞ்ஞான முறையாக இருப்பதே இதற்குக் காரணம் எனலாம். ஒழுக்கம் மனித நடத்தையில் பிரதிபலிப்பதைக் கொண்டு, மனித நடத் தையை ஆராயும் ஏனைய துறைகளைப் போன்று ஒழுக்கவியலில் உள்ளவற்றை ஒரு புறவய விஞ்ஞானமாக ஆய்வு செய்யும் போக்கு ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். இவ்கையான ஆய்வு சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் நடத்தையைப்பற்றி ஆராயும் ஒருவகை விஞ்ஞானமாக ஒழுக்கவியலை எடுத்துக் கொள்கின்றது. அதாவது இது மேல்வரம்பிட்ட விஞ்ஞானமாகக் (Normative science) கொள்ளப்படுகின்றது.

தற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிற பகுப் பாய்வு மெய்யியல் மரபினரின் பார்வையில் ஒழுக்கவியல் என்பது ஒழுக்க எண்ணக்கருக் களினதும், தீர்ப்புக்களினதும் அளவையியல் தராதரம் பற்றியதாக அமைகிறது.

> ஒழுக்கப் போதனையில் பயன்படுத்தப் படும் எண்ணக்கருக்களின் பகுப்பாய்வே ஒழுக்க மெய்யியலாளரின் அக்கறைக் குரியது. ôசெய்யப்பட வேண்டியதெதுô என்பது பற்றிய சொல்லாடலில் ஒழுக்கப் போதனையாளர் எதனைச் செய்கின்றன ரெனக் கணிப்பிட முயலுவதே மெய்யிய லாளரின் கவனத்திற்குரியவையாகும். ஒழுக்கத் தீர்மானங்கள் கண்டுபிடிப் புக்களா? அல்லவா?, எத்தகைய மாற்றத் திற்கும் உள்ளாக்காமல் ஒரு ஒழுக்கத் தீர்மானத்தை ஒழுக்கவியல்சார் நேர்வுக் கூற்றாக மாற்றலாமா?, உணர்ச்சியை அல்லது நியாயத்தை இலக்காகக் கொண்டா ஒழுக்கத் தீர்மானம் மேற் கொள்ளப்படுகிறது?, எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கச் சொல்லாடலின் தாற்பரியம் யாது?, என்பனவே தற்கால ஒழுக்க மெய்யியலின் அக்கறைக்குரிய விடயமாக இருக்கிறது.
> (சோ.கிருஷ்ணராஜா,2000:8)

இவர்களுடைய சிந்தனைகளை உற்று நோக்குகிறபோதும், இவற்றுக்கூடாக செய்ய முற்பட்டவற்றை பார்க்கிறபோதும் அவை அவர்களுடைய விஞ்ஞான உளப் பாங்கைக் காட்டுவதாகவே அமைகின்றன.

இவ்வாறு ஒழுக்கவியல் ஆய்வுகள் மெய்யியல் வரலாற்றில் விஞ்ஞான உளப் பாங்குடனான பார்வையினையே அதிகம் பதிவு செய்துள்ளது. இவ்வொழுக்கவியல் பற்றிய ஆராய்ச்சிகளில் பெரிதும் பார்க்கப்படாத ஆனால் பார்க்க வேண்டிய சில தளங்களும் உண்டு. தொன்று தொட்டு சில அறிஞர்களால் பேசப்பட்ட சில விடயங்கள் இன்றைய சில மெய்யியலாளர் களின் பார்வைக்குரியதாகி உள்ளது. இதனால் மேலைத்தேய மெய்யியல் பாரம் பரியம் முழுவதும் மீள்வாசிப்புக்குட்பட வேண்டிய சூழல் உருவாகி வருகிறது. இதற்கு அறிவியலில் குவாண்டம் கொள்கை ஏற்படுத்திய தாக்கமும் ஒன்றாகும்.

ஒழுக்கவியல் தொடர்பான இம்மானுவல் காண்டின் ஆய்வுகள் முக்கியமானதாகும். ஒழுக்கவியலுக்கான இவருடைய அணுகு முறை குறிப்படத்தக்க முறையியல் ஒன்றினை மெய்யியலுக்குத் தந்துள்ளது மட்டுமன்றி இவர் சாதாரண விஞ்ஞானத் தால் பாதிக்கப்படாத வகையில் ஒழுக்க வியலை ஆராய்ந்துள்ளார். இதனை ஒத்த வகையிலான நிலைப்பாடு கீழைத் தேய சிந்தனை மரபுகளில் காணப்பட்டாலும் அவை காண்ட் கொண்டதைப் போன்று அத்துணை சிறப்பான மொழி வடிவமைப் பினை கொண்டிருப்பவை அல்ல.

காண்ட் ஒழுக்கவியலில் உள்ளதை சரியான முறையில் நியாயிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும், அறிவாராய்ச்சியியல் சார்ந்த ஆழமான விமர்சனப் பகுப்பாய் வொன்றினை நிகழ்த்தினார். இவர் அறிவாற்றலின் இயல்பு, வரம்பு, மூலங்கள் போன்றவற்றை தெளிவாக வரையறை செய்தார். இன்று இவருடைய அறிவாராய்ச் சியியல் சார்ந்த பார்வையை ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஒழுக்கவியல் தொடர்பாக இவர் கொண்ட நிலைப்பாடும், முறையும், அதனை விளங்கிக் கொள்வதற்கு ஆதாரமாக அமைகிறது.

## நியாயித்தல்

இங்கு நியாயித்தல் என்பது ôReasoningô என்ற ஆங்கிலப் பதத்திற்குரிய கருத்தாகக் கொள்ளப்படுகிறது. நியாயித்தலானது சுவாதீனமான மனிதனுக்குரிய ஒன்றாகும். இது மனிதனுக்கு இயல்பாயுள்ள பகுத்தறி வின் தேவையுமாகும். பொதுவாக மனிதன் எந்த ஒரு விடயத்தையும் தனது அறிவாற்றல் கொண்டு நியாயிக்கும்திறன் படைத்த வனாகக் காணப்படுகிறான். நியாயித்தல் என்பது எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு விடயம் எந்தவித முரண்பாடுமின்றி அறிவுத் தொகுதியுடன் செம்மையாகப் பொருந்து கின்றனவா என்பதை பல வழி முறையூடாகப் பொருத்திப்பார்த்து புரிந்து கொள்வதாகும். எனவே நியாயித்தல் என்பதை ñஅறிவுத் தொகுதியுடன் பொருந்துகிறவகையில் ஒன்றைப் புரிந்துகொள்ள எடுக்கின்ற முயற சியாகும்.ò எனச் சுருக்கமாக வரையறுக் கலாம். மனிதனுக்கு வேண்டப்படுகிற இப் புரிந்துகொள்ளலானது அவன் பல முடிவு களைப் பெறுவதற்கு ஏதுவாக அமைவ துடன், இம்முடிவுகள் அவனுக்கு பல்வேறு வழிகளில் உதவுவதுமாகும். இந்த வகையில் அவன் சில நியாயித்தல் வழிமுறைகளை நெறிப்படுத்தியுள்ளான்.

பொதுவாக இந்நியாயித்தல் முறையினை நாம் விஞ்ஞான விடயங்களில் மிகத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். மனிதன் நெறிப்படுத்தியுள்ள நியாயித்தல் முறை களுள் விஞ்ஞான முறையியல் சார்ந்தவை மிக நுட்பமாக வரையறுக்கப்பட்டு காணப் படுகிறது. விஞ்ஞானி இயற்கை நிகழ்ச்சி, சம்பவங்கள் தொடர்பாக ஆழ்ந்துணர் வதனால் பெறும் விடயங்களை மிகவும் நுட்பமான முறையில் நிறுவுவதற்கு இது துணை செய்வதாகும். விஞ்ஞான முறை சார்ந்த நியாயித்தல் நெறிமுறையானது விஞ்ஞான விடயங்களுக்கு மிகவும் சரியாகப் பொருந்துவனவாகும். ஒருவிடயம் விஞ்ஞான நியாயித்தல் நெறிமுறையூடேதான் அது திருப்தியான விஞ்ஞான விடயமாகிறது,

மனிதன் வகுத்துக் கொண்ட நியாயித்தல் நெறிமுறைகளுள் விஞ்ஞான நியாயித்தல் நெறிமுறையே அதன் தேவையைப் பூர்த்தி செய்யுமளவில் நுட்பமாக வரையறுக்கப் பட்டதும், பொருத்தப்பாடு பெற்றதுமாகும். இதன் பிரதிபலனை இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் கண்டு கொள்ளலாம்.

இன்று விஞ்ஞான நியாயித்தல் நெறிமுறை களை பயன்படுத்தக்கூடிய அனைத்துத் துறைகளையும் விஞ்ஞானமாகப் பார்க்கின்ற மரபு பெரிதும் வளர்ச்சி அடைந்திருக் கின்றது. அனைத்துத் துறைகளிலும் இந்நியாயித்தல் முறைகளைப் பொருத்திப் பார்ப்பதற்கு அறிஞர்கள் முயற்சி செய் கின்றனர். இதன் பலனாக பல்வேறு விஞ் ஞான வகைகள் தோன்றியுள்ளன. இவை கள் நுணுக்கமான பிரிப்பு முறைகளின் அடிப்படையில் இயற்கை விஞ்ஞான வகை யினதாக, சமூக விஞ்ஞான வகையினதாக பிரித்து நோக்கப்பட்டு ஆய்வு செய்யப்படு கின்றன. இவற்றில் இயற்கை விஞ்ஞானத் திற்கே இந்நியாயித்தல் நெறிமுறையானது செம்மையாகப் பொருந்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான நியாயித்தல் நெறிமுறையை உயிர்ப்பிக்கும் பிரதான இரு துறைகளாக அளவையியலும் கணிதமும் காணப்படு கின்றது. விஞ்ஞானிகளின் நியாயிக்கும் குறிக்கோள் இவ்விரண்டு துறைகளாலும் நிறை வேறுகிறது. அளவையியலைப் பொறுத்தவரை உய்த்தறி முறையும், தொகுத்தறி முறையும் இத்தொழிற்பாட்டில் பங்கு பெறுகிறது. அதே போல கணித வியலும் பல்வேறு வழிகளில் நியாயித் தலுக்கு துணைபோகின்றது. ஒரு விஞ்ஞானி தனது குறிக்கோளை அடையும் வரை இவற்றின் தொழிற்பாடு நீடிக்கிறது.

உய்த்தறிமுறைக்கு முற்கோளாக பொது உண்மைகளாகிய வெளிப்படை உண் மைகள் அமைகின்றன. இதன் அடிப்படை யிலேயே பல தனிப்பட்ட உண்மைகள் நியாயிக்கப்படுகின்றன. இங்கு வெளிப் படை உண்மைகளிலிருந்து தனிப்பட்ட உண்மைகளைப் பெறுவதற்கு வடிவங் களை அடிப்படையாகக் கொண்ட பல அனுமான விதிகள் முன்வைக் கப்பட்டிருக்கின்றன. எனவே வெளிப்படை உண்மையில் இருந்து சில அனுமான விதிகளூடாகத் தனிப்பட்ட முடிவுகளைப் பெறுதல் இதன் இயல்பாக உள்ளது. இம்முறையானது வாதத்தின் வடிவத்தினைக் கருத்திற் கொள்ளுமே தவிர உண்மை பொய்மையைக் கருத்திற் கொள்வதில்லை. இது வாதத்தின் வலிது, வலிதின்மையை எடுத்தாளும் திறன் கொண்டது. ஒரு உய்த்தறி முறையின் மாதிரியினைப் பின்வரும் உதாரணம் காட்டுகிறது.

எல்லா மனிதர்களும் கடவுளாவர்.
நான் ஒரு மனிதன்.
ஆகவே நான் கடவுள்.

மேலே உள்ள நியாயித்தலில் எடுகூற்றுக்கள் உண்மையற்றதாய் இருந்தும் முடிவு கூற்றானது அளவியல் ரீதியாக அவற்றைப் பின்பற்றுகிறது. எடுகூற்றுக்கள் உண்மையாக இருந்தால் முடிவுக் கூற்றும் உண்மையாக இருக்கும். மேலே கூறப்பட்ட உய்த்தறி நியாய வடிவமானது வாய்ப்பானதாகும். ஏனென்றால் அது அனுமான விதிகளைச் சரியாகப் பின்பற்றியிருக்கிறது.

இங்கு உண்மைக்கும் வாய்ப்பிற்கும் இடை யிலான வேறுபாடு முக்கியமாகக் கவனத்திற் கொள்ளத்தக்கது. ஒரு வாய்ப்பான நியாயித் தலின் எடு கூற்றுக்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்பது இங்கு அவசிய மில்லை, ஆனால் முடிவு எடுகூற்றுக்களில் இருந்து தர்க்கரீதியாகப் பெறப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும். இங்கு எடு கூற்றுக்கள் உண்மையானதாக இருந்தால் முடிவு கூற்றும் கட்டாயம் உண்மையாக இருக்கும் எனக் கருதலாம்.

இதிலிருந்து உய்த்தறி நியாயித்தலானது ஒன்றில் வாய்ப்பானதாகவோ அல்லது வாய்ப் பற்றதாகவோ இருக்க முடியும் எனச் சொல்ல லாம். ஒரு வாய்ப்பான உய்த்தறி நியாயித் தலின் முடிவுகூற்றானது அதனுடைய எடு கூற்றுக்களை உள்ளடக்கி இருக்கிறது. அதாவது முடிவுக் கூற்றானது எடுகூற்றுக் களில் இருந்து உய்த்து உணரப்பட்டிருக்கும்

என்பதாகும். இதனை ஒத்த வாதங்கள் சில உண்மையான எடுகூற்றுக்களைப் பெற்றிருப்பினும் முடிவுக்கூற்று வாய்ப்பற்றதாக அமைவது சாத்தியமானதாகும்

உதாரணமாக:

எல்லா மனிதர்களும் இறப்பவர்களாகும்.

தேலீஸ் இறப்பவராகும்.

அகவே தேலீஸ் ஒரு மனிதர்.

இந்த நியாயித்தலின் எல்லா கூற்றுக்களும் உண்மையாக இருந்தாலும் வாதம் வாய்ப்பற்றது. ஏனெனில் முடிவு கூற்றானது எடுகூற்றுக்களிலிருந்து பெறப்படவில்லை.

தொகுத்தறி முறையைப் பொறுத்தவரை இதனுடைய முற்கோள்களாக இயற்கையின் சீர்மை விதிகள், காரணகாரியக் கோட்பாடு போன்றவற்றைக் குறப்பிடலாம். இங்கு தனிப்பட்வைகளிலிருந்து பொது முடிவு பெறப்படுகிறது. இது மனித அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. இம்முறை பல படிமுறைகளினூடே தனிப்பட்டவற்றிலிருந்து பொது முடிவிற்குச் செல்கிறது. அவதானம், பரிசோதனை, கணக்கிடல், தொகுத்து வகைப்படுத்தல், பகுப்பய்வு போன்றவற்றை இது உள்ளடக்கியிருக்கிறது. இதனை ஓர் எளிய உதாரணத்தின் மூலம் பின்வருமாறு காட்டலாம்.

**P** என்ற நெட்டித்துண்டு நீரில் மிதக்கிறது,

**Q** என்ற நெட்டித்துண்டு நீரில் மிதக்கிறது,

**R** என்ற நெட்டித்துண்டு நீரில் மிதக்கிறது,

S என்ற நெட்டித்துண்டு நீரில் மிதக்கிறது,

**T** என்ற நெட்டித்துண்டு நீரில் மிதக்கிறது,

ஆகவே நெட்டித்துண்டுகள் யாவும் நீரில் மிதக்கும்.

இவ்வொவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குள்ளும் ஊடுருவியிருக்கின்ற பொதுமையான அம்சத்தைக் கண்டுகொள்ளும் முயற்சியாக இம்முறை பயன்படுகிறது. இயற்கையில் பரந்துகிடக்கும் நேர்வுகளுக்கிடையே ஆய்வுக்குத் தேவையான தரவுகளைத் திரட்டி அவதானித்துத் தொகுத்து ஆராய்வதன் மூலம் பொது முடிவு ஒன்றுக்கு வரும் வழியாகத் தொகுத்தறிமுறை விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது. இவ்வாறு வரையறுக்கப்படக்கூடிய உய்த்தறி முறையினதும் தொகுத்தறி முறையினதும் பயன்பாடானது ஒன்றோடொன்று இணைந்த வகையிலேயே செல்கின்றது. விஞ்ஞானப் படிமுறைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் இவை ஒவ்வொன்றும் தேவைக்கேற்ப மாறி மாறிப் பயன்படுத்தப்படுகிறது. முறையான அறிவு விருத்தியின் செயற்பாட்டில் இவையிரண்டும் இணைந்தே செயற்படுகின்றன. இவ்வழிமுறையூடே விஞ்ஞான அறிவு நெறிமுறையாக அல்லது நியாயிக்கக் கூடியதாக அமைகிறது.

இங்கு இவ்விரு முறையினதும் இலட்சியம் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். உய்த்தறிமுறை பொதுமையிலிருந்து தனிமையை பெறுவதை இலட்சியமாகக் கொள்ள, தொகுத்தறிமுறை தனிமைகளிலிருந்து பொதுமையைப் பெறுவதைத் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது. எனவே முறையான அறிவு எனும் விடயத்தில் பொதுமை, தனிமை என்ற எண்ணக்கருக்கள் மிக அடிப்படையானவையாகும்.

உதாரணமாக

**A** என்ற மலர் அழகானது...தனிமை
**B** என்ற மலர் அழகானது...தனிமை
**C** என்ற மலர் அழகானது...தனிமை
**D** என்ற மலர் அழகானது...தனிமை
**E** என்ற மலர் அழகானது...தனிமை
} தொகுத்தறி முறை

ஆகவே மலர்கள் அழகானவை...பொதுமை
**X** ஒரு மலர்
ஆகவே **X** அழகானது...தனிமை
} உய்த்தறி முறை

பொதுமைகள் —உய்த்தறிமுறை→ தனிமங்கள்

தனிமங்கள் —தொகுத்தறிமுறை→ பொதுமைகள்

கணிதம் உய்த்தறிதலின் அடிப்படையிலான அறிவுப்பிரிவாக இருப்பினும் அதன் தோற்றம் சமுதாயத் தேவையை முன்னிட்டு நிகழ்ந்திருக்கிறது. ஆனால் கணிதத்தைக் கணிதத்திற்காகக் கலையாகக் கொண்டு ஆய்வு செய்கின்ற போக்கும் வரலாற்றில் இருந்திருக்கின்றது.

எப்படியிருப்பினும் அறிவியல் வளர்ச்சியில் கணிதத்தின் பங்கு இன்றியமையாதது என்பது இங்கு நோக்கத்தக்கது.

உயர்தரமான அறிவாகக் கருதப்படும் கணிதமானது அடிப்படையில் கருத்துரு வமானதாகவே கருதப்படுகிறது. அறிவிய லின் மொழியாக வர்ணிக்கப்படும் இது தேவையான (தவிர்க்க முடியாத) முடிவுக ளைக் கொடுக்கும் விஞ்ஞானம் என வரை யறை கூறப்பட்டிருக்கிறது. ‘வெப்பம் பொருள்களின் பரிமாணத்தைப் பெருக்கு கிறது’ என்பது போன்ற திட்டமான கருத்தைக் கணிதம் வெளியிடுவதில்லை. கணிதத்தில் கூறப்படும் முடிவுகள் எல்லாம் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை (கலைக் களஞ்சியம், தொகுதி மூன்று, 1956: 136).

கணிதம் நிறுவப்படாத சிலவற்றை முற்கோள்களாகக் கொண்டே தனது பணியை ஆரம்பிக்கின்றது. இவை இங்கு வெளிப்படை உண்மைகளாகக் (Axioms) கொள்ளப்படுகின்றன. இவற்றினை அடிப் படையாகக் கொண்டு மேலும் பல உண்மை கள் வருவிக்கப்படுகின்றன. அதாவது சில வரையறுக்கப்படாத சொற்களையும் நிரூபிக் கப்படாத தேற்றங்களையும் வெளிப்படை உண்மைகளாகக் கொண்டு மேலும் பல உண்மைகளைத் துணிகிறது. இங்கு வெளிப்படை உண்மைக்கும் வருவிக்கப்பட்ட உண்மைக்குமிடையிலான தொடர்பு பற்றி கவனம் செலுத்தப்படுமே தவிர உண்மை பொய்மைகளில் கவனம் செலுத்தப்படு வதில்லை. அது அதனுடைய பணியுமன்று.

உதாரணமாக, வடிவகணிதத்தை எடுத்துக் கொண்டால் புள்ளி, நேர்கோடு, வட்டம் போன்ற நிரூபணமற்ற, வரையறுக்கப்படாத சில சொற்களும், இது போன்ற சில வாக்கியங்களும் இங்கு அடிப்படையாக உள்ளன. இவை எந்த ஒன்றையும் சார்ந் திருப்ப தில்லை. ஆனால் இவற்றைச் சார்ந்தே மற்ற ஏனைய உண்மைகள் நிரூபணமா கின்றன. அதாவது சில வாக்கியங்களை வெளிப்படை (நிரூபண) உண்மைகளாகக் கொண்டால், இவற்றிலிருந்து இன்னும் சில உண்மை களாகத் தொடரும் என்பதாம். இன்னும் சொன்னால், வரையறுக்கப்படாத இச்சொற் கள் புதுச் செற்களை வரையறுக்கப் பயன் படுகின்றன, நிரூபிக்கப்படாத வாக்கியங்கள் மற்ற நிரூபண வாக்கியங்களை வரையறுக்க உதவுகின்றன. இவ்வாறு நிரூபிக்கப்படாத வாக்கியங்களே வெளிப் படை உண்மை யாகும். உதாரணமாக யூக்ளிட்டின் (Euclid) வெளிப்படை உண்மைகள் சில வருமாறு:

1. ஒரு பொருளுக்குச் சமமாய் உள்ள மற்றப் பொருள்கள் ஒன்றுக்கொன்று சமம்.

2. இரண்டு சமன்களுடன் சமன்களைக் கூட்டினால் கூட்டுத் தொகைகள் சமம்.

3. இரண்டு தனிப் புள்ளிகளின் வழியாகச் செல்லும் நேர்கோடு ஒன்றே ஒன்றுதான்

தேற்றங்களை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு தேற்றமும் கூடியவரையில் முந்திய தேற்றத்தின் உதவியால் நிரூபிக் கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு புதுக் கருத்தும் முந்திய கருத்துக்களிலிருந்து உண்டாக்கப்பட வேண்டும். இவ்வாறு வருகிறபோது பல புதுக்கருத்துக்கள் கிடைக் கின்றன. இக்கருத்துக்கள் நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக ஏற்றுக் கொள்ளப்படு கின்றன. ஆனால் முதல் வரும் தேற்றத்தை அவ்வாறு நிரூபிக்க முடியாது, மேலும் ஏனைய உண்மைகளை நிறுவ இது அவசிய முமாகின்றது. ஆகையால் நிரூபணத்தை வேண்டியிராத வெளிப்படை உண்மைகள் இங்கு அவசியமாகின்றது (கலைக்களஞ் சியம், தொகுதி மூன்று, 1956: 135). இதனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சில வெளிப்படை உண்மைகள் இங்கு அடிப் படையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இங்கு கணிதம் செய்கிறவற்றை நுணுக்க மாகப் பார்க்கிறபோது, உலகத்தில் மறைந்து கிடக்கின்ற அறிவின் வடிவங்கள் (கருத்து) தொடர்பான சில பொதுப்படை யான அம்சங்களை வெளிக்கொணர்கின்ற முயற்சியாக அமைகின்றது. இவை அறிவிற் குரிய இலக்கணங்களாக அமைகின்றன. பொதுவாகக் கணிதத்தில் பேசப்படுகின்ற அனைத்தும் பொதுமைத்தன்மை வாய்ந் தவையே. கணிதத்தினுடைய எந்த ஒரு பகுதியினதும் இலட்சிய நோக்கம் யா தெனில், பொதுமையாகவுள்ள சில வெளிப் படை உண்மைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு பொதுமையாகவுள்ள இன்னும் பல உண்மைகளை வருவித்துப் பெற்றுக்கொள்வதாகும். தனிப்பட்ட பிரச் சினைகளுக்குக் கணிதத்தின் மூலம் தீர்வு கண்டாலும், அத்தீர்வு அதுபோன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்குமான பொது மையான தீர்வாகவே அமையும். கணிதத் தினுடைய இலட் சிய நோக்கைப் பின்வரும் உரு இலகுவாக விளக்கும்.




எனவே விஞ்ஞான நியாயித்தலின் பிரதான உயிர் நாடிகளாக விளங்கும் உய்த்தறி முறை, தொகுத்தறிமுறை, கணிதம் போன்ற வைகளின் செயற்பாட்டினைச் சுருக்கமாகப் பின்வரும் உருவின் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.




இவைகளில் இருந்து நாங்கள் சுருக்கமாக விளங்கிக் கொள்வது யாதெனில், அளவை யியல், கணித நியாயித்தல்களின் போது, அதாவது உய்த்தறி முறையின்போது பொது மைகளிலிருந்து தனிமங்களிற்கும், தொகுத் தறி முறையின்போது தனிமங்களிலிருந்து பொதுமைகளுக்கும், கணிதத்தின்போது பொதுமைகளிலிருந்து மேலும் பல பொதுமை களுக்கும் செல்கின்ற நெறிமுறைகளாக இவைகள் காணப்படுகின்றன என்பதாகும்.

மேற்கூறியவைகள் பெரிதும் விஞ்ஞான நியா யித்தலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற முறைகளாக இருந்தாலும், ஏனைய துறை களும் இதனைக் கையாள எத்தனிக்ககின்றது. இவை தவிர்ந்த இன்னும் பல நியாயித்தல் முறைகளும் பல்வேறு துறைகளில் பயன்படுத் தப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாக மெய்யி யலில் அறிவுபூர்வமான நியாயித்தல் முறைகள் (Rational Method), பகுப்பாய்வு முறை (Analytical Method), இயங்கியல் முறை (Dialectical Method) போன்றன சம்மந்தப்பட்ட விடயங்களை நியாயிப்பதற்கு மெய்யிய லாளர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக் கின்றன. இம்முறைகள் மூலம் விடயங்கள் நியாயிக்கப்படுகின்றபோது விஞ்ஞான முறைகள் போன்று அத்துணை நுட்பமான நியாயித்தலைப் பெறாவிட்டாலும், ஆராய் கின்ற விடயத்தின் தன்மையைப் பொறுத்து இவை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

அறிவுபூர்வமான நியாயித்தல் முறை எனச் சொல்லப்படுகின்றபோது, சோக்கிறட்டீஸ் முறை, தொகுப்பு முறை, உளவியல் முறை, விமர்சன அல்லது கடந்தநிலை ஆய்வு, புலனறிவாத முறை போன்றவற்றை இதற்கு சில உதாரணங்களாகக் கொள்ளலாம். குறிப்பாக மெய்யியலில் ஆராயப்படுபவை களுக்கு இவை ஓரளவு பொருந்துவனவாக உள்ளன. இங்கு ஆய்வு செய்யப்படுகின்ற விடயம் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்தது. விஞ்ஞானத்தில் ஆய்வு செய்யப்படுகின்ற விடயங்களைப் போன்றதன்று.

பகுப்பாய்வு முறை எனும்போது, கருத்துக் களை மொழிரீதியாக தெளிவுபடுத்துவதைக் குறிக்கிறது. இம்முறை முந்திய மெய்யியல்

வரலாற்றில் காணப்பட்டாலும் தற்கால மெய்யியலில் பிரதான இடத்தை வகிக்கிறது. பகுப்பாய்வு மெய்யியலில் மொழி மெய்யியல் மைய இடத்தைப் பிடித்திருக்கிறது. இங்கு மெய்யியலைக் கோட்பாட்டுத் தளத்திலிருந்து நகர்த்தி செயற்பாடாக மாற்றுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. மொழியை அளவையியல் ரீதியாகப் பகுப்பய்வு செய்கின்ற முயற்சிகளில் பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் ஈடுபட்டனர். இம்முறை எதிர் பார்த்த அளவு வெற்றி பெறவில்லை என்பது அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

இயங்கியல் முறை என்பது மெய்யியல் வரலாறு நெடுகிலும் அவ்வப்போது பயன் படுத்தப்பட்ட முறை ஒன்றாகும். ஹெரக்ளைட்டஸ், சோக்கிறட்டிஸ், பிளேட்டோ போன்றவர்களது ஆரம்பகால சிந்தனைகளில் இம்முறை காணப்பட்டிருந்தாலும் இமானுவல் காண்ட், ஹெகல், கார்ல் மார்க்ஸ் போன்றவர்கள் இம் முறையைச் சிறப்பாகக் கையாண்டுள்ளனர். இது சமூகவியல் விஞ்ஞான நியாயித்தல் முறைக்கு மிகவும் உகந்த ஒரு முறையாக இருந்தும்கூட, முறையியல் நோக்கில் இதனை அறிஞர்கள் அவ்வளவு தூரம் கண்டு கொள்ளவில்லை. சிந்தனையின் மிகவும் பொதுவான செயற்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு இம்முறை பயன்படுத்தப் பட்டாலும் ஹெகல், மார்க்ஸ் போன்றவர்கள் இயற்கை, சமூதாயம், ஆன்மீகம் என மிகவும் பரந்துபட்ட அளவில் இதன் பிரயோகத்தினை கால்பதிக்கச் செய்தனர்.

## ஒழுக்கவியல் நியாயித்தல்

ஒழுக்கவியல் நியாயித்தல் என்பது அறிவுத் தொகுதிக்குப் பொருந்துகிற வகையில் ஒழுக்கவியல் தொடர்பான ஒரு புரிந்து கொள்ளல் முயற்சியாகும். இப்புரிந்து கொள்ளல் முயற்சியை நாம் செவ்வனே வரையறை செய்து புரிந்துகொள்ள ஒழுக்கவியல் தொடர்பானதும், நியாயித்தல் தொடர்பானதுமான ஒரு நிதானமானதும், ஆழமானதுமான பார்வை அவசியமாகும். ஒழக்கவியலை நாம் எழுந்தமான முறையில் ஆராய்வது அதனுடைய சிறப்பியல்பைச் சிதைத்துவிடும் என்பதால், அதனை அதனுடைய சகல பரிமாணங்களில் நின்றும் நோக்க வேண்டும். அறவியல் எனும்போது பின்வரும் மூன்று பரிமாணங்கள் அடிப்படையானவை யாகும்.

1. மனித நடத்தை அல்லது செயற்பாடு
2. சமூக இசைவு (பொருத்தம்)
3. மனித இலட்சியம்

சமூகம் என்ற களத்தில் இடம் பெறுகின்ற மனித நடத்தை பற்றியதுதான் அறவியலாகும். இந்நடத்தை பல்வேறு நிபந்தனைகளுடன் தொடர்புபட்ட வகையிலேதான் ஒழுக்க நடத்தையாக இடம்பெறுகிறது. பொதுவாக மனித நடத்தையில் ஒழுக்கம் பிரதிபலிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இங்கு ஒழுக்கத்தின் புலப்படு தன்மையை நாங்கள் உணரலாம். மனித நடத்தை எனும் போது ஒருவன் எண்ணுவதுகூட அதன்பாற் படும். ஒவ்வொரு மனிதனுடைய நடத்தையும் பல்வேறு வழிகளில் அமைவதாகும். அவை அனைத்தும் அறவியலின் எல்லைக்குள் வராது. ஒரு நடத்தை அறவியல் அந்தஸ்த்தைப் பெறுவதற்கு அது சில நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும்.

சமூக இசைவு என்பது தனிமனித நடத்தைக்குரிய சமூக அங்கீகாரமாகும். நடத்தையின் சமூக இசைவு தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இருப்பினும், தனிமனிதன் சமூகத்தின் ஓர் அங்கம் ஆகையால், இங்கு சமூக இசைவு ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. பொதுவாக ஒழுக்க நடத்தைகள் சமூகப் பின்னணியில் இடம் பெறுவதாகும். எனவே நடத்தையின் சமூக இசைவு என்பது ஒழுக்க நடத்தைக்கு வேண்டப்படுவதாகும். சில அறவியலாளர்கள் ஒழுக்கப் பெறுமானத்தை சமூக இசைவின் அடிப்படையில் வழங்கிருக்கிறார்கள். முதலில் ஒரு நடத்தை ஒருவனில் இசைவுறுகிறபோது அது சமூகத்திலும் இசைவுறும் என்ற கருத்தாக்கமானது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வில் மனித இலட்சியம் என்ற பதமானது ஏனைய இரு பரிமாணங்களுக்கு

அடிப்படையானதாக, அவற்றை இயக்குவன வாக உள்ளவற்றுடன் தொடர்புபட்டதா கவும், ஒருவனுடைய இறுதி இலக்கு அல்லது அவனுடைய தூய நிலை அடங்கலாக, பௌதிகதீதம் அனைத்தும் அடங்கிய ஒரு பகுதியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஒரு முழுமையான ஒழுக்கவியல் ஆய்வு இம்முப்பரிமாணங்களையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். இதில் எந்த ஒரு பகுதியும் தவிர்க்கப்பட்டு ஒழுக்கவியல் ஆராயப்படுமாயின் அது ஓர் முழுமையான ஒழுக்கவியல் ஆய்வாக அமையாது. இவற்றில் மனித நடத்தை, சமூக இசைவு என்பன மனித அனுபவத்தில் புலப்படக் கூடியவை. ஆனால் மனித இலட்சியம் தொடர்பான அறவியலின் கூறுகள் சிக்கல் மிகுந்தவை, ஆழமானவை. மனித நடத்தை, சமூக இசைவு என்பன ஓரளவு விஞ்ஞான ஆய்வு எல்லைக்குள் வரக்கூடியவை. மனித இலட்சியம் ஒருபோதும் விஞ்ஞான ஆய்வு எல்லைக்குள் வரமுடியாதவை, ஆனால் அறவியலுக்கு அடிப்படையானவை. எனவே, இதற்குரிய நியாயித்தல் முறை விஞ்ஞான நியாயித்தல் முறையிலிருந்து பிரத்தியேக மானதாக அமைய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

தற்காலத்தில் எழுச்சி பெற்று வளர்ந்துள்ள அதிகமான ஒழுக்கவியற் சிந்தனைகள் மனித நடத்தை, சமூக இசைவு என்ற இரு பரிமாணங்களில் மட்டுமே அதிக அக்கறை கொண்டிருக்கின்றன. அவைகள் மனித இலட்சியம் பற்றி அதிக அக்கறை கொள்ள வில்லை. இதற்குக் காரணம் பௌதிகம் பற்றிய தீவிர விஞ்ஞான வளர்ச்சியும், அதன் சிறப்பான முறையியலுமாகும். இந்தவகையில் தற்கால ஒழுக்க மெய்யியல் தொகுப்புகள் ஒழக்கவியல் தன்மைகளில் இனக்குறைப்புச் செய்யப்பட்டு எழுச்சி பெற்ற வைகளாகவே தோன்றுகின்றது. குறிப்பாக மேலைத் தேய மெய்யியல் மரபில் சோக் கிறட்டிஸ், பிளேட்டோ போன்றவர்களால் அறவியல் தொடர்பாகக் கொள்ளப்பட்ட கருத்துக்களில் இவ்வனைத்துப் பரிமாணங் களும் காணப்பட்டாலும், பிற்காலங்களில் ஏற்பட்ட அறிவியல் சிந்தனை வளர்ச்சி காரணமாக மேலைத்தேயத்தில் மனித இலட்சியத் தன்மைகள் தொடர்பான பார்வைகள் மெய்யியலாளர்களால் பெரிதும் வளர்க்கப்படவில்லை. ஆனால் இந்த இடை வெளியைப் பூர்த்தி செய்கின்ற ஒரு மெய்யிய லாளராக நாம் இமானுவல் காண்ட்டைக் காணலாம்.

நவீன கால மெய்யியலாளர்கள் மத்தியில் ஒழுக்கவியலின் குறிப்பிடத்தக்க எல்லை வரை சென்று செயற்பட்ட ஒரு மெய்யிய லாளராக இமானுவல் காண்டைக் கருத முடியும். ஏனெனில் நவீன கால மெய்யிய லாளர்கள் பலர் அறிவியல் மறுமலர்ச்சி காரணமாக மெய்யியல் விடயங்களை நியா யித்து நிரூபிப்பதில் அக்கறை உடையவர் களாக செயற்பட்டனரே தவிர, மெய்யியல் விடயங்களுக்கு அடிப்படையாகவுள்ள அதன் உண்மையான இயல்பினைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். இதனால் இவர் களது நியாயித்தல் வழிமுறைகளும், விடய தானமும் முரண்பட்டு நின்றதை காண்ட் தெளிவுபடுத்தியிருக்கிறார். குறிப்பாக ஐரோப்பிய அறிவுமுதல்வாதிகளும், பிரித் தானிய அனுபவ முதல்வாதிகளும் இத்த கைய போக்கில் சென்றனர் எனலாம்.

அறவியலை நியாயிக்கக் கூடிய தளங்களைப் பற்றி நாம் ஓரளவு புரிந்து கொள்வதற்கு அதனை விஞ்ஞான அறிவின் அடிப்படைத் தளங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பலன் தருவது மட்டுமன்றி இவ்விரு துறையினதும் வேறுபாடான தன்மையைப் புலப்படுத்துவது மாகும். மனித இலட்சியம் குறித்த அறவிய லின் எல்லைப் பகுதிகளை பார்க்கிறபோது, அது பெரிதும் தானே விளங்கும் அறிவுடன் (Reason in itself) தொடர்புபட்டதாக அமை கின்றது. ஆனால், அறிவியலின் எல்லைப் பகுதிகளைப் பாரக்கிறபோது, பொது அறிவின் புறச்சூழல் பற்றியதாக அமை கின்றது. எனவே, இவை இரண்டும் அடிப் படையில் வேறுபட்டவை. அறிவியலுக்கு வேண்டப்படுகிற விடயங்கள் அறிவின் புறச் சூழலோடு சம்மந்தப்பட்டது எனக் கூறுகிற போது, கோட்பாடுகள் ஊடாக மனிதனுக்குப் புரியவைக்கப்பட்டு பிரயோகிக்கத்தக்கவை

என்பதைச் சுட்டுவதாகும். செய்து காட்டி விளக்கப்படக்கூடிய இவைகள் மனிதனுக்குப் புறத்தேயுள்ள இயற்கை நிகழ்ச்சிகள் பற்றிப் பகுதிப் பொதுமையுடன் பேசக்கூடியவை யாகும். அறிவியல் விதிகள் கொள்கைகள் இத்தகையதே. இத்தகைய அறிவின் புறச் சூழலில் அமைகின்றவை அறிவின் இன்றிய மையாத பண்பாகிய தனிமங்களுக்குள் ஊடுருவியிருக்கும் பொதுமையைக் காணு மாத்திரத்தில் நிறைவுபடக் கூடியவை யாகும். அறிவின் புறச் சூழலின் இன்றியமை யாத பண்பாக விளங்குகின்ற பொதுமை யைப் பெற்றுக்காட்டுவதையும், அதில் தனியனுக்குள்ள பங்கையும் நியாயிப்பதற் காகவே அளவையியல் கணிதம் போன்ற துறைகள் பயன்படுகின்றன. அளவை யியலும் கணிதமும் இதற்கே போதுமாயும் உள்ளன. காட்டீசிய முறையில் காணப்படு கின்ற ழ்நான் சிந்திக்கின்றேன், ஆகவே நான் இருக்கின்றேன்ஃ என்ற தற்புல உண்மையும், இதுபோன்ற வேறுபலவும் இத்தகையதே. மனிதனுடைய தூய அறிவு இவ்விடயங்கள் மட்டிலுமே செல்லுபடியாகக் கூடியது என்பது காண்டின் வாதமாகும். காண்டுடைய முதலா வது விமர்சன நூல் இத்தகைய விடயங்கள் பற்றி மிகவும் ஆழமாகப் பேசியிருக்கிறது என்பது இங்கு நோக்கத்தக்கது.

தானே விளங்கும் அறிவு (Reason in itself) எனும்போது கோட்பாட்டாக்கத்திற்கு அப் பாற்பட்ட செயலறிவோடு மாத்திரம் சம்மந் தப்பட்ட ஒன்றாகும். செய்து காட்டி புரிய வைக்க முடியாத அறிவின் இப்பகுதியினை பொருள் கோளியல் அடிப்படையில் ஓரளவு கிரகித்துக் கொள்ள முடியும். மனித இலட் சியம் எனும் பகுதியினுள் மிகுதியும் சம்மந் தப்பட்டதாகக் கருதப்படும் இத்கைய அறிவு பூரண பொதுமைத்தன்மை வாய்ந்தது. சர்வ வியாபகத் தன்மை என்ற சொல் இதற்கே செம்மையாகப் பொருந்தக் கூடியதாகும். இவ்வாறான தளத்தில் நின்று பேசக் கூடிய வையே பொய்ப்பிக்க முடியாத உண்மை யான விஞ்ஞானமாக இருக்க முடியும். இங்கு அறிவாற்றலின் உட்பரி மாணமாகப் பேசப்படும் இவ்வகை அறிவை அகவய மானது (Subjectivity) எனப் பொருள் கொள் ளலாகாது. மேலும் இது முன்னது ஏதுவான (a-priori) ஒரு விடயமாகும்.

தானே விளங்கும் அறிவோடு (Reason in itself) தொடர்புபடுகின்ற அறிவை நுட்பமாக வரை யறை செய்யக்கூடிய அல்லது கோட்பாட் டிற்குள் போடக்கூடிய அல்லது அவற்றினைத் துல்லியமாக நியாயிக்கக்கூடிய முறைக களோ, மொழியோ இன்னும் கண்டுபிடிக்கப் படவேயில்லை. ஏனெனில், இது தன்னையே பூரணமாக உணர்கின்ற ஓர் அனுபவ நிலையோடு தொடர்புபட்டிருப்பதால் இது மிகக் கடினமானது. ஆனால் இவ்வகை அறிவின் சாத்தியப்பாட்டை தனித்தனிப்பட்ட மனிதர்களின் அறிவாற்றல்களுக்கு இடையில் உள்ள பொதுமை நிலைப்பட்ட தன்மையை ஆராய்வதன் ஊடாக ஓரளவு புரிந்து கொள்ள முடியும். மனிதர்கள் தனித்தனிப் பட்ட தீவுகளாக இருப்பினும் அவர்கள் அனை வரிலும் உள்ள அறிவாற்றல் பொதுமைத் தன்மை பெற்று விளங்குவதனால்தான் மனிதர்களுக்கிடையில் கருத்தொருமைப் பாட்டிற்கு வாய்ப்பிருக்கின்றது என்பது இங்கு நோக்கத்தக்கது.

அறிவின் புறச் சூழலோடு மட்டும் சம்மந்தப் படுகின்ற அறிவியலில் விளங்கக் கூடியன யாவும் அனுபவத்தில் விளங்குவன. ஆனால், இந்த அனுபவத்தை உண்டாக்கி நெறிப் படுத்துபவையுடன் தொடர்புபட்டதே தானே விளங்கும் அறிவாகும். மனிதனுக்கு மனிதன் அறிவின் புறச்சூழலில் மாறுதல் ஏற்பட்டாலும் மனிதனுக்குள்ள தானே விளங்கும் அறிவு தொடர்பில் ஒருபோதும் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. அவ்வாறு மாற்றம் உள்ள மனிதரைக் காணின் அவரைப் பகுத்தறிவு கொண்டவராகக் கணிக்க முடியாது.

விஞ்ஞான அறிவினால் அமையப் பெற்ற விதிகள் கொள்கைகளைப் பொறுத்தவரை அவை அறிவின் புறச் சூழலோடு மட்டுமே அமைந்து விடுவதுடன் விஞ்ஞான அறி வினை நியாயிப்பதற்கான கணிதமும் அள வையியலும் இதற்கே போதுமாயும் உள்ளன. பெரும்பாலும் விஞ்ஞானம் தானே விளங்கும் அறிவு தொடர்பில் அக்கறை கொள்வ தில்லை. விஞ்ஞானம் ஆய்வு செய்கின்ற விடயங்களைப் பொறுத்தவரை தானே விளங்கும் அறிவையும் உள்ளடக்கிய வகையிலான முழுமையான அறிவு அதற்கு

அவசியமன்று. இத்தகையதொரு சூழலில் விஞ்ஞான விதி, கொள்கைகள் அமைவதனாலேதான் தோமஸ்கூன் தனது கட்டளைப்படிம (Paradigm) முறையில் அதன் வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடக்கூடியதாய் இருந்தது. அதாவது வழக்கத்திலுள்ள சில விதி, கொள்கைகள் அவற்றின் பொதுமைத் தன்மைக்குச் சில சூழ்நிலைகளில் பங்கமேற்படுகிறபோது அவற்றில் மாற்றம் செய்யவேண்டிய தேவை விஞ்ஞானிகளுக்கு ஏற்படுகிறது.

கணிதம் கருத்துருவாய் இருந்து கொண்டு நடைமுறை விடயங்களை ஒருங்கிணைக்கின்றது எனில் மனத்தால் பொருள்களுக்கு அமையும் இயல்புகளைக் கணிதம் அறிய முற்படுவதினாலேதான் இது சாத்தியமாகின்றது. அறிவின் புறச்சூழலில் அமையும் கணிதம் தன்னகத்தே சில உய்த்தறி விதிமுறைகளைக் கொண்டுள்ளது. இது சில வெளிப்படை உண் மைகளின் வழி இன்னும் பல உண்மைகளை வருவித்துக் கொண்டு அதன் வழித் தோற்றப்பாட்டு உலகினை அணுகி, ஒழுங்குபடுத்தி எம்மில் விளக்கமுறச் செய்கின்றது. அதாவது அறிவின் புறச் சூழலின் கருத்துருவாக உள்ள சில பொதுமை நியதிகளை நுட்பமாக வரையறுப்பதன் ஊடாக சில புறவுலக நிகழ்ச்சிகளை சில நெறிமுறைகளினூடாக அணுகும்படி எம்மைச் செய்துவிடுகிறது. அறிவின் புறச் சூழலின் தொழிற்பாட்டிற்கு இது வேண்டுவதாகிறது. அளவையியலும் இதுபோன்றதொரு தொழிற்பாட்டையே செய்கின்றது. இத்தொழிற்பாடு கருத்துப் பரிமாற்றத்திற்குட்பட்ட கோட்பாட்டுத் தளங்கள் ஊடாகவே நடைபெறுகிறது. இதுபோல 'ஒழுக்கம் நல்லது' என்ற வெளிப்படை உண்மை கொண்டு கணிதம் மற்றும் அளவையியலூடாக சில கோட்பாட்டு விளக்கங்களைப் பெறக்கூடியதாக இருந்தாலும் ஒழுக்கவியலைப் பொறுத்தவரைக்கும் அது எமக்குப் பிரயோசனம் அளிப்பதில்லை. மாறாக தானே விளங்கும் அறிவுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற ஒழுக்கவியலின் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு 'நடத்தையை எந்த ஒன்றிலும் சார்புறுத்தாது கடமை கடமைக்காகவே' என்ற தோரணையில் செயலாற்றுகிறபோது புரிந்துகொள்ள முடியும் என்பது காண்டின் வாதமாகும். இங்கு காண்டினால் இத்தகைய ஒழுக்கவியல்சார் புரிதலுக்கு நடைமுறை அறிவு வற்புறுத்தப்படுகிறது. மேலும் இத்தகைய ஒழுக்கவியலின் தளம் மனிதனால் தொடர்பு கொள்ளக் கூடியவை (Communicable) என்பதுடன், ஒழுக்க வியலுக் குரிய புரிதலின், நியாயித்தலின் தளம் முழுமையாக மாற்றப்படுகிறது.

ஒழுக்கத்தை அறிவுடன் முடிச்சுப் போடுகின்ற தன்மை மெய்யியல் வரலாறு நெடுகிலும் காணக்கூடியதாக உள்ளது. சோக்கிறட்டீஸ், பிளேட்டோ, ஸ்பினோசா, காண்ட் போன்ற பல மெய்யியலாளர்கள் ஒழுக்கத்தை பகுத் தறிவின் ஓசையாகவே கண்டிருக்கின்றனர். இவர்கள் இவ்வாறான அறிவை சாதாரண விஞ்ஞான அறிவு என்ற தளத்தில் நின்று பாராது பல வேறுபட்ட வழியில் பார்த்துள்ளனர். அறவியல் ஆணையைப் பகுத்தறிவின் ஓசையாகக் காணும் இவர்கள் ஒழுக்கவியலுக்குரிய அறிவின் உள்ளார்ந்த தளத்தைச் சுட்டிக்கட்டுவதற்கு பெரிதும் முயன்றனர். இவர்கள் அறவியலைச் சார்பற்ற விதத்தில் கட்டிக் காக்க எடுத்த முயற்சிகள் அளப்பரியவை. ஒவ்வொருவரிடத்திலும் எதிரொலிக்கின்ற பொதுமையான தளமே இவர்களுக்கு அக்கறைக்குரியதாக இருந்தது. அறவிதி பகுத்தறிவின் உள்ளார்ந்த விதியாக அமைகிறபோதே அவர்கள் எதிர்பார்க்கின்ற சார்பற்ற, மாற்றமற்ற, பொதுமையான ஒன்றாக அது அமைய முடியும் என்பது அவர்களுடைய அபிப்பிராயமாகும். இவர்கள் இதனைச் சாதிக்கப் பல்வேறு முறைகளினூடாக அணுகினர்.

ஒழுக்க நடத்தை முதலில் ஒருவனில் இசைவுறுதல் என்பது அவனில் எதிரொலிக்கின்ற அறிவின் அற ஆணைக்கு ஏற்ப அவன் நடத்தலாகும். ஒருவன் ஓர் ஒழுக்க நிலைமையை எதிர்கொள்கிறபோது, அவனுடைய அறிவு இதில் எது ஒழுக்கம் என்பதைத் தெரிவித்து விடும் (இதுவே பகுத்தறிவின் ஓசையாகும்). இனி அதன்படி ஒழுகுவதும் விடுவதும் அவனுடைய கையில்தான் உள்ளது. (இங்கு நடத்தையைத் தெரிவு

செய்வதற்கான முழுச் சுதந்திரமும் அவனிடம் இருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்). இதில் அவன் பகுத்தறிவின் ஓசைக்கேற்ப ஒழுகுவானாயின் அது அவனில் இசைவுறுவதாகும். இவ்வாறு அது அவனில் இசைவுறுகிறபோது அது முழுச் சமூதாயத்திலும் இசைவுறுவதாகும் (இங்கு பகுத்தறிவின் ஓசை என்பது எல்லோருக்கும் பொதுவாயுள்ள சர்வவியாபகத் தன்மை வாய்ந்த தானே விளங்கும் அறிவின்பால் அமைவதாகும்). அவ்வாறு ஒருவன் பகுத்தறி வின் ஓசைக்கேற்ப ஒழுகாவிட்டால் முதலில் அது அவனில் முரண்படுவதோடு முழுச் சமூதாயத்திலும் முரண்படுவதாகும். அதாவது அவன் தனது இயல்பான அறிவின் ஆணைக்கு கட்டுப்படவில்லை என்பதுடன் அவ்வழியில் அவன் முழுச் சமுதாயத்தின் இயல்பான தன்மைக்கும் கட்டுப்படாமல் போகிறான். அதனால் அவன் முழுச் சமுதாயத்திலும் முரண்படுகின்றான். இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் ஓர் ஒழுக்க நடத்தை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க சர்வவியாபகத் தன்மை வாய்ந்தது என்பதும், ஓர் ஒழுக்கமற்ற நடத்தை தன்னில் முரண்படுகின்ற அதேநேரம் பொதுமையற்றும் அமைகிறது என்பதுமாகும்.

மனித இலட்சியப் பகுதி தொடர்பாக வாதிக்கப்பட வேண்டிய ஓர் அம்சம் உள்ளது. அதாவது, ஒருவன் தான் பகுத்தறிவினது ஓசையின்படி ஒழுகுவதனால் தனக்கு என்ன பலன் கிடைக்கும் என்ற அம்சமாகும். இதற்கு மெய்யியலாளர் மத்தியில் பல விடைகள் கிடைத்தாலும், இவற்றில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது சமுதாய நலன் குறித்தது. அதாவது அறிவின் புறச் சூழலிலிருந்து வியாக்கியானம் செய்யக்கூடிய, அறிவியல் சூழலில் நின்று பார்க்கக்கூடிய, சுமுகமான சமுதாய வாழ்விற்கு வழிவகுப்பதுபற்றிய விடயம் குறித்தவை. இரண்டாவது தனிமனித இறுதி இலட்சியம் குறித்தவை. இது பற்றிய ஆய்வும் தேடலும் பூரண பௌதிகதீதத்தின் பாற்பட்டது. இது தொடர்பாக அறிவுபூர்வமான பல வியாக்கியானங்களைப் பல மெய்யியலாளர்கள் முன்வைத்திருந்தாலும், குறிப்பாக இமானுவல் காண்ட் என்ற மெய் யறிஞர் அறிவார்ந்த நம்பிக்கைகளாக முன்வைத்த சில கருத்துக்கள் சிறப்புடைய தாகும். இவர் அறவியலுக்கு முற்கோளாக செயல் சுதந்திரம், ஆன்மாவின் தொடர்ச்சி, கடவுள் என்பவற்றைக் கொள்வதன் ஊடாக பலன் பற்றிப் பேசியிருக்கிறார்.

## முடிவுரை

நாங்கள் ஒழுக்கவியல் தொடர்பாக ஒரு முடிவுக்கு வருவோமாகில், விஞ்ஞானம் ஆய்வு செய்கின்ற விடயங்களிலிருந்து ஒழுக்கவியல் தொடர்பான விடயங்கள் வேறுபட்டவை. விஞ்ஞானம் அறிவின் புறச் சூழலோடு நின்று விடுகிறது. ஆனால் ஒழுக்கவியல் அதன் தோற்றப்பாட்டளவில் அறிவின் புறச் சூழலைக் கொண்டிருப்பதுடன், அதனுடைய இலட்சியத் தன்மையில் புறச் சூழலையும் தாண்டி தானே விளங்கும் அறிவில் பங்கு கொள்பவை. ஒழுக்கவியலின் அடிப்படையான கேள்விகள் பெரும்பாலும் அவை புலப்படக்கூடிய நடத்தையாக இருப்பினும், சமூக இசைவாக இருப்பினும் அதன் பெரும்பகுதி எப்படியேனும் மனித இலட்சியத் தன்மைக்கு ஊடாக தானே விளங்கும் அறிவுடன் தொடர்புடையவை.

எனவே, ஒழுக்கவியலில் உள்ளவைகளை நியாயிப்பதற்கு தானே விளங்கும் அறிவுடன் தொடர்புபடக்கூடிய திட்டமாக வரையறுக்கப்பட்ட நியாய முறை ஒன்றே அவசியமாகும். ஆனால் இங்கு அவ்வாறானதொரு நியாய முறை இருப்பதாகத் தெரியவில்லை. அதற்காக விஞ்ஞான நியாயித்தல் முறையைப் பாவிப்பதும் தவறுடையது. எனவே, இச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இந்நிலமைகளை எமக்கு மிகவும் தெளிவாக உணர்த்திய இமானுவல் காண்டின் வழிச்சென்று இவ்விடயங்களை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ளுதலானது, ஒரு வகையில் நியாயித்தலின் ஒரு படி நிலையை அடைந்து கொள்வதாகும்.

## References:

Albert, E.M., Denise,T.C., Peterfreund,S.P., (1987) *Great Traditions in Ethic,* Eurasia Publishing House, New Delhi, India.

Barbara MacKinnon, (2001) *Ethics: Theory and Contemporary Issues*, Wadsworth/ Thomson Learning, USA.

Charles Parsons, (1983) *Mathematics in Philosophy,* Cornell university Press, USA.

Stephen F. Barker, (1987) *The Elements of Logic,* Third Edition, MacGraw-Hill, London.

Immanuel Kant, (1923) *Fundermental Principles of the MetaPhysics of Ethics,* trans: T. K. Abbott, Longmans, Green & Co. Ltd, London.

ð ð ð ð ð ð , (1953) *Prolegomena to any future metaphysics that will be able to present itself as a Science*, trans: Peter G.Lucas, Manchester University Press, Manchester.

ð ð ð ð ð ð , (1909) *Critique of Practical Reason and the Other Works on the Theory of Ethics,* trans: T. K. Abbott, Longmans, Green & Co. Ltd, London.

ஆனந்தநாதன் ஆ.க. (1988) *விஞ்ஞானமும் விஞ்ஞான முறைகளும்*, ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை.

கிருஷ்ணராஜா சோ. (2000) 20ம் நூற்றாண்டின் ஒழுக்கவியல் கொள்கைகள். பண்பாடு, இந்து சமயப்பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கொழும்பு, இலங்கை.

Edward Craig, (1998) *Routledge Encyclo pedia of Philosophy*, Ed., Volume 04, London and NewYork.

பரிமணம் அ.மா., (1994) *வாழ்வியற் களஞ்சியம்*, தொகுதி ஏழு, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அவினாலிங்கம் தி.சு., (1956) *கலைக் களஞ்சியம்*, தொகுதி மூன்று, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை.

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# யுத்தத்திற்குப் பின்னர் உறுகாமம் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றமும் உளநிலை மாற்றங்களும்

# RESETTLEMENT OF RUGAM MUSLIM PEOPLE AND THEIR ATTITUDE CHANGES IN POST WAR PERIOD

*ஐ.எல்.எம்.மாஹிர்*

## ஆய்வுச் சுருக்கம்

*இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவருவதனை அவதானிக்கமுடிகின்றது. அந்தவகையில் மக்களின் உளப்பாங்கு மாற்றம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் என்பன முக்கிய விடயங்களாக உள்ளன. கடந்த யுத்த சூழலின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். இத்தகையதொரு பின்னணியிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உறுகாமம் எனும் கிராமத்தில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் கடந்த யுத்த சூழலின் போது அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். தற்போதய சூழலில் இம்மக்களின் மனோநிலையில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தவகையில் குறித்த பிரதேச மக்களின் உளநிலை மாற்றம் மற்றும் மீள்குடியேற்றம் குறித்து இவ்வாய்வு கவனம்செலுத்துகின்றது.*

## அறிமுகம்

இலங்கையில் மிகவும் நீண்ட காலமாக நிலவிவந்த யுத்த சூழ்நிலையானது இங்கு வாழ்ந்து வந்த சகல இன மக்களிடையேயும் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன, உடமைகள் அழிக்கப்பட்டுள்ளன, பொருளாதார இழப்புக்கள், அகதிகளாக மக்கள் இடம்பெயர்ந்து வாழவேண்டிய அவலநிலை, அதாவது இவ்யுத்தம் இலங்கையில் சகல இன மக்களுடைய சமூகப் பொருளாதார, அரசியல், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் என்று சகல விடயங்களையும் ஆட்டங்கானச் செய்துள்ளமை மறுதலிக்க முடியாத உண்மையாகும்.

யுத்தம் ஏற்படுத்திச் சென்றுள்ள அவல நிலைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவையாகும். கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், தெருக்களில் பிரயாணம் செய்ய முடியாத நிலை, சந்தைகளில் பொருட்களை வாங்க முடியாத நிலை, பொது இடங்கள், வழிபாட்டுத் தளங்கள் என்று சகல இடங்களிலும் தற் கொலைத்

தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், குண்டு வெடிப்புக்கள் என்பன இடம்பெற்றதனால் மக்கள் நின்மதி, சந் தோசத்தை இழந்து தவித்தனர். இதனால் மக்கள் விரக்தியின் விழிம்பில் சிக்கித் தவித்தனர்.

இத்தகைய சூழ்நிலை ஓரிரண்டு வருடங் களாகவன்றி மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்துச் சென்றது. அத்தகைய கொடிய அழிவுகளைத்தாங்கி நின்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டின் சகல அடிக்கட்டுமானங்களையும் ஆட்டங்கானச் செய்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை இழந்த உயிர்கள் மீளவும் கிடைத்ததைப்போன்ற ஓர் உணர் வினை மக்கள் மத்தியில் தோற்று வித்துள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான இன்றைய சூழ்நிலையில் மக்கள் அச்சம், பீதியின்றி நாட்டின் சகல பகுதிகளுக்கும் எந்நேரமும் சென்றுவர முடிகின்றது. தற்கொலைத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள், துப்பாக்கிச் சூடுகள், யுத்தக் கெடுபிடிகள், வீதித் தடைகள் யாவும் ஓய்ந்துள்ளன. இது மக்களுடைய மனங்களில் புதிய மாற்றங் களைத் தோற்றுவித்துள்ளது. இச் சூழ்நிலை யானது வாழ்வியலுக்கான ஒரு பாதையை வகுத்துள்ளது. புதிய இலங்கையில் புதிய உதயத்தில் புதிய மனங்களுடன் புதிய வாழ்கையை ஆரம்பிப்பதற்கான ஒரு நிலமை உருவாக்கப்பட்டுள்ளன.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் புதிய அரசியல் சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது. பாரிய அபிவிருத்திப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய முதலீட்டுத் திட்டங்கள், புதிய வர்த்தகத் திட்டங்கள், துறைமுக அபிவிருத்திப் பணிகள், பெருந் தெருக்கள், பாலங்கள் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் உட்கட்டமைப்புப் பணிகள் மீள் ஸ்தாபிக்கப்பட்டு வருவதுடன் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டும் வருகின்றன.

இத்தகைய நிலமையில் யுத்த சூழலில் மக்கள் இருந்துவந்த மனநிலைகளிலிருந்து படிப் படியாக விடுபட்டுச் சாதாரண இயல்பு வாழ்க் கைக்கு மாறிச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. அதாவது யுத்தத்தின் போதான தாக்கங்கள் அதன் வடுக்களிலிருந்து படிப் படியாக விடுபட்டு இயல்புச் சூழல் ஏற்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக யுத்தத் தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட யுத்த பிர தேசங்களாக விளங்கிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அன்றாட வாழ்க் கை சுமூகமாக இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும் பாரிய யுத்தம் நடைபெற்ற பிரதேசங் களா? என்று வியந்து பார்க்கின்ற அளவிற்கு இயல்பு சூழல் அங்கு நிலவிவருகின்றது. குறிப்பாக வடகிழக்குப் பிரதேசங்கள் சில வற்றில் சில சிறிய பிரச்சினைகள் அவ்வப் போது இடம்பெற்று வருகின்றபோதிலும் இயல்பு சூழ்நிலையை நோக்கி படிப்படியாகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவேதான் இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் பல்வேறு மாற்றங் கள் ஏற்பட்டு வருகின்றன. இத்தகையதொரு பின்னணியிலேயே மட்டக்களப்பு மாவட் டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உறுகாமம் எனும் கிராமத்தில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் கடந்த யுத்த சூழலின் போது அகதிகளாக வெளியேற்றப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் அகதி வாழ்க் கை வாழ்ந்து வருகின்றனர். யுத்தத்திற்குப் பின்னரான சூழலின் போது இம்மக்களின் மனோ நிலையில் பல்வேறுபட்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இதன்படி இம்மக்களின் உளநிலை மாற்றம் மற்றும் மீள்குடியேற்றம் குறித்து இவ்வாய்வு கவனம் செலுத்த முற்படுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையானது உறுகாம பிரதேச முஸ்லிம் மக்களின் உளநிலையில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது? அத்தகைய தாக்கமானது அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன? என்ற அடிப்படையில் ஆய்வுக்கான பிரச்சினை அடையாளம் காணப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. இம்மாற்றங்களில் உளநிலை மாற்றம், அகதிகளின் மீள்குடியேற்றம் என்பன குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் யுத்த சூழலில் காணப்பட்ட மக்களின் உளப்பாங்கு யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் மாற்றமடைந்துள்ளது. இதனால் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் மீளவும் தம் சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கான சூழலையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த யுத்த சூழ்நிலையின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. இத்தகைய துர்ப்பாக்கிய நிலமைக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட உறுகாமம் முஸ்லிம் மக்களும் தள்ளப்பட்டனர். இவ்வாய்வானது மேற்படி ஆய்வுப் பிரச்சினையை மையமாகக் கொண்டு பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்ள முற்படுகின்றது.

- இவ்வாய்வின் போது உறுகாமத்திலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம், அதுதொடர்பான பிரச்சினைகளை இணங்காண்பது.

- உறுகாமத்திலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் நாட்டில் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் அவர்களின் உளப்பாங்கில் பல்வேறுபட்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களின் அத்தகைய உளநிலை மாற்றங்களை அடையாளப்படுத்தல்.

- தவிர உறுகாமம் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், அவர்களின் உளநிலை மாற்றம் தொடர்பாக சில சிபாரிசுகளை முன்மொழிவதும் இவ்வாய்வின் மற்றொரு நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் உறுகாமம் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் அவர்களின் உளப்பாங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவாக புத்தகங்கள் மற்றும் இணையத்தளச் செய்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளே ஆய்வில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி இதற்கான தரவுகள் நேரடி அவதானம், வினாக்கொத்து, பேட்டி முறை, குழுக் கலந்துரையாடல் போன்றவற்றிலிருந்து பெறப்படுள்ளன.

உறுகாமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகள் எட்டு (08) மீள் அமைவிடங்களில் மொத்தம் 560 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தற்போதைய சூழலில் தம் சொந்த இடங்களில் மீளவும் உடனடியாக குடியேற விரும்பாத 428 குடும்பங்களிலிருந்தும் ஐந்து குடும்பங்களுக்கு ஒரு குடும்பம் (5:1) எனும் அடிப்படையில் 85 குடும்பங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட வினாக் கொத்துக்களில் தரப்பட்டிருந்த தகவல்களைக்

கொண்டு அம்மக்களின் உளப் பாங்கு மாற்றங்கள் தொகுத்தறி முறை யினைப் பயன்படுத்தி பொது முடிவு காணப்பட்டுள்ளது.

இவை தவிர அரச ஊழியர்கள், ஊர்த் தலைவர்கள், பள்ளி நிர்வாக சபையினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், உறுகாமம் முஸ்லிம் வாலிபர் சங்க உறுப்பினர்கள், அகதி மாணவர்களுக்கான மீள் ஸ்தாபன அமைப்பின் உறுப்பினர்கள், கல்வி அபிவிருத்திச் சங்கம், மனித எழுச்சி அமைப்பு உறுப்பினர்கள் போன்றவர்களுடனான பேட்டிகளின் போது பெறப்பட்ட தரவுகள் ஆய்வில் பொது முடிவு காண்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. தவிர நான்கு (04) குழுக் கலந்துரையாடல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன

இவ்வாய்வு முறைகளின் ஊடாகப் பெறப்பட்ட தரவுகளை பகுத்தும் தொகுத்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகளிலிருந்து ஆய்வின் பொது முடிவு பெறப்படுகின்றது.

## கோட்பாட்டு அடிப்படைகள்

### மீள் குடியேற்றம் (Resettlement)

மீள் குடியேற்றம் என்றால் என்ன? அது யாருக்கு, எத்தகைய சூழ்நிலையில், எவ்வாறான வசதிகளுடன் செய்யப்பட வேண்டும். என்ற அடிப்படைத் தத்துவத்தையும் அகதிகளுக்குப் பொருத்தமான மீள்குடியேற்றம் எவ்வாறு இருக்க வேண்டும். என்ற அம்சங்கள் பற்றி ஆராயப்பட வேண்டியுள்ளது.

இதற்காக அரசாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் அகதிகளுக்காக செய்யப்பட்டு வருகின்ற வாழ்விட ஒழுங்குகளுடன் தொடர்புடைய சொற்பிரயோகங்களின் கருத்தினை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் அகதிகளாகப் பராமரிக்கப்படுகின்ற போது அவ்வகதிகள் வாழும் இடத்தை அகதி முகாம் (Refugee Gamp) அல்லது நலன்புரி நிலையம் (Welfare Centre) என்று அழைக்கப்படும். அகதிமுகாம் ஒன்று மற்றொரு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் போது ஏற்படுகின்ற அமைவிட மாற்றத்தை இடமாற்றம் (Re-Location) என்றும் அழைக்கப்படும்.

ஆனால் அகதிகள் மீண்டும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பும் சூழ்நிலை ஏற்படும் போது அவர்களின் சொந்த இடத்தில் மீளக் குடியேற உதவுகின்ற பணம், பொருள், சுயதொழில், கிராமம், கல்வி, நீர்ப்பாசனம் போன்ற அடிப்படை வசதிகளை திருத்தி அபிவிருத்தி செய்து கொடுப்பதன் மூலமான உதவிகளை - மீள் குடியேற்றம் (Resettle ment) குறிக்கின்றது *(நூருள்ஹக்:1996).*

மேற்குறித்த பதங்களில் அகதிகளை அவர்களின் பூர்வீக இடங்களில் மீள் குடியேற்றம் செய்தல் என்ற அம்சத்தை எடுத்துக் கொண்டால் இம் மீள்குடியேற்ற முயற்சிகளுக்கு உதவி செய்ய வேண்டியது அரசினதும் சர்வதேச அமைப்புக்களினதும் கடமையாகும் என்று சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் கூறுகின்றன. இந்த அடிப்படையில் அகதிகளின் சொந்த இடத்திலான மீள் குடியேற்றத்திற்கான பணம், பொருள், ஏனைய தொழிநுட்ப உதவிகளை வளர்ச்சி பெற்ற நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் வழங்கி வருகின்றன.

### உளப்பாங்கு (Attitudes)

சமூக உளவியலில் உளப்பாங்கு இன்றியமையாத ஒன்றாகும். மனப்பான்மை அல்லது உளப்பாங்கு என்ற சொல்லானது வெவ்வேறு வழிகளில் வரையறுக்கப்படுகின்றது. இதனால் அதனை மிகத் துல்லியமாக வரையறைசெய்வது கடினமாகும்.

உளப்பாங்கு பற்றி **GW. Allport** என்பவர் கூறும் போது:ħஅனுபவங்களின் மூலம் ஒன்றுபடுத்தப்பட்ட மனம் மற்றும் நரம்புசார் ஓர் ஆயத்த நிலைð என்றார்

New Comb என்பவர் கூறும் போது : ´செயல் தூண்டுதல் அல்லது உணர்ச் சியை எழுப்புவதற்கான ஓர் ஆயத்த நிலைµ என்றார்

Sargent and Williamson என்பவர்கள் கூறும் போது : ´தனி மனிதர்கள் பொருள் அல்லது சூழ்நிலை தொடர்பாக ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்து கொள்ளச் செய்கின்ற ஒருங்கிணைந்த கற்றறிந்த ஒரு போக்குµ

Daniel Katz and Ezra Scotland : ´ஒன்றைப் பற்றி மதிப்பீடு செய்கின்ற தனிமனிதனின் போக்குµ (*ச.சரஸ்வதி : 2000)*

மனப்பான்மை மனிதனுக்கு மனிதன் வேறு படக் கூடியது. இது ஓர் உள்ளார்ந்த காரணி யாகும். அதன் சிறப்புக் கூறுகளைப் பின் வருமாறு வரையறுக்கலாம்.

- சூழலுடன் வளர்க்கப்படுகின்றது.
- மாறும் தன்மையுடையது நிலையானது
- அக – புறக் காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்தும்
- தனிமனிதர்களையும் குழுக்களையும் பற்றியது
- ஊக்குவித்தல் சார்புடையது
- குழு உறுப்பினர்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

உளப்பாங்கு என்பது ஒரு நிகழ்வில் அல்லது ஒரு பொருளில் நாம் கொண்டுள்ள உளப்பாங்கின் அடிப்படையிலேயே நாம் அதனை புலக்காட்சி பெறுகின்றோம். என்பதனைக் குறிக்கிறது உதாரணம்: ஜப்பானின் உற்பத்திகள் தரமானவை என்று நினைத்தால் அங்கு உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருள்களும் தரமானவையாகத் தெரியும் (கல்வி உளவியல்)

எனவே உளவியலாளர்களின் கருத்துப்படி ´ஒருவனின் மனப்பாங்கே அவனது நடத் தையை உருவாக்குகிறதுµ இதனால் நடத்தை அல்லது செயற்பாட்டை விளக்குவதற்கு மனப்பான்மை பற்றிய அறிவின் அவசியம் புலனாகின்றது.

ஆய்வுப் பிரதேசம் - உறுகாமம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அதாவது செங்கலடி – பதுளை A5 வீதியில் 78 சதுர கிலோமீட்டர் பரப்பில் இயற்கை வனப்பும் வளமும் நிறைந்த ஒரு கிராமம் உறுகாமம் ஆகும். இக்கிராமமானது ஏறாவூரிலிருந்து சுமார் 18 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் சுமார் 78 தமிழ் குடும்பங்களையும் 148 முஸ்லிம் குடும்பங்களையும் உள்ளடக் கியதாக 226 குடும்பங்களை சேர்ந்த மக்கள் இன வேறுபாடுகள் இன்றி மிகவும் ஐக்கி யமாக வாழ்ந்து வந்தனர். (1990ஆம் ஆண்டுக்கு முன்னர்).

இவ்வூரில் வாழ்ந்த மக்கள் பிரதானமாக விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கை மற்றும் மீன் பிடித் தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். சுமார் 4150 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்கை பண்ணப்பட்டு வந்ததுடன் 3925 ஹெக்டயருக்கு அதிகமான நிலப்பரப்பில் சேனைப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வந்தனர். இவற்றிக்கான நீரினை றூகம் குளம், உன்னிச்சைக் குளம், கித்துள் குளம், சோதயன் கட்டுக்குளம், மூந்தனை ஆறு போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொண்டனர். நன்நீர் மீன்பிடித் தொழிலில் அதிகமானவர்கள் ஈடுபட்டு வந்தனர். இவ்வூரின் பூர்வீகக் குடிகள் ஏறாவூர் மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்து குடியேறியுள்ளனர். அதனைத் தொடர்ந்து காலப் போக்கில் இவர்களுடன் தமிழ் மக்களும் வந்து குடியேறி வாழ்ந்து வந்துள்ளனர் *(தகவல்: வீ.எம். சரீப் 72)*

மிக நீண்டகாலமாக தமிழ் - முஸ்லிம் உறவானது மிகவும் சிறப்பாகக் காணப்பட்டு வந்துள்ளன. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையானது இப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை அகதிகளாக வெளியேற்றி விட்டது.

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் அன்றாடம் தம் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யவும் தம் அன்றாட அத்தியா வசியப் பொருட்களை கொள்வனவு செய் யும் இடமாகவும் ஏறாவூர் நகரம் விளங் கியது. அதேபோன்று ஏறாவூர், காத்தான் குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்தும் வந்துள்ளனர் அத்துடன் கால்நடைகளையும் இப்பிரதேசங்களில் வளர்த்தும் வந்துள்ளனர். தவிர இவர்களுக் குச் சொந்தமான் நூற்றுக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் இருந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சூழ்நிலையில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் யுத்தம் தீவிரம் பெறத் தொடங்கியது. குறிப்பாக காத்தான் குடிப் பள்ளிவாசல் மீதான குண்டுத் தாக்குதல், ஏறாவூரில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை போன்ற நிகழ் வுகளானது உறுகாம முஸ்லிம் மக்களிடத் திலும் மிகுந்த அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது. இக்காலப் பகுதியில் பயங்கர வாதிகள் உறுகாம முஸ்லிம் மக்களை தமது வியாபாரக் கொடுக்கல் வாங்கள் களை மேற்கொள்வதற்காக ஏறாவூர் மற்றும் காத்தான்குடிப் பகுதிகளுக்குச் செல்வதற்கு சுமார் 45 நாட்களுக்கு மேலாக தடுத்து வைத்திருந்தனர். இதனால் இம்மக்கள் தமது அத்தியாவசியப் பொருட்களை வாங்கமுடி யாமலும் தமது விவசாயக் கொடுக்கல் வாங் கள்களில் ஈடுபட முடியாமலும் தடுக்கப் பட்டுப் பணயக் கைதிகளாக்கப்பட்டிருந்தனர். *(தகவல்:எம். இஸ்மாயில் 73)* இந்நிலையில் பயங்கரவாதிகள் இங்குள்ள முஸ்லிம் மக்களை இரவோடு இரவாக அழைத்து கூட்டம் ஒன்றை நடாத்தினார்கள். இதன் போது தமது உத்தரவை மீறி யாராவது வெளியேற முற்பட்டால் அவர்கள் சுடப்படு வார்கள். எனவும் கண்டிப்பான உத்தரவு விடப்பட்டது. இக் காலப்பகுதியில் தம் குடும்பங்களை அழைத்துக் கொண்டு ஏறாவூர் செல்ல முற்பட்ட இப்றாஹீம் என்பர் தாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய வேலைகளை இப்பிரதேசத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த நாகேஸ் தலைமையிலான எல்.ரீ.ரீ.ஈ பயங்கர வாதி களால் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. *(தகவல்: ஏ.அமுர்த்தீன் 57)*

இந்நிலையில் 1990 ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி இரவு இம்மக்களை படுகொலை செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதும் அதற்காக புதிய பயங்கரவாதப் பிரிவுகள் இப்பகுதி களுக்கு வந்திருப்பதும் தெரியவந்தமை யினால் இம்மக்கள் இக்காலப்பகுதிகளில் காடுகளிலும் குளக்கரைகளிலும் தம் குடும் பத்துடன் இரவில் தூங்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது. இந்நிலையில் ஏ. அமுர்த்தீன் என்பவரின் துணிச்சலான நட வடிக்கையினால் இரவோடிரவாக குளத்தை நீந்திக் கடந்து 15மைல் தொலைவில் அமைந்திருந்த தம்பட்டி இராணுவ முகாமிற்கு வழங்கிய தகவல்களைத் தொடர்ந்து மறு நாள் 14ஆம் திகதி 6000 இராணுவ வீர்களினதும் விமானப்படையினரின் தீவிர முயற்சியின் காரணமாக இம்மக்கள் மீறகப் பட்டனர் *(தகவல்கள்: ஐ. அப்துல் கபூர் 69, ஏ.அமுர்த்தீன் 57).*

## பகுப்பாய்வு **(Analysis)**

### அகதி வாழ்க்கை

1990 ஆகஸ்ட் 14ஆம் திகதி மாலை இராணுவ வீரர்கள் தீவிர போரட்டத்தின் மூலமாக உறுகாமத்தை வந்தடைந்தனர். அன்றைய தினம் 14அம் திகதி இரவு இம்மக்கள் அவ்வூர்ப் பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப் பட்டனர். மறுநாள் 15அம் திகதி அதிகாலை வேளையில் உடுத்த உடைகளுடன் A5 பாதை வழியாக மகஓயா நோக்கி கால் நடையாக அழைத்துவரப்பட்டார்கள். மகஓயா சிங்கள மகா வித்தியாலயத்தில் இம்மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இங்கு சுமார் 45 நாட்களாக தங்கவைக்கப்பட்டிருந்தனர். மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டி யிருந்ததால் இம்மக்கள் அவ்வூரில் அமைந் துள்ள நெற் களஞ்சியசாலைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டனர்.

இதிலிருந்து இம்மக்கள் இரு பகுதியினராக பிரிந்து சென்றனர். 28 குடும்பங்கள் மெதகம – கொட்ட முல்லை என்ற இடத்திற்கும் எஞ்சிய 120 குடும்பங்களும் நெற்களஞ்சிய சாலையிலும் தங்கவைக்கப்பட்டர். இவர்கள் அங்கு ஒருசில மாதங்கள் வரைத் தங்கி யிருந்தனர். இவர்களில் 45 குடும்பங்கள் அக்கரைப்பற்று எழுவெட்டுவான் (பழைய பொலீஸ் நிலையம்) மைதானத்திலும் எஞ்சிய 75 குடும்பங்களும் பொலன்னருவை கல்லெலை எனும் கிராமத்திலும் தங்கவைக் கப்பட்டனர் (தகவல்: ஆசான் 69) இந்நிலை யில் மெதகம எனும் கிராமத்தில் ஒருவருடத் திற்கும் மேலாக வாழ்ந்த 28 குடும்பங்கிலும் 21 குடும்பங்கள் மீண்டும் அக்கரைப்பற்று தைக்கா நகர் முகாமிற்கு வந்து சேர்ந்தனர். இவர்களுடன் எழுவெட்டுவான் முகாம் மக்களும் இணைந்து மொத்தமாக 66 குடும்பங்கள் இம்முகாமில் வாழ்ந்தனர். *(நேர்காணல்: எம். இஸ்மாயில் 73)* இந் நிலையில் கல்லெலை முகாமில் இருந்த 81 குடும்பங்களும் ஏறாவூர் புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த பழைய நெற்களைஞ்சியசாலைக் கட்டிடத் திற்கு மாற்றப்பட்டனர் *(தகவல்: மஹ்மூது லெவ்வை 59).*

1995ஆம் ஆண்டு அக்கரைப்பற்று தைக்கா நகர் முகாம் மக்கள் மீண்டும் அட்டாளைச் சேனைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட் பட்ட பாலமுனை ஹுசைனிய்யா கிராமத்தில் அமைவிட மாற்றம் (Relocation) செய்யப் பட்டனர். அவ்வாறே 1996ஆம் ஆண்டு ஏறாவூர் நெற்களஞ்சிய சாலை முகாம் மக்கள் இரு இடங்களில் மீள் அமைவிடம் செய்யப்பட்டர். இவர்களில் 36 குடும்பங்கள் ஏறாவூர்- தாமரைக் கேணியிலும் மீதமாக இருந்த 49குடும்பங்கள் ஏறாவூர் முகாஜிரீன் கிராமத்திலும் மீள் அமைவிடம் செய்யப் பட்டுச் சென்றனர். *(தகவல்: ஏ. காதர் முகைதீன் 65)*

இவ்வாறாக இந்த மக்களின் அகதி வாழ்க்கை தொடர் படலங்களாக அமைந் திருந்தமையினால் மீண்டும் மீண்டும் நிம்மதி, சந்தோசங்களை எல்லாம் இழந்து சொல்லொண்ணாத் துன்பங்களையும் துயரங் களையும் சந்தித்து வாழ்த வரலாறுகள் இந்த மக்களின் இருள் படிந்த வாழ்க்கையாக அவை அமையப் பெற்றிருந்தன. எனினும் இம்மக்கள் தமது விடாமுயற்சி, கடின உழைப்பு, எதிர்காலம் பற்றிய இலட்சியம் போன்றவைகளால் இழந்த பொருளா தாரங் களை மீளவும் படிப்படியாக கட்டியமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

## உறுகாமம் முஸ்லிம்களும் மீள்குடியேற்றமும்

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து சுமூகமான சூழ்நிலை நிலவுகின்ற இவ்வேளையில் உறுகாமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீள் குடியேற்றம் செய்யப் படுவது காலத்தின் தேவையாகவுள்ளது.

அதாவது அகதிகளை அல்லது அமைவிட மாற்றம் செய்யப்பட்டவர்களை மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும் போது அவர்களின் சொந்த இடத்தில் மீளக் குடியமர்த்த உதவு வது அரசின் கடமையாகும். இதற்காக அம் மக்களுக்கத் தேவையான பணம், பொருள், சுயதொழில், கல்வி, போக்குவரத்து, வீட்டு வசதிகள், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர் களை குடியமர்த்துவதனை மீள்குடி யேற்றம் என அழைக்கப்படுகின்றது.

ஆனால் யுத்தம் ஓய்ந்து பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இம்மக்களை மீளவும் குடியேற்றுவதற்கான நடவடிக்கை அரசி னாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படவில்லை. தவிர இம்மக் களின் விருப்பங்களைக்கூட இதுவரையில் கேட்டறியப்படவுமில்லை. தமக்குரிய அடிப் படை வசதிகளை ஏற்படுத்தி உரிய பாது காப்பு வசதிகளையும் தமது இழப்புக்களை யும் வழங்கும் போது தங்களது பகுதியில் மீளவும் குடியேறுவதற்கு இம்மக்கள் விரும்புகின்றனர். ஆனால் இதுவரையில் அந்தப் பகுதியில் மீள் குடியேற்றம் செய் வதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை. இந்நிலையில்

அகதிமுகாம் அல்லது மீள் அமைவிடம் செய்யப்பட்ட பகுதிகளில் இருபது வருடங் களுக்கு மேலாக இம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் இங்கு சுட்டிக்காட் டத்தக்கது.

இம்மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு எந்தவொரு அமைச்சரோ அல்லது பாராளு மன்ற உறுப்பினரோ முன்வரவில்லை ஆனால் சில தடவைகள் மாகாண சபை உறுப்பினர்கள், எதிர்க் கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்கள் வந்து அவ் ஊரினைப் பார்வையிட்டுச் சென்றுள்ளதுடன் அவ்வூரில் அமைந்துள்ள உள்ளக வீதி ஒன்று 200 மீட்டர் அளவில் கொங்ரீட் இடப்பட்டுள்ள துடன் 04 வீடுகள் மட்டும் கட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் சில மக்கள் தாமாகச் சென்று தம்விருப்பப்படி மீன்பிடி, விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டும் வருகின் றனர். அதன் விபரம் பின்வருமாறு

| தொழில் | ஈடுபடுவோர் எண்ணிக்கை |
|---|---|
| மீன்பிடி | 34 |
| சேனைப் பயிர்ச்செய்கை | 18 |
| விவசாயம் | 26 |

(நேர்காணல்: இஸ்மாயில்)

மேற்படி தொழில்களில் ஈடுபட்டுவரும் மக்கள் அங்கு அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையிலும் காட்டு யானைகளின் தொல்லைகளினாலும் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கியும் வருகின்றனர். எடுத்துக் காட்டாக காதர் முகைதீன் என்பவர் கடந்த மாதம் யானை தாக்கப்பட்ட நிலையில் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது (நேர்காணர்: ஹாசரா உம்மா 58) தவிர மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த முஹம்மது உசனார் (மம்முசன்) என்பவர் இனந் தெரியாதவர்களினால் இரவு வேளை யில் குளத்தில் வைத்துத் தாக்கப்பட்ட நிலையில் உயிர் இழந்த நிலையில் மறுநாள் மலையில் சடலமாக மீட்கப்பட்டார். (நேர்காணல் : ஜனாயிர் 35) போன்றன வற்றை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

ஆனால் அன்மைய யுத்தத்தில் அகதிகளாக வெளியேற்றப்பட்ட வாகரை மக்கள் மீளவும் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் உறுகாம முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை. இதனால் இம்மக்கள் தொடர்ந்தும் மீள் அமைவிடங்களில் அல்லது அகதி முகாம்களில்தான் வாழ்வதா? என்ற கேள்விகளை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய நிலையில் தம் சொந்த இடங் களில் மீளவும் சென்று குடியேறுவது தொடர் பாக இம்மக்களிடம் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் மூலமாக அம்மக்களின் தற்போதைய உளநிலைகள் என்ன என்பது அறியப்பட்டுள்ளன.

## ஆய்வின் முடிவுகள் (Findings)

உறுகாமம் முஸ்லிம் மக்களின் உளநிலை மாற்றங்கள்

யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்தவகையில் 1990ஆம் ஆண்டு உறுகாமத்திலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்ட மக்கள் இருபது வருடங் களுக்கு மேலாக நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இம்மக் களை மீளவும் சொந்த இடங்களுக்குச் சென்று நின்மதியாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது காலத்தின் தேவை யாகவுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாக இம்மக்களின் உளநிலை எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வு செய்த போது மிக நீண்டகாலமாக தமது சொந்த நிலங்களிலிருந்து வெளி யேற்றப்பட்டு பிற இடங்களில் இம்மக்கள்

வாழ்ந்து வருவதன் காரணமாக இம்மக் களின் மனோநிலையில் சமூகப் பொரு ளாதார அரசியல், சூழல்சார் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமை ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் மீள்குடியேற்றம் தொடர்பாக இம்மக்களின் விருப்பங்களை அறிவதற்காக தற்போது இம்மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் இவர்களை நிர்வாகம் செய்துவருகின்ற பள்ளிவாயல்களின் மூலமாக தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இத்தகவல்ககளின்படி மொத்தமாகவுள்ள 560 குடும்பங்களில் 132 குடும்பங்கள் தற்போது அப்பிரதேசங்களில் உடனடியாக வாழ்வதற்கு விருப்பம் தெரி வித்துள்ளனர். எஞ்சியுள்ள 428 குடும்பங் களும் தற்போது அங்குள்ள சூழ்நிலை மற்றும் தமக்கான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்க ளினால் உடனடியாக தாம் அப்பகுதிகளுக் குச் சென்று வாழ்வதற்கு விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். (இலக்குக் குழுக் கலந்துரையாடல்: 1,2,3,4)

உறுகாமம் மக்கள் தற்போது வாழ்கின்ற இடங்களும் அவர்களின் குடும்ப எண்ணிக் கை, மீள் குடியேற்றம் மற்றும் மீள் குடி யேறுவதற்கான விருப்பு நிலைகள் பற்றிய விபரங்கள்

| வாழ்விடங்கள் | குடும்ப எண்ணிக்கை | தற்போது மீள் குடியேற விரும்பும் குடும்பங்களின் எண்ணிக்கை | தற்போது மீள் குடியேற விரும்பாத குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஹுசைனிய்யா புரம் - பாலமுனை | 215 | 16 | 199 |
| முஹாஜிரின் கிராமம் - ஏறாவூர் | 138 | 40 | 98 |
| தாமரைக் கேணி – ஏறாவூர் | 98 | 39 | 59 |
| கல்லலை – பொலன்னறுவை | 18 | 05 | 13 |
| ஏறாவூர் நகர் | 28 | 12 | 16 |
| மேதகம – கொட்டமுல்ல | 09 | 04 | 05 |
| காத்தான்குடி | 26 | 13 | 13 |
| ஏனைய இடங்கள் | 28 | 03 | 25 |
| மொத்த குடும்பங்கள் | 560 | 132 | 428 |

(அகதிகள் பற்றிய அறிக்கைகள்: 1,2,3)

உறுகாமத்திலிருந்து அகதிகளாக வெளி யேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தற்போது எட்டு (08) இடங்களில் 560 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக தமது சொந்த இடத்திற்குச் சென்று வாழ விரும்புகின்ற குடும்பங்கள் 132 ஆகும். இது 23.57 சதவீதமாகும் மாறாக தற்போதைய சூழலில் தமது சொந்த இடத்திற்குச் சென்று வாழவிரும்பாத குடும்பங்கள் 428 ஆகும் இது 76.43 சதவீதமாக அமைந்துள்ளது.

மிக நீண்ட காலமாக தமது சொந்த ஊரை விட்டு பிரிந்து பல பகுதிகளிலும் அமைந்துள்ள மீள் அமைவிடங்களில் பல் வேறு கஷ்டங்கள், பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற இம்மக்களில் 76.42 சதவீதமானவர்கள் தமது சொந்த

இடங்களுக்குத் தற்போதைய சூழலில் சென்று வாழ விரும்பவில்லை. இவர்களின் இத்தகைய உளநிலை மாறுபாட்டுக்கான காரணங்கள் யாதென அறிந்து கொள் வதற்காக தற்போது மீள்குடியேற விரும்பாத 428 குடும்பங்களிலிருந்து ஐந்து குடும்பங் களுக்கு ஒரு குடும்பம் (5:1) என்ற விகிதத் தில் எட்டு மீள் அமைவிடங்களில் வாழும் குடும்பங்களிலிருந்து எழுமாற்றாக 85 குடும் பங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டார்கள். இதனைப் பின்வரும் அட்டவணை காட்டு கின்றது.

| மீள் அமைவிடங்கள் | தற்போது மீள் குடியேற விரும்பாத குடும்பங்களின் எண்ணிக்கை | எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் |
|---|---|---|
| ஹீசைனிய்யா புரம் - பாலமுனை | 199 | 40 |
| முஹாஜிரின் கிராமம் - ஏறாவூர் | 98 | 20 |
| தாமரைக் கேணி - ஏறாவூர் | 59 | 12 |
| கல்லலை - பொலன்னறுவை | 13 | 02 |
| ஏறாவூர் நகர் | 16 | 03 |
| மேதகம - கொட்டமுல்ல | 05 | 01 |
| காத்தான்குடி | 13 | 02 |
| ஏனைய இடங்கள் | 25 | 05 |
| மொத்த குடும்பங்கள் | 428 | 85 |

இவ் ஆய்வின் போது தாங்கள் தற்போதைய சூழ்நிலையில் தம் சொந்த இடங்களில் மீள் குடியேற விரும்பவில்லை என்பதற் கான காரணங்களைக் குறிப்பிட்டனர். அக்காரணங்களை ஆய்வின் இலகுகருதி மூன்று வகையாக வகையீடு செய்யப்படு கின்றது.

01. தற்போதைய சூழல் தொடர்பாக ஏற்பட்டுள்ள உளநிலை மாற்றங்கள்

02. சொந்த ஊர்ச் சூழல் தொடர்பாக ஏற்பட்டுள்ள உளநிலை மாற்றங்கள்

03. வேறு காரணங்களினால் ஏற்பட்ட உளநிலை மாற்றங்கள்

இம்மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்ற இடங்களிலுள்ள குடியிருப்பு நிலங்கள் மிகவும் சிறியதாகவும் சாதாரண அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் தம் சொந்த இடங் களில் அடிப்படை வசதிகள் ஏதும் ஏற்படுத் தப்படாத நிலையில் தம்மால் அங்கு சென்று வாழ முடியாது எனக் குறிப்பிடுகின்றனர்.

இது பற்றி பாலமுனை ஹுசைனிய்யா மீள் அமைவிடத்திலுள்ள பை.போ.சேகு முஹம்மது 74 என்பவர் கூறும் போது ''பூர்வீகமாக தாம் ஆண்டுவந்த மண்ணுக்கு தாம் போய் வாழ விரும்புகின்றோம் ஆனால் தற்போது அங்கு எதுவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படாத நிலையில் அங்கு தம்மால் செல்ல முடியாது'' என்றார்.

இது தொடர்பாக முஹாஜிரின் கிராமம் - ஏறாவூரில் உள்ள ஏ.எல். ஆதம் லெவ்வை 52 என்பவர் தம் உளமாற்றம் பற்றிக் குறிப்பிடும் போது

''தற்போதைய சூழலில் வசதி வாய்ப்புக் களுடன் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் சிறப்பாகக் காணப்படுகின்றது. இதே வசதி வாய்ப்புக்கள் உறுகாமத்தில் ஏற்படுத்தப்பட்டுத் தரப்படுமானால் நிச்சயம் தம்மால் அங்கு செல்ல முடியும்'' என்றார்.

தற்போது இவர்கள் வாழும் சூழல், சொந்த ஊர்ச் சூழல் மற்றும் வேறு காரணங்களினால் இவர்களின் உளநிலையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை இம்மக் களால் வழங்கப்பட்டுள்ள காரணங்களின் மூலமாக விளக்கப்படுகின்றது.

## கல்வி வளம்

உறுகாமம் முஸ்லிம்கள் தற்போது வாழ்ந்து வருகின்ற மீள் அமைவிடங்கள் அமைந்துள்ள பிதேசங்களில் கல்வி வசதிகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. அதன் விளைவாக இம்மக்களிடமும் கல்விரீதியான ஒரு விளிப்புணர்வுகள் ஏற்பட்டுள்ளமை அவர்களின் கல்வி அடைவுகளின் மூலமாகக் கண்டுகொள்ள முடிகின்றது. அதன் விபரம் வருமாறு:

| கல்வித் துறைகள் | எண்ணிக்கை |
|---|---|
| பட்டதாரிகள் | 15 |
| பட்டதாரி மாணவர்கள் | 16 |
| கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் | 08 |
| கல்விக் கல்லூரி மாணவர்கள் | 10 |
| மௌலவிகள் | 14 |
| மௌலவியாக்கள் | 09 |
| ஹாபிழ்கள் | 08 |
| அரபுக் கல்லூரி மாணவர்கள் | 37 |
| ஹாபிழ் மாணவர்கள் | 38 |

(வினாக்கொத்து : 2010)

தற்போது தாம் வாழ்ந்து வருகின்ற இடங்களில் போதிய கல்வி வளத்துடன் தம் பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் உறுகாமத்தில் இத்தகைய வசதிகள் இல்லை எனவே இவ்வசதிகள் ஏற்படுத்தப் பட்டுத் தரப்படுமாயின் தம்மால் அங்கு செல்லமுடியுமென ஆய்வின் போது தகவல் வழங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை 70 ஆகும். இது மொத்த குடும்பத்தில் 82.35 சதவீதத்தைக் காட்டுகின்றது.

இது பற்றி உ.கலந்தர் உம்மா ஆசிரியை குறிப்பிடும் போது "பூர்வீகச் சொத்துக்கள் யாவும் சில நொடிப் பொழுதில் அழிக்கப்பட்டுவிட்டன ஆனால் அழிவற்ற கல்விச் சொத்தை யாவது தமது பிள்ளைகளுக்கு சேர்த்து வைக்கவே விரும்புகின்றோம்" என்றார்.

## வீட்டு வசதிகள்

இருபது வருடங்களுக்கு மேலாக தாம் மிகவும் கஷ்டப்பட்டு வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றோம். ஆனால் சொந்த ஊரில் இதுவரையில் எதுவித வீட்டுத் திட்டங்களும் ஏற்படுத்தப்படவில்லை. இந்நிலையில் தம்பிள்ளைகளுடன் உடனடியாகச் செல்ல முடியாதென இம்மக்கள் குறிப்பிடுகின்றனர். வீட்டு வசதிகள் அமைத்துத் தரப்படுமானால் தம்மால் அங்கு செல்ல முடியும். இவ்வாறு தகவல் வழங்கியிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 74 ஆகும் இது மொத்தத்தில் 87.05 சதவீதத்தைக் காட்டுகின்றது.

இதுபற்றி ஏ.எச்.ஹுசையின் (பத்திரிகை நிருபர்) - ஏறாவூர் குறிப்பிடுகின்ற போது "மீண்டும் கொட்டில் வாழ்க்கைக்குச் செல்ல தம்மால் முடியாது. தமது பெண் பிள்ளைகளை காடுகளில் எவ்வாறு நம்பி வைத்திருக்க முடியும்" எனக் குறிப்பிட்டார்.

## வைத்திய வசதிகள்

தற்போது இம்மக்கள் வாழ்ந்து வருகின்ற சூழலில் அரச, தனியார் வைத்திய வசதிகள் மிகவும் சிறப்பாக காணப்படுகின்றன. ஆனால் உறுகாமத்தில் வைத்திய வசதிகள் போதியளவில் இல்லை. இந்நிலையில் வைத்திய சேவைகளைப் பெறுவதற்காக மிகத்தூரப் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

எனவே வைத்திய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தித் தரப்படுமானால் தம்மால் அங்கு சென்று வாழ முடியும். என்று ஆய்வுக்குற் படுத்தியவர்களில் 39 குடும்பங்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இது 45.88 சதவீதமாக அமைந்துள்ளது.

போக்குவரத்து வசதிகள்

இம்மக்கள் தற்போது வாழுகின்ற சூழலில் போக்குவரத்து வசதிகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. ஆனால் உறுகாமப் பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் மிக மிகக் குறைவாகவுள்ளது. தமக்கு சீரான முறையில் போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டு தரப்படும் போது தம்மால் அங்கு குடியேற முடியும் என ஆய்விற்கு உட்படுத்தியவர்களில் 47 குடும்பங்கள் தமது கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இது 55.29 சத வீதத்தை பிரதி பலிக்கின்றது.

இது பற்றி ஏ. றசீது என்பவர் ஏறாவூர் மீள் அமைவிடத்திலிருந்து குறிப்பிடுகின்ற போது:
"உறுகாமத்து மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏறாவூர், காத்தான் குடி, மட்டக்களப்பு, பதியத்தளாவை போன்ற தூர பிரதேசங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது அத்துடன் அத்தியாவசியப் பொருட்களையும் அங்கேயே பெறவேண்டியுள்ளதால் போக்குவரத்து வசதிகள் மிக இன்றியமையாததாகின்றது" என்றார்.

சூழல்

நகரத்துச் சூழல், நகர வாழ்க்கை முறைகளுக்கு இம்மக்கள் மிக நீண்ட காலமாகப் பழகிவிட்டதால் உறுகாமச் சூழல் கிராமியச் சூழலாக, அதனோடு ஒட்டிய வாழ்க்கை முறைகளாகக் காணப்படுகின்றமையால் அச்சூழலில் நவீன வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தித்தரப்பட வேண்டும். அவ்வாறு நவீன வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுத் தரப்படுமானால் தம்மால் அப்பிரதேசங்களில் குடியிருக்க முடியும். என்பதாக ஆய்வில் 53 குடும்பங்கள் கருத்து வழங்கியிருந்தனர். இது மொத்தக் குடும்பத்தில் 62.35 சதவீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

இது பற்றி முகம்மது உசனார் மெத்தகம மீள் அமைவிடத்திலிருந்து குறிப்பிடுகின்றார். ÞஇருபÐ வருடங்களாக காடுகள் வளர்ந்து உறுகாமச் சூழல் பயங்கரமாகக் காட்சி அளிக்கின்றது. அவை துப்பரவு செய்யப்பட்டு வசதி வாப்புக்கள் ஏற்படுத்தித் தரப்படுகின்ற போது தம்மால் அங்கு சென்று வாழ முடியும்" எனக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதிகள்

உறுகாம முஸ்லிம் மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்ற குடியிருப்புக்கள் முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதிகளில் அமைந்துள்ளமை அவதானிக்க முடிகின்றது. இதனால் மார்க்க விடயங்கள், கலாசாரத் தொடர்புகள் என்பவற்றை பேணிக் கொள்வதும் இலகுவாக உள்ளது. ஆனால் உறுகாமத்தை அண்டிய பகுதிகள் தமிழ் பிரதேசங்களாக உள்ளமையினால் யுத்த வடுவிலிருந்து இம்மக்கள் இன்னும் விடுபடவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. இது பற்றி 49 குடும்பங்கள் ஆய்வில் தகவல் தெரிவித்திருந்தனர். இது 57.64 சத வீதத்தைக் காட்டுகின்றது.

இது பற்றி எம். பீ. யாசீன் ஹுசைனிய்யா மீள் அமைவிடத்திலிருந்து குறிப்பிடும் போது Þஉறுகாமத்தைச் சூழவுள்ள பரந்த பகுதி தழிழ் பிரதேசங்களாக அமைந்துள்ளது. யுத்தம் ஏற்படும் போது உயிரைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் தற்போது தாம் வாழ்ந்து வருகின்ற சூழல் முஸ்லிம் பெரும்பான்மையாக அமைந்துள்ளதால் தாம் அச்சப்படத் தேவையில்லை நின்மதியாக வாழ்ந்து வருகின்றோம்ß எனக் குறிப்பிட்டார்.

சூழலுடனான இசைவாக்கம்

இருபது வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வந்து தற்போதையச் சூழலில் வாழ்ந்து வருகின்றோம். இச்சூழலில் காணப்படுகின்ற தமக்குச் சாதகமான நிலைகளுக்கு தாம் பழக்கப்பட்டு விட்டதாவும். இச்சூழலில் காணப்படுகின்ற வசதிகள் உறுகாமத்திலும் ஏற்படுத்தித் தரப்படுகின்ற போது நிச்சயம் தாம் அங்கு செல்ல முடியும் என்று ஆய்விற்கு உட்படுத்தியவர்களில் 53 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இது மொத்தத்தில் 62.35 சதவீதத்தைக் காட்டுகின்றது.

## பாதுகாப்பு உத்தரவாதம்

மிகவும் நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசமாகவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசமாகவும் உறுகாமம் காணப்படுவதால் தமது பிள்ளை களை அங்கு வைத்திருப்பதற்கு இம்மக்கள் தயக்கம் காட்டுகின்றார்கள். ஆனால் தற்போதைய சூழல் இதற்கு மாற்றமாக இருக்கின்றது.

எனவே தமக்கான பாதுகாப்பு நிலைகள் உறுதிப்படுத்தப்படுமாக இருப்பின் தம்மால் அங்கு சென்று வாழமுடியும் என்று 74 குடும்பங்களின் கருத்துக்கள் அமைந் திருந்தன இது 87.05 சதவீதமாகும். இது தொடர்பாக ஏ.எம். றசீது ஹுசைனிய்யா மீள் அமைவிடத்திலிருந்து குறிப்பிடும் போது ´தமக்கான பாதுகாப்பு உத்தரவாதம் அரசி னால் வழங்கப்படவேண்டும். பாதுகாப்புக்கான முன் ஏற்பாடுகளைச் செய்து தரப்படுகின்ற போது தம்மால் அங்கு செல்ல முடியும்ே என்றார்.

## உறுகாம முஸ்லிம்களின் பழைய வகுப்பினர்களின் மறைவும் புதிய வகுப்பினர்களின் தோற்றமும்

உறுகாமத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் தலைமுறையினர்கள் இருபது வருடங்களாகப் படிப்படியாக இறந்து வருகின்றனர். மறுகனம் புதிய தலைமுறை யினர்கள் உருவாகி வருகின்றனர். இப்புதிய தலைமுறையினர்கள் உறுகாமம் பற்றிய போதிய பரிட்சயமற்றவர்களாக இருப்ப தனால் யுத்தம் ஓய்ந்த நிலையில் உடன டியா தமது ஊருக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். இது இன்னும் இம்மக்கள் யுத்தவடுவிலிருந்து மீளவில்லை என்பதை தெளிவாகக் காட்டுகின்றது. இத்தகைய கருத்துக்களை வெளியிட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 29 ஆகும் இது 34.11 சதவீதத்தைக் காட்டுகின்றது.

## உறுகாமத் தமிழ் மக்களில் பழைய வகுப்பினர்களின் மறைவும் புதிய வகுப்பினர்களின் தோற்றமும்

உறுகாமத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் தலைமுறையினர்கள் இருபது வருடங் களாகப் படிப்படியாக இறந்து வருகின்றனர். மறுகனம் புதிய தலைமுறையினர்கள் உருவாகி வருகின்றனர். இந்நிலையில் இப்புதிய வகுப்பினருக்கும் முஸ்லிம்களுக்கு மிடையில் சரியான தொடர்புகள் இல்லாத தால் இவர்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே ஒரு சுமூகமான உறவு நிலவ வில்லை. இதற்கு அங்கு சென்று வாழ்ந்து வரும் முஸ்லிம்களிடம் அவர்கள் நடந்து கொண்ட முறைகளிலிருந்து தெரியவரு கின்றது.

இதன் விளைவாக இரு குழுக்களுக்குமிடை யினான வாய்த்தர்க்கம் இறுதியில் முகம்மது உசன் என்ற முஸ்லிம் மீனவரை இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்த உடலை குளத்தில் வீசப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம் (நேர்காணல்: மஹ்ரூப் )

இத்தகைய காரணங்களைக் குறிப்பிட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 39 ஆகும் இது மொத்தத்தில் 45.88 சதவீதமாக அமைந் துள்ளது.

## திருமண உறவுகள்

இம்மக்களில் தற்போது வாழ்ந்து வருகின்ற பிரதேசங்களிலுள்ள பெண்களை உறுகாம இளைஞர்கள் திருமணம் செய்திருப்பதுடன் அப்பிரதேச ஆண்கள் பலர் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்திருக்கின்றனர். இது பற்றி ஐ. நியாஸ் ஹுசைனிய்யா மீள் அமைவிடத்திலிருந்து குறிப்பிடும் போது ´நான் மன்னாரிலிருந்து அகதியாக வந்து இப்பிரதேசத்தில் குடியிருக்கும் பெண்ணைத் திருமணம் செய்துள்ளேன். பெண் வீட்டார் யத்தத்திற்குப் பின்னர் மன்னார் செல்ல ஆயத்த மாகின்றனர் அதனால் என் மணைவியும் பெற்றோருடன் செல்லவே விரும்புகின்றார். ஆனால் நான் உறுகாமம் செல்ல விரும்பு

கின்றேன். இத்தகைய சிக்கல் நிலையினைத் தவிர்க்க தற்போதுள்ள மீள் அமைவிடத்தி லேயே வாழ்வோம் எனத் தீர்மானித்துள்ளேன்ஒ என்றார்.

இத்தகைய திருமண உறவுகளால் உடனடியாக உறுகாமம் செல்ல முடியாது எனக் குறிப்பிட்டிருந்தவர்களின் குடும்ப எண்ணிக்கை 29 ஆகும். இது 34.11 சதவீதத்தைக் காட்டுகின்றது.

## மின்சார வசதியின்மை

உறுகாமத்தில் மின்சார வசதிகள் இது வரையில் பூர்த்தி செய்யப்படவில்லை. இந்நிலையில் காடுகளிலிருந்து வருகின்ற யானை மற்றும் பன்றி போன்ற காட்டு மிருகங்களின் அச்சுறுத்தல்கள் இருப்தனால் மின்சாரம் மிக முக்கியமாகத் தேவைப்படு கின்றது.

இது பற்றி பி.எம். ஜலீல் குறிப்பிடம் போது ரிகாதர் முகைதீன் என்பவர் உறுகாமத்தில் யுத்தம் ஓய்ந்த நிலையில் சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போது காட்டு யானை தாக்கியதால் உயிர் இழந் தார்ஒ எனக்குறிப்பிட்டார்.

மின்சார வசதியின் அவசியத்தை குறிப் பிட்டிருந்த குடும்பங்களின் தொகை 74 ஆகும் இது 87.05சத வீதமாகும்.

## மீண்டும் தம் வாழ்க்கையைத் தொடங் குவதற்கு மிகவும் நீண்ட காலம் செல்லும் என்ற அச்சம்

உறுகாமத்திற்குச் சென்று மீண்டும் இயல்பு வாழ்க்கையைத் தொடங்குவதற்கு மிக நீண்ட காலம் செல்லும். ஆதலால் தமக் குரிய வசதிகளை முதலில் ஏற்படுத்தித் தருகின்றபோது தமது இயல்பு வாழ்க் கையை விரைவில் தொடங்கிவிட முடியும் என்றனர் இதுபற்றி கே.எம். முகைதீன் என்பவர் குறிப்பிடும் போது ரிஅகதி வாழ்க் கையில் இருபது வருடங்களுக்கு மேலாக மிகவும் கஷ்டப்பட்டு ஓரளவிற்கு நின்மதியாக வாழ்ந்து வருகின்ற நிலையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படாத நிலையில் தற்போது அங்கு சென்று வாழ முடியாது. ஏனெனில் மீளவும் தம் வாழ்க்கையை கட்டி யெழுப்புவதற்கு அதிக காலம் எடுக்கும்ஒ

இது தொடர்பாக 53 குடும்பங்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர் இது 62.35 சதவீதத்தைக் காட்டுகின்றது.

## தமிழ் மக்களின் ஆதிக்க நிலை

உறுகாமத்தில் தற்போது வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் அங்குள்ள வளங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் அவர் களின் உத்தரவுப்படியே தொழிற்பட வேண்டும் எனவும் கட்டளையிட்டும் வருகின் றார்கள். இதற்கு எடுத்தக்காட்டாக முஸ்லிம் மக்களிடம் பூர்வீகமாக இருந்து வந்த மீன்பிடிச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் மீன்பிடி உத்தரவுகளையும் இவர்களே வழங்கி வருகின்றனர். இத்தகராரு காரணமான முஸ்லிம் மீனவர் அன்மையில் கொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. இது தொடர்பாக செய்யது அலியார் என்பவர் கருத்துத் தெரிவிக்கம் போது

ரிமுகம்மது உசன் என்ற முஸ்லிம் மீனவர், இரவு வேளையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்த உடலை குளத்தில் வீசப்பட்ட சம்பவம் தமிழ் மக்களின் ஆதிக்க நிலையைக் காட்டுகின்றதுஒ

இத்தகைய காரணங்களினாலும் தம் சொந்த இடத்திற்குச் செல்வதற்குத் தயங்குகின்றமை ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது.

## அரசியல் பின்னணி

தற்போது வாழ்ந்து வருகின்ற சூழலில் அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலையில் இம் மக்கள் வாழ்வதனால் அரசியல்வாதிகளு டனான தொடர்புகள் சிறப்பாகவுள்ளது. ஆனால் உறுகாமம் பின்னடைவு கண்ட பிரதேசம் என்பதால் அரசியல் தொடர்புகள்,

அபிவிருத்திகள் தடைப்படுமோ என்ற அச்சத்திற்கும் இம்மக்கள் உற்பட்டுள்ளனர். இத்தகைய தகவல்களை 25 குடும்பங்கள் வழங்கியிருந்தனர். இது 29.41 சதவீதத்தைக் குறிக்கின்றது.

### மீள் குடியேற்றத்தில் அரசியல் தலையீடுகள் குறைந்தமை

அதாவது தமது சொந்த நிலங்களில் இம்மக்களை மீளவும் குடியேற்றுவதற்கு அரசாங்கத்தினால் சரிவர எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது அரசாங்கத்தின் புறக்கணிப்பாகவே பார்க்கின்றனர்.

ஆனால் அண்மைய யுத்தத்தில் இடம் பெயர்ந்த வாகரை மக்கள் நவீன வசதி வாய்ப்புக்களுடன் மீளவும் குடியேற்றப் பட்டமை தமக்கு அதிருப்பியை ஏற்படுத்து கின்றது எனவும் இம்மக்கள் தெரிவித்தனர். இக்காரணத்தை குறிப்பிட்டிருந்த குடும்பங் களின் எண்ணிக்கை 70 ஆகும் இது 82.35 சதவீதமாக அமைந்துள்ளது.

### முஸ்லிம் அரசியல் வாதிகளின் தலையீடுகள் குறைந்தமை

தமது மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பராமுக மாகவே இருந்து வருகின்றனர். இத்தகைய கருத்துக்களை தெரிவித்திருந்தவர்கள் 53 குடும்பங்கள் இது 62.35 சதவீதத்தைக் காட்டுகின்றது. இது பற்றி மு. உசனார் குறிப்பிடும் போது

ῃதம் மீள் குடியேற்றம் தொடர்ந்தும் இழுத் தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இதற்குப் பிரதான காரணம் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபட்டுத் தம் பிரச்சினைகளை அரசாங் கத்திற்குத் தெரியப்படுத்தி தமக்கான மீள்குடி யேற்றத்தைச் செய்யாமல் இருப்பதே ஆகும்ੋ என்றார்.

### மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கிவிடுமோ என்ற அச்சம்

மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கிவிட்டால் தாம் மீளவும் அகதிகளாக கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என தாம் அச்சப்படு வதாக ஆய்வில் 70 குடும்பங்களின் கருத் துக்கள் இருந்தது. இது 82.35சதவீதத்தைக் காட்டுகின்றது.

## முடிவுரையும் விதந்துரையும்

### முடிவுரை

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் மக்களின் உளப் பாங்கு மாற்றம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் என்பன முக்கிய விடயங் களாகக் கருதப்படுகின்றன. நாட்டில் நிலையான அபிவிருத்திக்கு இவ்விரு அம்சங் களும் அடிப்படையானவைகளாகும். கடந்த யுத்த சூழலின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலுமிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். இத்த கையதொரு பின்னணியிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உறுகாமம் எனும் கிராமத்தில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் கடந்த யுத்த சூழலின் போது இடம்பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலை யில் இம்மக்கள் தமது இடங்களில் மீளவும் குடியேற்றம் செய்யப்படாமல் இப்பிரதேசங் களிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஏன் இம்மக்கள் தமது இடங்களில் மீளவும் குடி யேறவில்லை? என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இதற்காக இம்மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இம்மக்கள் தற்போதைய சூழலில் தமது ஊரில் மீளக் குடியேறா மைக்கு தமது ஊர்ச் சூழல், தற்போது

இம்மக்கள் வாழ்கின்ற சூழல் மற்றும் ஏனைய காரணங்கள் போன்றவற்றினால் இம்மக்களிடையே பல்வேறு உளப்பாங்கு மாறுதல் களை அவதானிக்க முடிகின்றது. இதிலிருந்து இம்மக்களின் உளப்பாங்கு மாறுதல் களுக்கான காரணங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத வரையில் இம்மக்கள் மீளவும் தமது சொந்த இடத்தில் குடியேற விரும்பவில்லை என்பது ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. எனவே இம்மக்கள் மீள்குடியேற்றத்திற்கு இன்னும் முழுமையாகத் தயாராக வில்லை எனபதுடன் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் அவர்களது உளப்பாங்கில் இன்னும்பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியள்ளது என்பதும் இம்மக்களுக்கு பொருத்தமான வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்து அங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துப் பாதுகாப்பு ஒழுங்குகளையும் வழங்க வேண்டும் எனற விடயங்களும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

விதந்துரைகள்

உறுகாமத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் யாவரும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளவும் குடியேறுவதற்கே விரும்புகின்றனர். ஆனால் உடனடியாக அம்மக்கள் மீளவும் குடியேறுவதற்குத் தடையாக பல காரணங்கள் உள்ளன. இத்தகைய காரணங்களை வெற்றி கொண்டு சிறப்பானதொரு மீள்குடியேற்ற ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பின்வரும் சிபாரிசுகள் முன்மொழியப்படுகின்றன.

- இருபது வருடங்களில் நான்கு மடங்காக உயர்வடைந்துள்ள குடும்பங்களையும் உள்ளடக்கியதாக மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.
- இம்மக்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை செய்து கொடுக்கப்படல் வேண்டும்.
- மீள் குடியேற்ற ஒழுங்குகளை முஸ்லிம் அரசியல்வாதிகள் யாவரும் ஒன்றுபட்டு அசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்.
- அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மீள் குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.
- திட்டமிட்ட அடிப்படையில் சகலருக்குமான வீடுகள் அமைக்கப்படல் வேண்டும்.
- இப்பிரதேசத்தில் மின்சாரம், வீதிகள், பாலங்கள், பாடசாலைகள், வைத்திய சாலை, வழிபாட்டுத் தளங்கள், தபால் சேவை, வங்கி வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படுதல் வேண்டும்.
- மீண்டும் இம்மக்கள் தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கு தொழில் வாய்ப்புக்கள், கடன், மாணியங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
- இம்மக்களின் இழப்புக்களுக்கு நட்டஈடுகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப் படல் வேண்டும்.
- இம்மக்களின் குடியிருப்பு, விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள தமிழ் மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
- மேலும் சிறுவர்களுக்கான பொழுது போக்கு வசதிகள் அமைக்கப்படுதல் வேண்டும்.
- தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக் கிடையே சுமூகமான உறவினை வளர்க்க வழிவகைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

▲

## உசாத்துணைகள்

### நூல்கள்

சரஸ்வதிச, (2000) ரீசமூக உள வியல்ò அண்ணாமலைப் பல் கலைக்கழகம் அண்ணமலை பக்கங்கள் 59 - 82

கல்வி உளவியல் திறந்த பல் கலைக்கழகம் நாவல நுகெகொட பக்கம் 364

ஜமாஹிர் பீ.எம், பொது உளவியல் ஓர் அறிமுகம், தென்கிழக்கு ஆய்வ மையம், கண்டி.

### அறிக்கைகள்

அறிக்கை 01 : ஹுசைனிய்ய பள்ளி குறிப்பேடு ஹுசைனிய்யா புரம் பாலமுனை.

அறிக்கை 02 : முஹாஜிரின் பள்ளி குறிப்பேடு முஹாஜிரின் கிராமம் ஏறாவூர்.

அறிக்கை 03 : தாமரைக் கேணீ பள்ளி குறிப்பு தாமரைக்கேணி ஏறாவூர்.

### குழுக் கலந்துரையாடல்கள்

குழுக் கலந்துரையாடல் 01: ஹுசைனிய்ய பள்ளி நிர்வாக சபை யினர்கள் (09 பேர்), ஹுசைனிய்யா புரம் பாலமுனை.

குழுக் கலந்துரையாடல் 02: முஹாஜிரின் பள்ளி நிர்வாக சபையினர் (08 பேர்) முஹாஜிரின் கிராமம் ஏறாவூர்.

குழுக் கலந்துரையாடல் 03: தாமரைக் கேணீ பள்ளி பள்ளி நிர்வாகிகள் (07 பேர்) தாமரைக் கேணி, ஏறாவூர்.

குழுக் கலந்துரையாடல் 04 : பொது மக்கள், (29பேர்) முகைதீன் பள்ளிவாசல் உறுகாமம்.

### நேர்காணல்கள்

சரீப் வீ. எம். தலைவர், எழுவெட்டுவான் அகதிகள் முகாம் அக்கரைப்பற்று, 2010.06.12

இஸ்மாயில் ஐ, தலைவர், அகதிகள் மீள் அமைவிடம் ஹுசைன்னிய்யாபுரம் பாலமுனை, 2010.06.13

நியாஸ், ஐ, அகதிகள் மீள் அமைவிடம் ஹுசைன்னிய்யாபுரம் பாலமுனை. 2010.06.12

கே.எம். முகைதீன அகதிகள் மீள் அமைவிடம் ஹுசைன்னிய்யாபுரம் பாலமுனை. 2010.06.12

சேகு முகம்மது பை. போ, உறுப்பினர் பள்ளிவாசல் அகதிகள் முகாம்தைக்கா நகர் 2010.06.12

செய்யது அலியார, அகதிகள் மீள் அமைவிடம் ஹுசைன்னிய்யா புரம் பாலமுனை, 2010.06.13

மஹ்மூது லெவ்வை உ, செயலாளர் நெற்களஞ்சியசாலை முகாம் பள்ளி வாசல் ஏறாவூர் 2010.07.17

ஆதம் லெவ்வை ஏ, செயலாளர் முகாஜிரின் பள்ளிவாசல் ஏறாவூர் 2010.07.17

காதர் முகைதீன் ஏ, தலைவர் முகா ஜிரின் பள்ளிவாசல் ஏறாவூர் 2010.07.17

அமுர்த்தீன் அ, தலைவர் கல்லெலை அகதிமுகாம் கல்லெலை 2010.08.01

அசனார் எம், தலைவர் தாமரைக் கேணி மீள் அமைவிடம் ஏறாவூர் 2010.07.18

ஹுசையின் ஏ. எச், நிருபர் ஏறாவூர் நகரப்பிரிவு 2010.07.18

முகம்மது உசனார் எம், தலைவர் மெதகம அகதிகள் முகாம் கொட்ட முல்லை 2010.07.31

றசீது ஏ, பொருளாளர் உறுகாமம் வை.எம்.எம்.ஏ 2010.06.13

யாசீன் எம்.பீ, தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கம் உறுகாமம் 2010.06.12

ஆதம் லெவ்வை ஏ, செயலாளர் கிராம அபிவிருத்திச் சங்கம் உறு காமம் 2010.06.13

கலந்தர் உம்மா உ, ஆசிரியை உறுகாமம் 2010.06.20

றசீது ஏ.எம், தலைவர் அகதி மாணவர் களுக்கான பாராமரிப்பு அமைப்பு ஹுசைனிய்யா புரம் பாலமுனை 2010.06.20

அசனார் உ, செயலாளர் பதுரியாப் பள்ளி காத்தான்குடி 2010.07.24

ஜலீல் எஸ்.எம், தலைவர் கல்வி அபி விருத்திச் சங்கம் ஹுசைனியியா நகர் பாலமுனை 2010.06.19

மஹ்ரூப் எம், தலைவர், முகாம் ஏறாவூர் நகரப்பிரிவு 2010.0718

கலீல் மீ.சா, ஹுசைனிய்யாப்பள்ளி பாலமுனை 2010.06.20

அப்துல் கபூர் முன்னால் தலைவர் ஹீசைனிய்யாப் பள்ளி பாலமுனை 2010.06.19

ஹாஸரா உம்மா ஐ, குடும்பத் தலைவி முஹாஜிரின் கிராமம் ஏறாவூர் 2010.07.18

ஜனாயிர் எம், தாமரைக் கேணீ ஏறாவூர் 2010.07.17

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# RELATIONSHIP AMONG ETHNIC GROUPS IN THE POST-WAR CONTEXT IN THE SOUTH EASTERN COASTAL REGION OF AMPARA DISTRICT, SRI LANKA

***M. Riswan***

## Abstract

*The internal civil war had taken place in Sri Lanka for last three decades which was resulted in numerous human civilian casualties in the country. It was ended with the military defeat of LTTE in 2009. The fundamental reason for this ethnic conflict was an ideology of ethnicity or misunderstanding of ethnic phenomena, and, which was the huge challenge for the sovereignty of the country. In Sri Lanka, there are many ethnic groups namely Sinhalese, Tamil, Muslims and Burgers and so on who determine their identity and solidarity in various levels. In the early period, these ethnic groups maintained their separate ethnic identities as well as they were living together in their common social life. In past history, Tamils, Sinhalese and Muslims were maintained their rigid relationship and they were fighting as unity for the independent of Sri Lanka against British colonial masters. Then, ethnic relationship was broken by some collection of incidents in the past. In this context, this study attempts to emphasis the concept of ethnicity, ethnic relation, and the nature of ethnic relationship among ethnic groups those are living in the south eastern region of Ampara district in the post-war context consequently. The key objective of this study is to conceptualize the idea of ethnicity and ethnic relation and to understand the ethnic relationship in the south eastern region of Ampara district through the history. Further, this study examines the current progress of ethnic cohesion among Tamils, Sinhalese and Muslims in the area of research. This is primarily a qualitative study. The study shows that the ethnic relation in the study area was strengthened in early period, and it collapsed during the war time and, after 2009 again they are maintaining the rigid relationship within the ethnic groups. But, pathetically, the new era of resettlement activities of the government and the emergence of Buddhist movements highlights as crucial issue to re-raise the same ethnic misunderstanding (prejudice) and discriminations as they had earlier during the war period. So, this situation has to be mitigated by the government and civil society organizations in order to ensure the democracy and the peaceful environment by considering all ethnic groups in the study area as well as in Sri Lanka.*

## Introduction

The internal civil war had taken place in Sri Lanka for last three decades and it destroyed mankind in the country. But the war and terrorism (arm conflict) has stopped by the Government of Sri Lanka (GOSL) in 2009. The fundamental reason for this ethnic conflict was an ideology of ethnicity or misunderstanding of ethnic phenomena, and, which was the huge challenge for the sovereignty of the nation. In Sri Lanka, there are many ethnic groups namely Sinhalese, Tamil, Muslims and Burgers and so on who determine their identity and solidarity in various levels. In the early period, these

ethnic groups maintained their separate ethnic identities as well as they were living together in their common social life (Frerks & Klem, 2004). In past history, Tamils, Sinhalese and Muslims were maintained their rigid relationship and they were fighting as unity for the independent of Sri Lanka against British colonial masters. Then ethnic relationship was broken by some collection of incidents in the past. Hence, this ethnic conflict had growth through some socio-economical and political circumstances of this country. Therefore, this study tries to emphasis the concept of ethnicity, ethnic relation, and the nature of ethnic relationship among ethnic groups those are living in the south eastern region of Ampara district in the post-war context consequently.

## Problem Statement

Before emerging the ethnic conflict in Sri Lanka, all ethnic groups were built their rapport wealthily. This relationship was collapsed by various factors. Therefore, this study basically gives a clear understanding of ethnic relation among different ethnic groups in order to understand the historical causes that influenced to destroy their stretched relationship, and scrutinize how the relationship is reorganized among ethnic groups, especially in the post war context in the south eastern region of Ampara district, Sri Lanka.

## Objectives

The key objective of this study is to conceptualize the idea of ethnicity and ethnic relation and to understand the ethnic relationship in the south eastern region of Ampara district through the history.

Further, this study tries to examine the current situation of ethnic cohesion among Tamils, Sinhalese and Muslims in south eastern region of Ampara district.

## Methodology

This is primarily a qualitative study. Data have collected from primary as well as secondary sources. To collect secondary data, the research articles, magazines, electronic sources and literatures have used. The primary data have gathered through questionnaire (50: based on simple random sampling method), and two (2) focus group discussions (FGD) with the participation of local people and social activists. In addition to this, the data have also been collected from the structured interview with key informants.

## Conceptualizing Ethnicity and Ethnic Relations

Sociology is at the hub of the human sciences concerned with racial and ethnic relation, with relevant to many perspectives (Vera & Feagin, 2007). Within the social sciences, however, the usage has become more generalized to all human groups that explicitly regard themselves and are regarded by others as culturally distinctive. German sociologist Max Weber, who defined it as:

> *" ...those human groups that entertain a subjective belief in their common descent because of similarities of physical type or of customs or both, or because of memories of colonization and migration; this belief must be important for group formation; furthermore it does not matter whether an objective blood relationship exists".*

Ethnicity is used in everyday language; it is actually a rather complex notion, which has evoked significant academic debate. Anthony Smith has defined an ethnic community as óa named human population with the myth of common ancestry, shared memories, and

cultural elements, a link with a historic territory or homeland, and a measure of solidarityô (Smith, 1993). Though this provides us with some means to distinguish ethnicity from other terms like race, nation or tribe, such conceptual distinctions often remain problematic and unclear (Frerks & Klem, 2004).

In Sri Lanka, there is no official classification of ethnic groups, but there are some ethnic groups and minority groups where categorized based on religion, language, historical demographic ratio and other social settings. The distinction between Sinhalese, Tamils and Muslims seems to be considered an essential ordering principle in Sri Lankan society. Though generally considered less relevant, the Burghers, Veddahs, Malays and any other groups small in number are normally mentioned to provide a complete picture of ethnicity.

## Ethnic Relations

Ethnic relation is the area of sociology that studies the social, political, and economic relations between races and ethnicities at all levels of society. This area encompasses the study of racism and of complex political interactions between members of different groups. The sociological analysis of race and ethnicity frequently interacts with other areas in the social sciences such as postcolonial theory and even, in relation to ethnic subcultures and musicology.

Relations among ethnic communities and between them and state may take many forms and occurred under a great variety of circumstances. Some ethnic communities claim homeland status, that they and their ancestors have occupied their homeland for generations and centuries, have stamped their distinctive culture on it settlement, cities, religious structures, and burial grounds to the point that the land is believed to be their unique and sacred inheritance, never mind that they may have been relatively recent arrivals, displacing other people who were there before them (Esman, 2004).

In this chapter it can be determined that the basic patterns of race and ethnic relations are amalgamation (blending two or more groups into a society that reflects the cultural and biological traits of the group), assimilation, pluralism, structured inequality, population relocation and extermination.

Therefore, ethnic relation is much more important for every society to make it in a good position. And ethnic relationship should be developed among different ethnic or religious groups rather than the inferiority manner or minority perception. A member of an ethnic group has to share his feelings and culture with others those who are coming from another ethnic group. Ethnic relation helps person to know the culture, customs, values, rituals, language, and religious beliefs and practices of other community. Because people are having different cultural practices compared to others, and another type of people are living with different ethnic group which has affable customs and culture.

So, nowadays, cultural exchange is also a new phenomenon among social scientists to discuss and doing research in the pasture. Every community is respectively willing to teach their members about the importance of ethnic relationship during their socialization process which helps them to realize their own culture and to classify their systems from others comparatively.

There is a question that is there any connection between ethnic relation and democratic politics? We can answer this; there is a coin connection between politics and democracy. The good ethnic relation is

the reflection of the democratic politics which aim to give equal opportunities for all communities within the territory. For instant, in Sri Lanka, every civil society is thinking how to rebuild the ethnic relation between groups with high communal efforts. After end of the civil war, the government of Sri Lanka also tries to make the ethnic harmony among all communities in the island from North to South, free from terrorism, fear and tension situation.

To implement full democratic political practice in any country, every political leaders and civil organizations have to mobilize different ethnic groups in to a common pool constructively. At the same time, each member of the ethnic group also has to respect other ethnic or minority group without any hesitation and doubtful circumstances or prejudice manner.

Ethnic relation is helping to establish new ideas of democracy and it gives spaces to implement valuable progress focusing the betterment or wellbeing of the individual, family and social groups. In a country, the government should Build up social harmony

- Plane Development activities
- Rule people in the democratic path
- Give equal opportunity for all citizens of the country in employment, education and social prospects etc.
- Formulate welfare policy for public
- Provide assistance and social support for all victims and vulnerabilities, and
- Protect the nation from terrorism and violent situations

To make these all arrangements every society need an excellent strengthen relationship, especially in the multi-ethnic societies like India and Sri Lanka. Therefore, all scholars are pointing out that the ethnic relation is essential and it should be an exceptional for the betterment of the community or country in the world.

## South Eastern Coastal Region: A Brief Introduction

Ampara district is located in the south-east of Sri Lanka in the Eastern province (Figure 1). It is one of three administrative districts in the Eastern Province which was separated from Batticaloa district in 1961 (Kaleel, 2003). It has an area of 4,415 square kilometers (1,704.6 sq. met) and has population of 648,057 (Census, 2012). South Eastern coastal region is covers 13 Divisional Secretariats as follow;

1. Kalmunai (Muslim Division)
2. Kalmunai (Tamil Division)
3. Sainthamaruthu
4. Sammanthurai
5. Nintavur
6. Navithanveli
7. Irakkamam
8. Karaithivu
9. Addalaichenai
10. Akkaraipattu
11. Thirukkovil
12. Aalyadivembu
13. Pottuvil

Following figure clearly shows the location of the South Eastern region of Ampara district which is the study area.

Ampara district has 20 local authorities of which two are Municipal Councils, one is an Urban Councils and the remaining 17 are Pradeshya Sabhas (Ministry of Local Government and Provincial Council, 2011).

Among them there are two municipal councils and eleven pradeshiya saba comes under south eastern coastal region. This district is covered by Periyaneelavanai in North, Panama in South, Ampara town in West and Bay of Bengal in the East. The costal areas, Kalmunai, Sammanthurai, Nintavur, Addalaichenai, Akkaraipattu and Pottuvil villages are dominated by Muslims. It is rich in natural resources like water and fertile land. Because of this, the district is known as ñStore of Paddy in Eastò (Jameel, 1997). In addition, sea is in its east side and huge paddy lands in its west side. Most of the people in this region work in paddy lands and commercial establishments. Some of them work in government and non-governmental organizations and in small industries.

**Figure: 1**
**Ampara District: location of the Study Area**




The district is one of the most diverse in Sri Lanka, both ethnically and religiously. This is a multi-ethnic, multi-religious, and multi-cultural district. Sinhale, Muslim and Tamil are the three major communities living in the district and the ethnic ratio is 43.59 % Muslim, 38.73 % of Sinhalese and 17.40 % of Tamil, 0.13% of Burgher and 0.15 % of others in 2012 (Census, 2012). The Sinhalese largely live in the great majority of the interior area of the district, while the Tamil and Muslim populations are located mainly along costal belt, often in close proximity.

## Results and Discrssim

We look at this situation to understand the condition of relationship between deferent ethnic groups in the area of research. This title talks about the present position (social manner) of each communities living together in several areas of the south eastern coastal

region of the Ampara district. The study used the direct observation, personal experience and the key informant interview with people who know the real fact about this area and its present position in terms of ethnic harmony.

In early period, before 2004, people conflicted based on land (cultivation land) issues between Tamils and Muslims. Example, in Pottuvil divisional secretariat area Tamils and Muslims were consequently competitive for their land for many years. But now it is come to an agreement level. On the other hand, Muslims and Tamils needed separate hospital for each ethnic community. For instant, in Kalmunai there was a Base hospital commonly. But, Muslims were thinking that this hospital is predominant by Tamils and it situated in the area where Tamils were majority. At the same time, Muslims also requested late minister (MHM. Asraff) for the separate hospital which should be established in Muslim dominant area in Kalmunai. Then Asraff memorial hospital was established in the south part of the Kalmunai Municipal area, this is also as a result of ethnic manner and ethnic fear of one group from another.

Another important thing is that Tamils and Muslim in Kalmunai municipality area, they requested for separate administrative body for them. As a result of this, there are two Divisional Secretariat divisions such as Kalmunai Muslim division, and Kalmunai Tamil division were established. These types of events were happening during the early period.

But, after end of civil war, in this present situation it can be seen a quiet and peaceful environment in this research area.

- People can travel to visit any area without fearing of terrorism and arm conflict or civil fight

- They collaborate with other communities in any situation and for any purpose as they were in earlier

- Civil societies are promoting people to work and live together

- Many civil societies and other non-governmental organizations are generating and facilitating the ethnic group or communities to understand each other and the significant of ethnic relationship

- Sinhalese, Tamils and Muslims are living without fear from any tension and terrorist activities. This situation creates a peaceful environment for all communities (Fazil, MM).

But, in some situations, people confused on this present political circumstances. Some time the activities of the government will create Sinhala dominant social structure or set up (people feel). Dr. Dammika Herath pointed out in his research that;

> *"Muslims are living with severe tension and fear about Sinhalese in terms of resettlement activities of the Sri Lanka government. People think that these resettlement activities (resettlement project of Deegavapiya in Ampara district) may help to increase the population of Sinhalese in Ampara district which is dominant by Muslims at present"*

Thus, these kinds of activities create different thinking among Muslim and Tamil communities in general. Because, the past Gal-oya project is very important evident for Tamils and Muslims to remain the resettlement of Sinhalese from South and other regions of the island. (Fazil, MM., and A. Sarjoon)

In such a way, the

- Oluvil port project (Deegavapiya is very closed to Oluvil)
- Entrance of Sinhala students to the South Eastern University
- Initiation for Sub Divisional Secretariat for Deegavapiya (Deegavapiya administrative under Addalaichenai D.S. division at present)
- Karunaôs activities to propose new administrative territory for Tamils wrap in Periyaneelawanai and some part from Kalmunai town.

Through these aforementioned activities, Muslims as well as Tamils feel that these all will be challenged for their self determination and future potential. They feel that the Tamils and Muslims will be excluded from social, economic and political strengthen in future (Fazil, MM).

Muslims and Tamils are living efficiently in this situation in Ampara district although they have some fears and tensions as we discussed above. They all come to a good development environment as well. For instant:

- Development of their wellbeing
- Livelihood development
- Free from tension and fears
- Smoothness on day-to-day life
- Safe from destroying properties and other sympathies
- They are able to go to their paddy lands
- Free from terrorism and conflict, and
- Peaceful environment for enjoyable life

Anyhow, the tension will be reduced in near future, because attitude change and structural changes are very important factors to rebuild the relationship among these three communities. Three ethnic groups or communities have given a good atmosphere, after end of the civil war, for survival wellbeing. It is fact that we all have to accept in this situation without any doubt.

**Relationship between ethnic groups**

- The relationship between Tamils and Muslims were very cordial not only in Southeastern coastal region but also in the whole eastern province.
- Tamils and Sinhalese speak different languages; there were close interaction between them. Especially, Tamils and Sinhalese in Ampara district interacted in terms of culture and arts.
- Relations between Sinhalese and Muslims are especially intense in the research area.

**Disparities between ethnic groups**

- Disparities between Muslims and Tamils emerged only after 1980s. The main cause for the disparities is the land problems.
- Tamils and Sinhalese were together in many activities for long time. The planned activities of the majority group damaged this relationship. The disparities between them started with the launching of Gal-oya dam scheme.
- A strong relationship existed between Sinhala Muslim communities for a long time in elsewhere in Sri Lanka including Ampara district. However, it has started deteriorating during the recent past, particularly after civil war, due to various reasons.

Aforementioned findings we gain from this study to understand the relationship and disparities among different ethnic groups in the South Eastern coastal region of Ampara district.

## Conclusion

In Sri Lanka, after civil war we have to realize the relationship among Tamil, Sinhalese and Muslims and to deal with disparities among these three communities in the recent past. Hence, this study focused on the concept of ethnicity, ethnic relation and significance of ethnic relationship, deferent types of ethnic groups those are living in the south eastern coastal region of Ampara district. In past history, Tamils, Sinhalese and Muslims were maintained their rigid relationship and they were fighting as unity for the independent of Sri Lanka against British colonial masters. Then ethnic relationship was broken by some collection of incidents in past. So, this ethnic conflict had growth through some socio-economical and political circumstances of this country.

## Recommendations

To sustain the relationship among ethnic groups it can be suggested some important recommendations as follow:

- Make some innovative awareness program for all communities in terms of ethnic harmony to mobilize them into a common social scenario.
- Enlighten the significant of ethnic relation among three communities, not only in this research area but in every part of the island.
- Systematize the link program which should be connected people from different ethnic groups and communities.
- To interact people, it can be constructed some research activities (joint research) within societies and regional and national level.
- Organize inter cultural programs in order to understand culture, religion, feelings and social sentiment of each other.
- Remove prejudice mentality or discrimination from every ethnic group.
- Implement co-existence programs which cover all types of ethnic communities in future to avoid the feeling of exclusion or misunder standing.
- Civil societies should be made some appropriate preparations in terms of organize people to build a good rapport harmfully.

The government or non-governmental organizations and community based organizations can implement above recommendations to preserve a cordial relationship among all communities and ethnic groups in the study area. After end of civil war, we have given a harmful situation in Sri Lanka. Every citizen of this country can go to paddy field, school, market, and anywhere without fear and tensions. Security also very tighten to protect and safe people from fear and terrorism. So, the government of Sri Lanka also observing every moment of socio, political activities in terms of providing the safeness and healthy situation for all communities in the country. Through this study, it can be understood that ethnic relation is much more important for every society to make it in a superior position. And ethnic relationship should be developed among different ethnic or religious groups rather than the inferiority manner or minority perception. Then only we will be able to build up a matured community in Sri Lanka toward positive peace and the developmental standard in near future.

## References

Anthony D. Smith (1993). *The ethnic source of nationalism,* Published online: 03 March 2008.

Frerks, G., & Klem, B. (Eds). (2004). *Dealing with diversity: Sri Lankan Discourses on peace and conflict*, Clingendael: Netherlands Institute of International Relations.

Jameel, S. H. M. (1997). *Muslims of Ampara District*, In. Rameez Abdullah: *Relationship among ethnic groups in Eastern Sri Lanka*, Colombo: Ministry of religion and cultural affairs.

Kaleel, M.I.M. (2003). *Demography of Ampara district*, South Eastern Social Development Society.

Milton J. Esman (2004). *An Introduction to Ethnic Conflict*, United Kingdom: Polity Press.

Herman Vera & Joe R. Feagin., (2007). Handbooks of the Sociology of Racial and Ethnic Relations.

Noorul Huque, M.M.M. (1998). *Theevum Theervum*, Sainthamaruthu: Marutham kalai Ilakkiya vattam.

Victor (1997). *Muslim Thesamum Ethirkaalamum*, Akkaraippattu : Moonraavathu Manithan Publishers.

Department of Census and Statistics, Census Report. (2012). Sri Lanka

Ministry of Local Government and Provincial Council. (2011). Sri Lanka

## Interview

Fazil, M.M. Lecturer in Political Science, Department of Social Sciences, Oluvil: South Eastern University of Sri Lanka.

Sarjoon, A. Lecturer in Political Science, Department of Political Science, University of Peradeniya

Journal of Social Review
Volume 3 (2)
December 2014
Department of
Social Sciences

# பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை : மீளாய்வும் விளக்கமும்

# VIOLENCE AGAINST WOMEN : REVIEW AND EXPLANATION

*கலாநிதி.ஏ.எல்.எம்.றியால்*

## ஆய்வுச் சுருக்கம்

*சமூகத்தில் முக்கிய பகுதியினராக காணப்படும் பெண்கள் அவர்களது வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துவருகின்றனர். அப்பிரச்சினைகளுள் வீட்டு வன்முறை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வீட்டு வன்முறைகளின் தளமாக பெண்களின் வாழ்விடங்கள் அமைந்திருப்பது துரதிஸ்டவசமானது. அதேவேளை வீட்டு வன்முறைகளின் தாக்கம் இன்று குடும்பங்களுக்கு அப்பால் சமூக மட்டத்தில் பாரியதொரு பிரச்சினையாகவும் மாறிவருகின்றது. இதனால் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் குறித்த சர்வதேச, தேசிய மட்ட ஆய்வுகளும் அதிகரித்தவண்ணமுள்ளன. இப்பின்புலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறைகளின் பல்வேறு பரிமானங்களையும் புரிந்து கொள்ளத்தக்கதாக அது தொடர்பில் காணப்படுகின்ற அனுபவ ஆய்வுகள் தொடர்பான மீளாய்வு விளக்கத்தினை வழங்கத்தக்கதாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## அறிமுகம்

எமது மக்களிடத்தில் குடும்பம் என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்றும், வன்முறைகளில் இருந்து பாதுகாப்பு பெறவும், மற்றும் வாழ்வாதாரத்தையும், பாதுகாப்பையும், குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கும் இடமாகவும் அது இருக்கும் என்ற எண்ணத்தை வழங்குகின்றது (Bamettetal,1997:4) உண்மையில் பெண்களுக்குக்கெதிரான தனிப்பட்ட வன்முறைகள் அதிகம் இடம்பெறும் இடமாக குடும்பம் காணப்படுகிறது (Moonachie & Van Zyl,1994:35). வீட்டு வன்முறையானது தீவிரமான பொருளாதார, சுகாதார, சமூகப் பிரச்சினையாகும். இது தொன்று தொட்டே பொதுவாக இடம்பெற்று வருவதாகவும் (Bowker,1983:1), தற்போது அது எல்லா இடங்களிலும் அதிகரித்துள்ளதாகவும் வரலாறு சான்று பகிர்கின்றது (Schomstein,1997:2).

பெண்களின் பிரச்சினை தொடர்பான அவதானமானது வீட்டு வன்முறையை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறு துறைகளில் இருந்தும் நிபுணர்களைத் தூண்டியது. ஆனால் முன்னேற்றமான வெளிப்பாடுகள் உறுதியானதாக ஏற்படவில்லை (Finkelhor,1988:90). ஏனெனில், சகலவிதமான மனித குழுமங்களுக்கும் குடும்பம் என்பது மிக அடிப்படையானதும், சிக்கல் மிக்கதும், தீவிரமானதொரு அமைப்பாகவும் காணப்படுவதனாலாகும்

(Finkelhor, 1988:9). குடும்பக் கட்டமைப்புப் பற்றி மிக அதிகமான நம்பிக்கை சார்ந்த விடயங்கள் தொன்றுதொட்டு பேசப்பட்டாலும் அவையாவும் உண்மையல்ல (வெறும் கட்டுக்கதை மாத்திரமே). இவ்வீட்டு வன்முறையில் ஒருவர் வினைத்திறனான ஆய்வினை மேற்கொள்வதற்கு ஆய்வாளன் வீட்டு வன்முறை பற்றிய ஆய்வின் மீள் நோக்கு, அதற்கான காரண காரியங்கள், அதன் தோற்றுவாய்கள், வகைகள், பொது இயல்புகள், மனித சமூகத்தைப் பாதிக்கின்ற கடும்போக்குடைய ஆண்களின் தனிப்பட்ட குணாதிசயங்கள், வீட்டு வன்முறையின் பரவல், ஏன் பெண்கள் இவ்வாறான துஷ்பிரயோகம் செய்யத்தக்க உறவுமுறையில் தங்கியுள்ளார்கள், அவர்கள் எவ்வாறு வீட்டு வன்முறைக்குப் பதிலளிக்கின்றார்கள் போன்றன பற்றிய அறிவைப் பெறுவதற்கு இவ்வாய்வுரை முயலும். இக் கட்டுரையானது தற்போதைய நிலைப்பாட்டில் காணப்படுகின்ற பெரும் கொள்கை சார்ந்த அடிப்படைக் கட்டமைப்பிற்கான பின்னணியை வழங்குவதோடு சமுதாயத்தில் நிலவுகின்ற வன்முறையை விளக்குவதற்கும் உதவுகிறது.

## வீட்டு வன்முறை பற்றிய ஆய்வின் மீள்நோக்கு

20 ஆம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதி வரைக்கும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றி சமூக விஞ்ஞானிகள் ஆய்வுக்குட்படுத்தியது மிகக் குறைவாகும். 1970 ஆம் ஆண்டில்தான் மேற்கத்தைய சமூகவிஞ்ஞானிகள் குடும்பங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறையின் தன்மையினையும் விடயத்தையும் பற்றிய ஆய்வினை மேற்கொண்டனர். அவர்கள் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய அடிப்படை ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான தீர்வுக்கும் வழிவகுத்தனர். சமூக விஞ்ஞானிகள் வீட்டு வன்முறைக்கு உள்ளாகியோருக்கு ஆலோசனை வழங்கியதோடு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியவர்களுக்கும் சிகிச்சை வழங்கும் திட்டத்தினையும் கொண்டு வந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் சிலர் முரண்பாட்டு தந்திரங்களை இனங்காண்பதில் அபிவிருத்தியடைந்த குடும்பங்களிலுள்ள வன்முறை வாய்ப்புக்களையும் அடையாளம் கண்டு கொண்டனர். எவ்வாறு இருந்தாலும் இலங்கையில் மிகச் சிலரே இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். இதில் பெரும்பகுதியினர் சீதனம் தொடர்பான வன்முறை பற்றிய ஆய்வினையே மேற்கொண்டனர். 1980 களிலிருந்துதான் தனித்தன்மை வாய்ந்த முயற்சிகளினால் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகளின் தன்மை இனங்காணப்பட்டது. இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் ஒன்று சேர்த்து ஓர் முறையான புரிந்து கொள்ளலுக்கு வருவது இப்பகுதியின் நோக்கமாகும்.

ཀஉலகிலேயே மிகவும் பொதுவான வீட்டு வன்முறை மனைவியை அடிப்பதாகும்ཀ என 1989 இல் David Levinson (1989) Yale பல்கலைக்கழகத்தில் மனித உறவுகளின் பதிவுகளை அவதானித்து இனங்கண்டு கொண்டார். இவர் 90 சமூகங்களை மாதிரியாக தெரிவு செய்துள்ளார். இவ்வாய்வு மூலம் சமூகத்திலுள்ள 74.5 சதவீதமான மனைவிமார் தொடர்ந்து அடிவாங்குவதோடு 15.5 சதவீதமான சமூகத்தில் இது நடைபெறுகின்றது என்பது கண்டறியப்பட்டது.

அமெரிக்க சமூக விஞ்ஞானிகள், பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை நிகழ்வுகளைக் கண்டறிவதற்கு பல ஆய்வுகளை நடாத்தினார்கள். இவ்வாய்வின் முடிவுகள் கணிசமான வேறுபாட்டினைக் கொண்டுள்ளன. வன்முறை நிகழ்வுகள் 12 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை காணப்பட்டன. இந்த ஆய்வில் முக்கிய பங்களிப்பாளர்களாக Straus (1979& 1980), Gelles & Steinmentz (1980), Walker (1989), Nisonoff & Bitman (1979), Szinovacz (1983) ஆகியோர் விளங்குகின்றனர். 1980 இல் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வாளர் வீட்டு வன்முறை நிகழ்வுகளை அளவிடுவதற்கு 3300 குடும்பங்களை மாதிரியாக தெரிவு செய்து அளவீடு செய்தார். இதன் முடிவாக வருடத்திற்கு 309 மில்லியன் வன்முறை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன என்பது கண்டறியப்பட்டது.

மேலும் இரண்டு கணக்கெடுப்பாளர்களும் இதே முடிவினை முன்வைத்தனர். 1986 இல் ஐக்கிய அமெரிக்காவில் இரண்டாம் தேசிய குடும்ப வன்முறையில் கணக்கெடுத்த தகவலின் பிரகாரம் 16 சதவீதமான குடும்பங்கள் சிலவகையான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது என தெரிய வந்தது.

டேவிட் லெவின்ஸன் உலகம் முழுவதும் வெவ்வேறு சமூகங்களில் காணப்படும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய ஆய்வுகள் பரந்த முறையில் நடை பெறுகின்றன என்ற தகவலை வெளியிட்டார். இவ்வாறான வன்முறைகள் 1937 இல் Baluds என்பவர் பிரேசிலில் உள்ள Bororo சமூகத்திலும், 1984 இல் Erachak என்பவர் Kepelle of libiria விலும், 1937 இல் Evans என்பவர் Azande of Central Africa விலும், 1964 இல் Hammand என்பவர் Moosi of mali apவிலும், 1962 இல் Lewis என்பவர் Somali of Somalia விலும்,1940 இல் Mair என்பவர் Granda of Yuganda விலும் மற்றும் 1976 இல் Savishinsky என்பவர் Hare of Canada விலும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன் முறைகள் நடைபெறுகின்றன என்ற தகவல்களை முன்வைத்தனர்.

இங்கிலாந்திலும் வீட்டு வன்முறை தொடர்பாக பல ஆய்வுகள் இடம்பெற்றன. 1989 இல் Hammer, 1985 இல் Johnson மற்றும் Maidment, 1984 இல் Saunders மற்றும் Chambers & Tombs, 1987 இல் Radford மற்றும் Bains 1983 இல் Hough & Mathew, 1986 இல் Hall ஆகிய சமூக விஞ்ஞானிகள் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய ஆய்வில் முக்கிய பங்களிப்பினை ஆற்றினார்கள். 1989 இல் Hammer என்பவர் இங்கிலாந்திலுள்ள West Yokshire காவல் நிலைய அறிக்கையின் படி ஒரு வருடத்தில் 67 சதவீதமான மனை விமார் கணவன்மார்களால் வன்முறைக்குட் படுத்தப்படுகின்றனர் என்பதனை கண்ட றிந்தார்.

1986 இல் Ferguson என்பவர் நியூசிலாந் திலுள்ள 1000 குடும்பங்களை ஆய்வுக்கு உட்படுத்தினார். மனைவிமார் ஆறு வருட காலமாக குடும்ப வாழ்க்கையில் 8.5 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை காணப்படுகின்றனர் என்ற தகவலை வெளியிட்டார். 1983 இல் Zoomer என்பவர் நெதர்லாந்தில் இன்னு மொரு ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய் வானது பெண்களுக்கு எதிரான வீட்டு வன் முறையானது பொதுமையடைந்துவிட்டது என்பது தொடர்பாக அமைந்திருந்தது. எவ்வா றாயினும் வன்முறை தொடர்பான இவ்வாய் வுகள் அமைதியாகவே இருந்துவிட்டன. 1989 இல் Australia ஆஸ்திரேலியாவில் Hatty என்பவர் பெண்களுக்கு எதிரான வன்முறை மிகவும் நிறைவு பெற்றுவிட்டது என்ற தகவலை முன்வைத்தார். எவ்வாறாக இருப் பினும் இவ்வாய்வில் வன்முறை இடம் பெறுகின்ற விதமானது சுட்டிக்காட்டப்பட வில்லை.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை தொடர்பாக முக்கியமாக, மனைவிமார் துன்பு றுத்தப்படுதலை நிவர்த்தி செய்வதற்கான காரணிகளைக் கண்டறிவதற்கு அதிகமான ஆய்வுகள் இடம்பெற்றன. சமூகவியலாளர்கள் பலர் சமுதாயத்தில் வேறுபட்டுக் காணப்படு கின்ற நடத்தை முறைகளுக்கு காரணமாக அமைகின்றவற்றை கண்டறிய முயற்சி செய்தனர். 1988 இல் Ptacek என்பவர் கண வன்மார் மனதினால் பாதிக்கப்பட்டவர் களோடு ஆளுமை கோளாறுகளையும் கொண்டவர்கள் என கூறினார். 1977 இல் Faulk என்பவர் கணவன்மார் செயலற்ற வர்கள் என வர்ணித்தார். 1993 இல் Gleason என்பவர் கணவன்மார் தங்களது மனதினை அலைக்கழிப்பவர்கள் என்று கூறினார். 1977 இல் Shainess என்பவர் கணவன்மார் சித்தப் பிரமை கொண்டவர்கள் எனக் கூறினார். 1964 இல் Snell என்பவர் கணவன்மார் இன்பம் பெற மற்றும் அடிமைப்படுத்த விரும் புபவர்கள் எனக் கூறினார். 1982 இல் Elliot, Iqtt மற்றும் Schauss என்பவர் கணவன் மாருக்கு நரம்பியல் மற்றும் உயிரியல் கோளாறுகள் உண்டு எனக் கூறினார். இவ் வாறான ஆளுமைக் கோளாறுகள் நேரடியாக தவறான நடத்தைக்கே இட்டுச் செல்லும். இவை எதிர்மறையான செயலுக்கு இட்டுச் சென்றுள்ளன. 1977 இல் Ball மற்றும் 1964

இல் Snell ஆகியோர் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட வர்கள் என்று வர்ணித்தனர். 1982 இல் Dreen என்பவர் பெண்கள் வெட்கத்தன்மை மற்றும் உறுதியற்ற தன்மை உடையவர்கள் எனக் கூறினார். எவ்வாறாக இருப்பினும் 1980 இல் Staus என்பவர் இக் கருத்துக்கள் யாவற்றையும் நிராகரித்தார். இவை வெறும் கட்டுக்கதையே தவிர வன்முறைகள் யாவும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களால் மாத்திரமே இடம்பெறுகின்றன என்று கூறினார்.

Boyd (1978), Coleman (1980), Gayolord (1975), Gelles (1980), Straus (1982), Kaplan (1972), Labile (1979), martin (1976) & Walker (1981) ஆகியோரின் ஆய்வின்படி வன்முறை புரிபவர்கள் குறைந்த சுய மரியாதையினை உடையவர்கள் என்றும் அவர்கள் போதா மையினையும் தங்களது ஆண்மையினையும் ஈடு செய்வதற்காக வன்முறையில் ஈடுபடு கின்றார்கள் என்றும் கூறினார்கள். பாதிக்கப் பட்ட பெண்களும் சுயமரியாதையற்றவர் களாகவும் உதவியற்றவர்களாகவும் விவரிக்கப்பட்டார்கள். உள்ரீதியான மற்றும் வெளிரீதியான மன அழுத்தங்களே பெண் களுக்கு எதிரான வீட்டு வன்முறையாக காணப்படுகின்றன. பல ஆய்வுகள் வன் முறையை ஏற்படுத்தியவர்கள் பாதிக்கப் பட்டவரின் எந்தவித பொறுப்பையும் ஏற்கக்கூடாது என்று கூறின. Adams (1982), Bhatti (1985), Dobash (1979), Mahajan (1989), Shah (1989), Saunders (1982) & Starus (1980) ஆகியோர் வன்கொடுமையாளர்களின் நடத்தையானது மாறுபட்டதொரு நடத்தை யென விபரிப்பதோடு அவர்கள் பெண்கள் மீது பழிசெலுத்தினார்கள் என்றும் கூறினார் கள். 1993 இல் Cantons என்பவரும் 1976 இல் Kipnis என்பவரும் பாதிக்கப்பட்டவர் களை குற்றம் சொல்லுதல் மிகவும் இறுக்க மாக இடம்பெற்றது என்று கூறினார்கள்.

Gelles (1972), Helton (1985), Kalpan (1972), Stark (1981) & Walker (1979) ஆகியோரும் தங்களது ஆய்வின் மூலம், கர்ப்பிணிப் பெண்கள்தான் வன்முறையினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் என்ற கருத்தை கூறினார்கள். மேலும் பல ஆய்வில் மனை விமாரை உடல் ரீதியாக தாக்குவதற்கு பாலி யல்,பொறாமை போன்ற பல விடயங்கள் காரணங்களாக அமைகின்றன எனக் கூறினார்கள். கணவன் மாரின் வன்முறை நடத்தைக்கு அவர்களது பொறாமைக் குணமே காரணம் என பாதிக் கப்பட்ட பெண்கள் உணர்ந்தார்கள்.

பல ஆய்வுகள் குறைந்த வருமானத்தைப் பெறும் வகுப்பைச் சேர்ந்தவர்களிடையே வீட்டு வன்முறையானது இடம்பெறுகின்றது எனக் கூறின. இதற்கு காரணம் குடும்பத்தில் காணப்படும் பொருளாதாரக் குறைபாடாக இருக்கலாம் என்றும் கூறின. Davis (1963) & Whitehurts (1974) ஆகியோர் குறைந்த வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களில் பெண் களுக்கு எதிரான உடல்ரீதியான வன்முறை கள் மிகவும் இயல்பான முறையில் இடம் பெறுகின்றன என்று கூறினார்கள். Berketal (1983), Dobash (1979), Giles- Sims (1983) & Hilberman (1980) ஆகியோர் தங்களது ஆய்வில் பெண்களுக்கு எதிரான வீட்டு வன் முறையானது அவர்களது வர்க்க நிலையி லேயே தங்கியுள்ளது என்று கூறினார்கள். ஆசியாவில் குறிப்பாக, இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலுள்ள் நடுத்தர குடும்பங் களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சீதனம் காரணமாகவே நிகழ்ந்தன. Morgolin (1988) & Cornell (1990) ஆகியோர் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கும் சீதனம் காரணமாக வன்முறைகள் நிகழ்ந்தன என்றும் கூறினார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது அவர்களது கணவன்மாரின் தொழில் நிலை வாய்ப்பிலேயே தங்கியுள்ளது. கணவனுக்கு தொழில் வாய்ப்பு அற்ற குடும்பத்தைச் சேர்ந்த அவர்களது மனைவிமார் கணவனால் துன்புறுத்தப்படுவதோடு கணவனின் தாய், தந்தையாலும் துன்புறுத்தப்படுகின்றனர். நன்கு பயிற்றப்பட்ட தொழிலில் இருக்கும் கணவன்மாரைவிட நன்கு பயிற்றப்படாத தொழில் இருக்கும் கணவன்மாரே தங்களது மனைவிமாரை அதிகம் துன்புறுத் துகின்றனர். பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை களும்கூட பொருளாதார நிலையிலேயே தங்கியுள்ளது. வீட்டுக்கு வெளியில் சென்று

எதுவித தொழிலும் புரியாது வீட்டிலேயே தங்கியிருந்து வேலை செய்யும் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பெண் களுக்கு சில தனிப்பட்ட வளங்கள் அல்லது சொத்துக்கள் இருக்கும் போது அவர் களுக்கு எதிரான வன்றையும் தீவிரமடை கின்றது. எனினும் Fitch & Popantonio (1983), Gaguin (1978), Hornung (1981), Stark (1988) & Levinson (1989) ஆகியோர் தங்களது ஆய்வுகளில் வீட்டுப் பணிபுரியும் பெண்கள் தொழில் புரியும் பெண்களைவிட குறை வாகவே தாக்கப்படுகின்றனர் என்று கூறினார்கள். பல ஆய்வுகள் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் சாதாரணமாக இடம் பெற்றதுடன் கணவன்மாரில் தங்கி யிருக்கும் பெண்களுக்கே அதிகமான துன்பு றுத்தல் நிகழ்ந்தது எனவும் கூறின.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைக் கான காரணங்களை மேற்கூறியவாறு பல ஆய்வுகளில் ஆய்வாளர்கள் கூறியுள் ளார்கள். எனினும் நாங்கள் இன்னும் துன் புறுத்துவதற்கான முழுமையான காரணி களின் கணக்காய்வு பற்றி பார்க்கவில்லை. மேற்கத்தைய சமூகவியலாளர்கள் பெண்க ளுக்கு எதிரான வீட்டு வன்முறைப் பிரச்சி னைகளைத் தீர்க்கும் வழிமுறைகளில் ஈடுபட் டனர். அவர்கள் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்வினைகளை மட்டும் பாராது அவர் களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தி களையும் அவதானித்தனர். வீட்டு வன் முறையினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வரும் வித்தியாசமான எதிர்வினைகளைக் காட்டினார்கள் என ஆய்வுகள் கூறின. Ownes (1975), Harrop (1989), Munson (1981) & Staret (1979) ஆகியோர் வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்வினைகளாக பயங்கரவாதம், வெட்கம், சீரழிவு, குற்ற உணர்வு, அவமானப்படுத்தல், தொடர்ந்து பதட்டமாக இருத்தல் மற்றும் மன அழுத்தம் ஆகியனவே காணப்பட்டன என்று கூறினார்கள். பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறையினால் ஏற்படும் தீய விளைவுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் சென்றடையாமல் அவர்களது குடும்பத்திற்கும் சேர்த்தே சென்றடையும். பாதிக்கப்பட்டவர்கள் எப்பொழுதும் சமூக ஆதரவிலிருந்து தனிமைப்படுத்தப்படு கின்றனர். இவர்கள் தங்களது குழந்தைகள் மீது குறைந்தளவான பாசத்தையே வெளிப் படுத்துவர் அவ்வாறே நேரடியான தற் கொலை அல்லது மறைமுகமான தற் கொலை முயற்சிகளுக்கு வழிவகுப்பர் (Straus 1980, Ponzetti 1982, Back 1982, Pagelow 1984 and Counts 1988).

சில சமூகவியலாளர்கள் பெண்கள் வன் முறைப்படுத்தப்படும் போது அவர்கள் அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டனர். வீட்டு வன் முறையினால் பாதிக்கப்படும் பெண்கள் தங்களது திருமண பந்தத்தின் மீது மதிப்பு வைத்திருப்பதால் தங்களது கணவன்மாரை விட்டு விலகி தனியே சென்று வாழ்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. அவ்வாறே சமூகங்களில் தனியாக வாழ்வதில் பயம், சிறுபிள்ளைகளின் இருப்பு போன்ற பிற காரணங்களும் உள்ளன.

சமூக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் ஒரு சமூக பிரச்சினை பற்றி ஆய்வு செய்யும் போது, அப் பிரச்சினைக்கான காரணங்களை யும் அப் பிரச்சினை தோன்றும் சந்தர்ப்பத்திற் குமான காரணிகளையும் கண்டறிந்து அதை எவ்வாறு தீர்த்தல் வேண்டுமென கூறும். பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைக்கு காரணம் பெண்கள் சமூக மதிப்பினை பெறு வதாலும் அவர்கள் தங்களது கணவன் மாரைச் சார்ந்து இருப்பதனாலும் என பல ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். எனவே இப்பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரவேண்டு மாயின் பெண்கள் தங்களது கணவன்மாரைச் சார்ந்து இருத்தல் கூடாது. அத்தோடு சமூக மதிப்பிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை ஆய்வானது, பெண்களின் எதிர்காலத்திற்கு உதவி புரிகின்றது. கீழ் தரப்பட்டுள்ள பல காரணங்களை இந்த ஆய்வுகளை தற்காலத் தில் செய்யும் ஆய்வுகளுக்கான ஒரு மாதிரி யாக எடுத்தல் கூடாது.

1) பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை வரையறைக்கும் ஆராய்ச்சியாளர் களுக்குமிடையில் எந்தவித ஒப்பந் தமும் இருக்கக்கூடாது.

2) பல ஆராய்ச்சியாளர்கள் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறையின் குறிப் பிட்ட அளவிலான அம்சங்களையே கருத்தில் கொண்டனர்.

3) அனைத்து ஆராய்ச்சியிலும் ஆய்வா ளர்கள் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றி முழுமையாக அணுக வில்லை.

4) வீட்டு வன்முறையினைத் தீர்ப்பதற் கான வழிமுறைகள் கலாச்சார சூழல் சார்ந்ததாகவே இருந்தது. எனவே, மேற்குநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது தற்போதைய ஆசிய நாடுகளின் சூழ்நிலைக்கு பொருந்தாது.

## பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைக்கான கோட்பாடுகள்.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறையின் இயல்புகள் பற்றி விளங்கிக் கொள்வதற்கும் வீட்டு வன்முறையோடு தொடர்புபட்டிருக்கும் முக்கிய சமூக காரணிகளை இனங்காண்ப தற்கும் பெண்களுக்கு எதிரான வன்முறை களை குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற் குமான வழிமுறைகளை இனங்காண்பதற்கு சமூக விஞ்ஞானிகளும் உளவியலாளர் களும் பல்வேறுபட்ட கோட்பாடுகளை பயன் படுத்தியுள்ளார்கள். எனினும், தற்போதைய ஆய்வுப் பிரச்சினைகள் சமூக நோக்கிலேயே ஆராயப்படுகின்றன. எனவே இதற்கான தீர்வுகளும் சமூக நோக்கினை அண்மித்தே காணப்படுகின்றன. சமூக நோக்கில் அமை கின்ற முடிவுகள் பண்பு சார்ந்ததாகவும் அளவு சார்ந்ததாகவும் அமைகின்றன. வீட்டு வன்முறைக்காக ஆராய்ச்சியாளர்களால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு கோட்பாடும் பின்வருமாறு பிரித்து ஒவ்வொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### வளக் கோட்பாடு:-

இங்கு குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறவி னதும் வளங்களின் தன்மைக்கேற்பவே அக்குடும்பத்தில் முடிவுகளானது மேற்கொள் ளப்படும். வளக்கோட்பாடு திருத்தப்பட்டு அது பிற்பாடு தகுதி முரண்பாட்டுக் கோட்பாடு என்று அழைக்கப்பட்டது. குடும்பத்தில் பெண் களது சக்தி அதிகரித்து செல்லும் போது கணவனுக்கும் மனைவிக்குமிடையில் தகுதி முரண்பாடு ஏற்படுகின்றது. இதனால்தான் வன்முறைகள் அதிகம் நிகழ்கின்றன என இக்கோட்பாடு கூறுகின்றது. எனினும் அனுப வரீதியான ஆய்வினை மேற்கொள்ளும் போது சீரற்றதொரு முடிவு பெறப்படுகின்றது.

### சமூகக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு

இக்கோட்பாட்டின் படி குடும்பத்திலுள்ள உறவுகளை இலகுவாக முறித்துக்கொள்ள முடியாது. எனினும் குடும்பத்தில் உள்ள வர்கள் அநீதி விளைவிப்பவர்களாக இருப் பார்களேயானால் அங்கு வன்முறை நிகழும்.

### அடையாளத் தொடர்புக் கோட்பாடு

இக்கோட்பாடானது ஒவ்வொரு சந்தர்ப்பத் திற்கும் ஏற்றவாறு வன்முறைகள் வேறுபடும் என்று கூறுகின்றது. பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய ஆராய்ச்சியில் ஆய்வாளர்களால் இக் கோட்பாடானது பயன் படுத்தப்படவில்லை.

### வன்முறைக் கோட்பாட்டின் துணைப் பண்பாடு

சில துணைப்பண்பாட்டுக் குழுக்கள், விதிமுறைகளை தளர்த்துவதோடு உடல் ரீதியான வன்முறையின் பயன்பாடுகளுக்கு வலியுறுத்துகின்றன. இது தகுந்த மேலா திக்கக் கலாசாரத்தை காட்டுகின்றது.

### வீட்டு வன்முறையின் ஆணாதிக்க முன்னோக்கு

இங்கு பெண்களுக்கு எதிரான வீட்டு வன் முறையானது மனைவி ஆதிக்கம் செலுத்தும் குடும்பத்திலும் அதே சமயம் கணவன் ஆதிக்கம் செலுத்தும் குடும்பத்திலும்

இடம்பெறும். இருப்பினும் அக்குடும்பத்தினை கணவன் மட்டும் கட்டுப்படுத்தி, தீர்வுகள் எல்லாம் கணவரே எடுக்கும் குடும்பத் திலேயே வன்முறைகள் அதிகம் இடம்பெறு கின்றன என்று குறிப்பிடப்படுகின்றது.

### பொது அமைப்புக்கள் கோட்பாடு

வீட்டு வன்முறையானது தனிப்பட்ட நோயி யல் என்பதை விட இது ஓர் அமைப்புக்களின் தயாரிப்பு என இக்கோட்பாடு குறிப்பிடு கின்றது. சமூகவியலாளர்கள் பொதுவாக, வீட்டு வன்முறைப் பிரச்சினை பற்றி அதிலும் குறிப்பாக, பெண்களுக்கு எதிரான வன் முறை பிரச்சினை பற்றியே ஆய்வினை மேற்கொள்ளுகின்றார்கள். பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய தனிப்பட்ட ரீதியான பிரச்சினை பற்றியோ அல்லது சமூக கலாசார ரீதியான பிரச்சினை பற்றி யோ எந்த கோட்பாட்டு வரைபிலும் முழுமை யாக அணுகவில்லை. இருப்பினும் தற்போது பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றி அறிவதற்கு ரிசார்ந்திருத்தல் கட்ட மைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆசியா வில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை பற்றிய தற்போது நடை பெறும் ஆய்வில் ரிசார்ந்திருத்தல் கட்ட மைப்பும் பயன்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு ஆய்வாளருமே சார்ந்திருத்தலை வித்தியாசமாக வரைவிலக்கணப் படுத்தி யுள்ளனர். இதில் சிலர் சார்ந்திருத்தலை பொருளாதார ரீதியாகவும், சமூகரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் நோக்குகின்றனர். ஏனையோர் சார்ந்திருத்தலை வேறு மூன்று வகையாக நோக்குகின்றனர். அவையாவன: இடையேயான சார்பு, தொடர்ந்து வாழ் வதற்காக சார்ந்திருத்தல் மற்றும் அதிக நம்பகத்தன்மை. வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் சில கட்டுப்பாடுகளின் கீழே சார்ந்திருக்கின்றனர். இந்தக் கட்டுப் பாடுகள் திருமணத்தின் போது மனைவிக்கு கிடைக்கும் பொருளாதார சார்ந்திருத்தல் அல்லது சமூக சார்ந்திருத்தலாக அமையும். இந்தச் சார்ந்திருத்தலானது பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறையினை விளக்கி நிற்கின்றது.

திருமணத்தினால் ஏற்படும் சார்ந்திருத் தலானது பெண்களை வன்முறைப்படுத்தி வாழ்வதற்கே வழிவகுக்கின்றது. சார்ந் திருத்தல் கட்டமைப்பானது பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைக்கு வழிவகுக் கின்றது.

## வீட்டு வன்முறைக்கான காரணங்கள்

வீட்டு வன்முறைகள் தொடர்பாக ஏலவே செய்யப்பட்ட ஆய்வானது வீட்டு வன்முறை பல காரணங்களால் தோற்றுவிக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றது. அக் காரணங்களை விபரிப்பதற்கு முன்பாக வீட்டு வன்முறையின் சுருக்கமான வரலாறு ஒன்று Doerner & Lab (1995:112 -114). என்போரால் விளக்கப்பட்டது.

பெண்கள் மீதான ஆண்களின் ஆதிக்கத் திலிருந்து வீட்டு வன்முறை ஆரம்பிக்கிறது. இதற்கு உறுதியான வரலாற்று சான்றுகள் உள்ளன. ஆரம்பகால ரோமானியச் சட்டத் தின்படி, பெண்கள் அவர்களுடைய கணவன் மாரின் சொத்தாக நடாத்தப்பட்டார்கள். இவ்வழமை வேத நூல் பந்திகள் இலக்கம் 30:3-15, கிறிஸ்தவம், ஆங்கிலப் பொதுச்சட்டம் மற்றும் அமெரிக்க குடியேற்றவாசிகளின் பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் பலப் படுத்தப்பட்டிருந்தது. சொத்து என்பதால், பெண்கள் அவர்களுடைய வாழ்வையும், மரணத்தையும் தீர்மானிக்கின்ற சக்தியைப் பெற்ற தகப்பன்மாரினது அல்லது கணவன் மாரினது கட்டுப்பாட்டுக்கு ஆளாக்கப்பட் டார்கள். பெரும்பாலான வரலாறுகள் முழு வதும் பெண்களுக்கென நிலையான சட்டம் எதுவும் இருந்ததில்லை. ஆனால் அல்குர் ஆனில் சூரத்துல் நிசாவில் பெண்களுக்கான அந்தஸ்து, பாதுகாப்பு, சொத்துரிமை போன்றன விரிவாகவும் தெளிவாகவும் முன் வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெண்ணுக்கு எதிராக செய்யப்பட்ட குற்றம் தகப்பனுக்கு அல்லது கணவனுக்கு எதிரான குற்றமாகப் பார்க்கப்பட்டது. ஆனால், அவளுக்கல்ல. இதன் விளைவாக ஆண் ஆதிக்கர்கள் அவர்களின் இழப்பிற்காக பழிவாங்கல் அல்லது இழப்பீட்டைப் பெற முற்பட்டனர். ஒரு பெண் துன்புறுத்தப்படக்கூடியவளாக

இருக்க முடியாது. தகப்பன் அல்லது கணவனே அவர்களின் பொறுப்பிலுள்ள பெண்களின் மீதான உடல்ரீதியான காயப் படுத்தல்களுக்கு பொறுப்புதாரிகளாவர். உரிமையாளர் என்றவகையில், தகப்பன் அல்லது கணவன் பெண்ணை தண்டிப் பதற்கு எதிர்பார்க்கப்பட்டார். அதிகமான மேற்கத்தேய கலாச்சாரங்கள் பெண்கள் மீதான ஏற்புடைய தண்டனைகளை அவற் றின் சட்டக்கோவையில் விதந்துரைத் துள்ளன.

1600களின் நடுப்பகுதியில் மனைவியை அடிப்பதை கட்டுப்படுத்துகின்ற சட்டங்கள் முதன் முதலில் இணைக்கப்பட்டன. எவ்வா றாயினும், பெண்கள் மீதான கணவன்மாரின் உடல்ரீதியான தாக்குதல்கள் ஒரு ஏற்புடை யதற்ற ஒழுக்க விழுமியமாக ஏற்றுக்கொள் ளப்பட்டதாலும், குடும்ப இரகசியங்கள் மீதான உறுதியான நம்பிக்கைகள் காரண மாகவும் இச்சட்டங்கள் மிக அரிதாகவே நடைமுறைப்படுத்தப்பட்டன. பின்னர், 1800களின் பிற்பகுதியில் குடும்ப வன்முறை களைக் கட்டுப்படுத்துகின்ற சட்டங்கள் அமுல்படுத்தத் தொடங்கின. குடியேற்றம், குற்றங்களின் அதிகரிப்பு, மதுபாவனை போன்றவற்றின் மீதான கவலைகள் மற்றும் ஏனைய காரணிகளாலும் இது நடைமுறைப் படுத்தப்பட்டது. இச்சட்ட ஒழுங்கின் பகுதி கள் குடும்ப வன்முறையுடன் தொடர்பான ஓர் சூழ்நிலையில் வெளித்தலையீடுகளை அனுமதித்தது. முன்னைய நகர்வுகளின்படி, இச்சட்டங்களும் அரிதாகவே அமுல்படுத் தப்பட்டன.

1960 களில் பொதுச் சமூக அமைதியின்மை மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. கற்பழிப்பு, துணைத் துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறை குறித்த அக்கறை பெண்களுடைய நகர் வின் தோற்றத்திற்கான அழுகைக் குரல்கள் ஒன்றுதிரண்டு பேரணியாக ஆரம்பித்தன. வீட்டு வன்முறையினுள் பொலீஸ் தலையீடு செய்வதற்கு அழைக்கப்பட்டு குடும்ப இரக சியப் பிரச்சினைகள் மாற்றீடு செய்யப் பட்டன. இது அக்காலகட்டத்தில் இருந்து வைத்தியர்கள், சமூக சேவையாளர்கள் போன்றோர் குடும்ப வன்முறை பற்றி பேசத்தொடங்கினர். அத்துடன் இப்பிரச்சி னையை சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். வீட்டு வன்முறை தோன்றுவ தற்கான கீழுள்ள காரணிகளை ஆய்வாளர் கள் குறிப்பிடுகின்றனர்

## உளவியல் ரீதியான காரணிகள்

வீட்டு வன்முறையினது தனிப்பட்ட இயல்பு களின் தொழிற்பாடு, கோட்பாடுகள் தீர்மா னிக்கும் காரணிகள் போன்றவற்றை இது சுட்டிக்காட்டுகிறது. ஏமாற்றம் மற்றும் தன் நலப் பலவீனங்களிலிருந்து வலுச்சண்டை விளைவிக்கப்படுகிறது (Campbell & Hump hreys,1993:6).,(Oblin & Tonry,1989:63). தன் நலப் பலவீனங்கள் (Ego weakness) பற்றிய கருத்து (Goldstein & Rosenbaum,1985) மற்றும் (Neidig et al:1985) போன்றோரால் கண்டுகொள்ளப்பட்டு ஆதரவளிக்கப்பட்டது. இது Barnett என்பவரால் மேற்கோள் காட்டப் படுகிறது. அதாவது தாக்குகின்றவர்கள் பெண்களை அடிக்கின்றனர், ஏனெனில் அவர்களாகவே அவர்களை வெறுப்பூட்டி கோபங்கொள்ளச் செய்கின்றனர் (Barnett et al 1997:243) மேற்கோள் காட்டி தீர்வை முன்வைக்கின்றார். எவ்வாறெனின், அவர்க ளுடைய ஆய்வில் வன்முறை மனிதன் வன்முறையற்ற ஒருவரை விட அதிக எதிர்ப் புணர்ச்சியுடன் இருப்பர். (Hasting & Hamberger : 1988) மற்றும் (Offutt:1988) போன்றோரின் மற்றைய கண்டுபிடிப்புக்கள் அவர்களுக்கே முரண்பாடாக இருந்தன. ஏனெனில், பிந்திய ஆய்வில் வன்முறை மற்றும் வன்முறையற்ற மனிதர்களுக் கிடையே எந்தவொரு வேறுபாடுகளையும் கண்டு கொள்ளவில்லை இதனை ஆய் வாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

வீட்டு வன்முறையானது மனிதனினுள் தோற்றுவிக்கப்பட்ட மாறுபட்ட நடத்தை களால் ஏற்படுகிறது (Doemer & Lab, 1995:114). இக்கருத்தினை ஆமோதிக்கும் (Barnett et al, 1997:243) வாதம் யாதெனில், சண்டை புரிவோர் நிலைத்த உணர்ச்சி வெளிப்பாடு குறைவாக உடையவர்கள். அவர்கள் எதிர்மறையான தொடர்பாடல்

நடத்தைப்பாங்கை உடையவர்கள். அவர்கள் பின்வாங்கல், திடீரென உணர்ச்சிவசப்படுதல், உணர்வற்ற நிலை, தாழ்வு மனப்பாங்கு போன்ற பல எதிர்மறையான மன வெழுச்சிகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் உச்ச அளவான பொறாமையை அனுபவிப்பதுடன் அவர்கள் தங்களுடைய மனைவிமார் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறுவதையும் விரும்பமாட்டார்கள் (Brubaker,1993:114). ஒரு குடும்பத்தில் உள்ள உடல்ரீதியான பகைமையானது, ஒரு நபருடைய கடந்த கால அனுபவங்களுடனான பகைமையான இடைவினை அத்துடன் ஏனைய தனிப்பட்ட பண்புகள் என்பவற்றின் மூலம் சிறந்த எதிர்வுகூறலை முன்வைக்கலாம் (Buzawa and Buzawa,1996:14).

## சமூக - உளவியல் காரணிகள்

தனிமனிதர்கள் அவர்களின் சூழலுடன் கொள்ளும் இடைவினை பற்றி சமூக - உளவியல் கோட்பாடுகள் விபரிக்கின்றன (Oblin & Tonry,1989:63). சில கருத்துக்கள் மது மற்றும் போதைப்பொருள் பாவனை வீட்டு வன்முறைக்கான காரணமாக இருப்பதாக குறிப்பிடுகின்றன (Farmer,1979:67). இக்கருத்தினை Buzawa பகுதி அளவில் ஆதரிக்கின்றார். ஆனால் மது மற்றும் போதைப்பொருள் பாவனை வீட்டு வன்முறைக்கான வேரூன்றிய காரணமாக இருப்பதில்லை என்பதனையும் அவர் மேலும் இணைத்தார். Buzawa குடும்பத்தின் உட்புற மற்றும் வெளிப்புற வன்முறைகளுக்கு எதிராக அடிப்படைத் துஷ்பிரயோகம் தடுக்கப்படுபவர்களால் குறைக்கப்படுகிறது என வலியுறுத்தினார்(Buzawa and Buzawa, 1996:15). துஷ்பிரயோகம் செய்யும் மக்கள் குடிபோதையற்ற போதும் அல்லது குடிபோதையின் போதும் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். குடிபோதையில் உள்ள பெரும்பான்மையான ஆண்கள் தங்களது மனைவியரை அடிப்பதில்லை என Barnett et al இனால் நடாத்தப்பட்ட ஆய்வில் அறியப்பட்டது (Farmer,1997:5).

Frude என்பவர் சனநெருக்கடியான நிலையில் வாழ்தல், வறுமை மற்றும் வேலையின்மை போன்ற சமூகக் காரணிகளால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. இது வீட்டு வன்முறைக்கு காரணமாகவுள்ளது ஏனெனில் ஒரு நபர் இவ்வாறான பிரச்சினைகளால் கோபமடைகிறார். இக்கோபம் அவரது துரதிஷ்டவசமாக துணைவியின் மீது வெளிக்காட்டப்படும் என வலியுறுத்தினார். (Hearn:1998) என்பவரின் கூற்று யாதெனின், வன்முறை என்பது உள்ளகத்தேவைகளை வெளிப்படுத்துவதாகவும் அல்லது வெளித்தேவைகளை அடைந்து கொள்வதற்கான கருவியாகவும் இருக்கும் என்றார். ஏனைய சமூக - உளவியல் காரணிகள் பல ஆய்வாளர்களால் குறிப்பிடப்பட்டவை. அவை, ஏமாற்றம் - பகைமை, இயல்பூக்கம், துணைகளுக்கிடையிலான இடைவினை, சுய மனப்பாங்கு, ஓய்வின்றிய வேலைப்பழு, குறியீட்டு இடைவினை, பரிமாற்றிக் கொள்ளப்பட்டதும், உடமையாக்கிக் கொள்ளப்பட்டதுமான கொள்கைகள் என்பனவாகும்.

Hearn ஒரு நபருடன் தொடர்பான சமூக சூழ்நிலையின் மாற்றத்திற்கேற்ப காலப் போக்கில் அவர் அதிகமான மற்றும் குறைவான வன்முறையாளராக மாறமுடியும் என குறிப்பிட்டார். வன்முறைக்குள்ளாகக் கூடிய ஒருவர் குறிப்பிட்ட உளவியல் நிலையை விட குறிப்பிட்ட சூழல் நிலையுடன் தொடர்புற்றிருப்பார் என இதனை விவாதிக்காலாம். சில ஆண்கள் அளவுக்கதிகமாக மது அருந்துவதற்கான மனப்பாங்கு சமூகச் சார்பினால் ஏற்படலாம். இதுவே பிறகு வன்முறையை விளக்குவதற்கு ஏற்றதாக கருதப்படலாம்.

## சமூக - கலாசாரக் காரணிகள்

நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட வழக்காறுகள், சமூக கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான ஒழுங்குகள் போன்றன வீட்டுவன்முறையை உண்டாக்குகின்றன. இக் காரணிகள் தொழிற்பாட்டுக் காரணி, வன்முறைக் கலாச்சாரக் காரணி, அமைப்பியல் காரணி, பொது அமைப்புக் காரணி, முரண்பாடு மற்றும் உள்ளக குடும்பக் கோட்பாடுகள் என பிரிக்கப்பட்டுள்ளன. (Felson & Tedschi

1993) போன்றோர், பெரும்பான்மையான வன்முறைச் செயல்கள் என்பது அனைத்து சமுகங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகளின் விளைவுகளின் அதிகரிப்பு எனக் கருதுகின்றனர். குடும்பத்தில் சமுதாய நடைமுறைகள், உதாரணமாக, இன்றைய சமுகத்தில் குடும்பங்களின் சமூக தனிமைப் படுத்தல் அதிகரித்துள்ளது. இவ்வாறு கூறப்பட்டது தடுத்து நிறுத்தக்கூடிய மற்றும் ஆதரவு வழங்கக்கூடிய முகவர்கள் வன்முறைப் போக்குகளை மட்டுப்படுத் தலாம் என்ற நடுநிலையிலாகும். இதனால், குடும்பக் கட்டமைப்பு உயர்ந்தளவிலான வீட்டு வன்முறைக்கு இட்டுச்செல்வதனை காணக்கூடியதாக உள்ளது. Barnett et al (1997) ஆண் சமூகமயப்படுத்தலின் வன் முறை மற்றும் குடும்ப ஆட்சித் தலைவருக் குரிய வழக்காறுகள் போன்றன ஆண்க ளால் பெண்கள் உடைமை போன்று நடாத்துவதற்கு ஊக்குவிக்கின்றது என குற்றம் சாட்டினார்.

கிரண் என்பவர் சமூக அழுத்தங்கள், வளங்களுக்கான சமமற்ற வாய்ப்புக்களுடன் இணைக்கப்பட்டு வீட்டு வன்முறையை ஏற்படுத்துகின்றது என நோக்கினார். அவரின் கூற்றின்படி, அழுத்தத்திற்குள்ளான தனி நபர்கள் அவர்களுடைய ஏமாற்றத்தினை வெளிப்படுத்தும் ஒரு வழியாக வன்முறை யை நாடி அடைந்து கொள்வர் என்றார். இவ் ஏமாற்றம் ஒரு நிகழ்விலிருந்து அல்லது மெதுவாக கட்டமைக்கப்பட்ட பல நிகழ்வு களிலிருந்து தோற்றம் பெற்றிருக்கலாம். அதாவது அவர்களால் அழுத்தம் மற்றும் வறுமை வன்முறையை விளக்குவதற்கு போதுமானதாக இல்லை, ஏனெனில் அதிக மான வறிய குடும்பங்கள் பாதிக்கப்பட்ட தாக இல்லை. பெண்களின் தாக்குதல் மற்றும் அழுத்தம் சமூக தோற்றத்தைக் கடந்தும் நிகழ்கின்றது. என்றாலும், இது அழுத்தம் மற்றும் வன்முறை கீழ் வகுப்புக்களிற்கிடையில் அதிகமாக ஏற்படும் என்ற எண்ணத்தைத் தரும். கிரண் மேலும் விவாதிக்கும்போது, கற்றல், சமூகமய மாக்கல், மாதிரி காட்டல் மற்றும் பின் பற்றுதல் போன்றவற்றினூடாக வன்முறையானது தோற்றுவிக்கப்பட்டதும், மீள்தோற்றுவிக்கப் பட்டதும் என புரிந்துகொள்ளப்படலாம் எனக் குறிப்பிட்டார். இது சமூக உறவுமுறைகளி னூடாக அறியமுடியாத தனிநபர் மற்றும் காலப் போக்கில் செயற்படுகின்ற வன்முறைச் சூழலொன்று தோற்றுவிக்கப்படுவதாக கருத்தாக்கமாக மாற்றப்படலாம்.

## உயிரியல் காரணிகள்

வீட்டு வன்முறைக்கான உயிரியலின் அடிப்படையான கோட்பாடுகளை Dabbs et al (1987) இனை மேற்கோள் காட்டி Buzuwa (1997) விளக்குகின்றார். அதிகளவான ஆண் சுரப்பியாகிய தெஸ்தெஸ்தெரோனே (Testostone) அதிகப்படியான வன்முறையுடன் தொடர்புபடுவதாக அவர்கள் குறிப்பிட்டார். Buzuwa வின் ஹோர்மோனின் முறைகளுக்கு முக்கியத்துவமளிக்கும் அவரின் கருத்துக் களை Hearn (1998) ஆதரிக்கின்றார். மேலும் இவர் ஆண்கள் இயற்கையாகவே ஆக்கிரமிப்புத் தன்மையுடையவர்களாக காணப்படுவர் என்பதனை இணைத்தார்.

## சமூக - கற்றல் காரணிகள்

சமூக-கற்றல் காரணிகளை முன்மொழிப வர்கள், தாக்குதல் நடத்தையானது கற்றுக் கொள்ளப்பட்டதும், சமூக சந்தர்ப்பமொன்றில் இடம்பெறுவதுமாகும் என விவாதிக்கின்றார் (Levinson,1989). அவர் மேலும் சந்தர்ப்பம் சார்ந்த காரணிகளினதும் (தனியாள் பண்புகள், துணைகளின் பண்புகள், சமூக பண்புகள்) சூழ்நிலை சார்ந்த காரணிக ளினதும் இணைவே குடும்ப வன்முறை இடம்பெற முடியாததொரு சூழலை உருவாக் குகிறது என வலியுறுத்துகிறார். இந்த சூழ்நிலை சார்ந்த காரணிகள், சந்தர்ப்பக் காரணிகள் இருக்கின்ற போது குடும்ப வன்முறையை விரைவுபடுத்துகிறது மேலும் இது குடும்ப வன்முறையை ஊக்குவிக் கின்றது.

தனது குழந்தைப்பருவத்தில் வீடுகளில் குடும்ப வன்முறையை அவதானித்த அல்லது அனுபவித்த நபர்கள் தனது பிற்பட்ட வாழ்வில் திருமண உறவுமுறையில்

அதிகமாக அதேபோன்ற வன்முறையு டையவர்களாக உருவாகுகின்றனர் என்பது கவனத்தில் கொள்ளக்கூடிய ஆதாரமாக காணப்படுகிறது. இக் கோட்பாடு Barnett (1997) ஆல் கேள்விக்குட்படுத்தப்படுகிறது. வன்முறையை நேரடியாக கண்ட அதிகள வான சிறுவர்கள் அல்லது துஷ்பிரயோகப் படுத்தப்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோக நடத்தையுடைய பெரியவர்களாக வளர்வ தில்லை. ஆண்கள் வலிமைக்கும், பெண் துணைகளை பாலியல் வகிபங்கில் அடக்கு வதற்கான சமுகமயமாக்கலுக்கும், திருமண முரண்பாடுகளில் ஆதிக்கத்தை பயன்படுத்து வதற்கும் உரிமையளிக்கப் பட்டுள்ளனர் என்ற கருத்தை அவர் ஆதரிக்கின்றார்.

## உறவுமுறைக் காரணிகள்

திருமண அதிருப்தி மற்றும் வீட்டு வன்முறை சார்ந்த விடயங்களில் அதிகமான முரண் பாடான கருத்துக்கள் இருப்பதாக Barnett (1997) தெரிவித்தார். Hamberger (1992) Barnett et al இனால் மேற்கோள் காட்டப் படுகிறார், கடும்போக்கானது திருமண பந்த அதிருப்தியினாலேயே தோற்றுவிக்கப் படுகிறது. Barnett மேலும் குறிப்பிடுகிறார், Rosenbaum & O,Leary (1981) போன்றோரின் ஆராய்ச்சியிலிருந்து பெண்களை வலிந்து தாக்குகின்ற அரைவாசி ஆண்கள் அவர் களுடைய உறவை அதிகமாக மதிக் கிறார்கள் என கண்டறியப்பட்டது. கடும் போக்குடையவர்கள் பலர் வற்புறுத்தல் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் தொடர்பாடலின் தவறான புலக் காட்சியை அனுபவிக்கின்றனர். சில கடும் போக்கானவர்கள் பிரச்சினைத் தீர்வாற்றல் குறைவாக உடையவர்கள்.

## வீட்டு வன்முறையில் பங்கு கொள்ளும் ஏனைய காரணிகள்

ஏனைய சில காரணிகளும் வீட்டு வன் முறைக்கு பங்களிப்பதாக கருதப்பட்டன. அவை, சுற்றுச்சூழல் (Hasselt et al,1998) படிப்படியான விருத்தி, தலைமுறைகளுக்கு இடையேயான தற்காலிக விளக்கம் (Levinson,1989) நோயியல் நடத்தை மற்றும் மனநிலைப் பாதிப்பு (Mckendrick and Hoffinanfi, 1990) வயது மற்றும் வயது வித்தியாசம், பிள்ளைகளின் எண்ணிக்கை, திருமண பந்தத்தின் நீடிப்பு (Soroka & Bryjak, 1995), மற்றும் வீட்டு வன்முறையானது மோதல் தீர்மானத்தின் ஒரு வடிவமாகவும் கருதப்பட்டன (Levinson,1989).

குடும்பமானது ஒரு தொடரான பெரிய ஒழுங்கமைப்பில் காக்கப்படுகிறது. அது நிறுவன ரீதியான கட்டமைப்புக்கள், வகிபா கங்கள், விதிகள், நம்பிக்கைகள் மற்றும் தொடர்புமுறை போன்றவற்றை விருத்தி செய் கிறது. இந்த பல்வேறுபட்ட ஒழுங்கமைப்பு நிலைகள் அயலவர்கள், சமூகம், உள்ளூர் மற்றும் தேசிய அமைப்புக்கள், உலக, சமூக பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அமைப் புக்கள் போன்றவற்றையும் உள்ளடக்கு கின்றது. சில நேரங்களில், குடும்பங்கள் இவ்வாறான பாரிய ஒழுங்கு முறையான அமைப்புக்களை குடும்பச் செயற்பாட்டிற்கு உறுதுணையாக கண்டறிந்து கொள்ளும். ஆனால் இந்த பாரிய ஒழுங்குமுறை உறுப்பினர்களின் கூட்டு ஒத்துழைப்பின் ஒரு வழியாகும். இது ஆரோக்கியமான அபிவிருத் திக்கு இன்றியமையாத குடும்பங்களையும், குடும்பங்களின் வளமாக கருதப்படும் உறுப்பினர்களையும் இல்லாமல் செய்யும். வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்யாமை; நாகரீகமாக உடைகளை உடுத்துவது; கணவன் மீது பொறாமைப்படுவது; சீதனம்; கணவன் மதுபானம் பாவித்தல்; கணவனை தவறாக புரிந்து கொள்ளுதல்; காரணமில்லாமல் சிரித்தல் ; ஒரு நாளில் அதிகத்தரம் தலை இழுப்பது; கதைக்கும் போது சத்தமாக கதைத்தல் ; இலவச மற்றும் சமூக தன்மை; ஆண் நட்பு; குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்கு மதிப்பு கொடுக்காமல் பழகுதல்; பெற்றோர் வீட்டிலிருந்து பணம் கொண்டு வரச் சொல்லி கட்டாயப்படுத்தல்; திருமணத்தின் போது செய்து கொடுத்த சத்தியத்தை முழுமையாக நிறைவேற்றாமல் விடுதல்; திருமணத்தின் முன்பு இருந்த காதல் தொடர்பை பற்றி சந்தேகித்தல்; ஏலவே பேசப்பட்ட கூடுதல் திருமணத் தொடர்பு பற்றி சந்தேகித்தல்; கணவன் பாலியல்

தொடர்புக்கு எதிர்ப்பு தெரிவித்தல்; குழந்தை இல்லாமை; பெண் குழந்தை திரும்பத் திரும்ப பெறுதல்; கணவன் பொருளாதார ரீதியாக பெற்றோரில் தங்கியிருத்தல் ; வேலை புரியும் இடத்தில் கணவனுக்கு பிரச்சினை ஏற்படல்; பாலியல் தொடர்பின் போது ஏற்படும் திருப்தி யின்னை; வருமானம் குறைவு செலவு அதிகம்; தொழிலில் திருப்தி குறைவாக இருத்தல்; ஒற்றைப் பண்பியல் காரணி. சமூக விரோத தனிமனித சீர்கேடுகள்; அதிகமான நகைகளை கனவனிடம் வாங்கி கேட்டல் போன்றன பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைக்கு மிகவும் முக்கியமான சில காரணங்களாக தரப்பட்டுள்ளன. இவை தவிர வீட்டு வன்முறையினால் பாதிக் கப்பட்ட, கூறப்படாத இன்னும் பல காரணங் கள் உள்ளன.

## வீட்டு வன்முறையின் வடிவங்கள்

வீட்டு வன்முறையின் பல்வேறு வடிவங்கள் ஆய்வாளர்களால் எடுத்துக் காட்டப்படு கின்றன. அவையாவன :

### உடல் ரீதியானது

உடல் வன்முறைகளில் மிகவும் பொதுவா கவும் அடிக்கடியும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்றைகளாக பின்வருவன காணப்படுகின்றன. குத்துதல், அடித்தல், அறைதல், தள்ளிவிடுதல், பொருட்களை வீசுதல், முடியை இழுத்தல், கை, காலை முறுக்குதல், கழுத்தை நெரித்தல், ஆயுதங்களை பயன்படுத்தல், கட்டுப்படுத்தி வைத்திருத்தல், தொந்தரவு செய்தல், பெண்ணுக்கு ஆதரவளிப்பவருடன் வன்முறையாக நடந்து கொள்ளல், அவளை திடீரென பற்றிப்பிடித்தல் மற்றும் பலமாக இழுத்தல், உதைத்தல் (Advice Desk for Abused Women,1986; Hearn,1998) இவையே துன்புறுத்தப்படுவருக்கு உடல் ரீதியாக உணரக்கூடிய வலியைக் கொடுப்பத னூடாக வழங்கும் வன்முறையின் வடிவ மாகும்.

### பாலியல் ரீதியானது

கட்டாயப்பபடுத்திய பாலியல் செயற்பாடு மற்றும் தாம்பத்திய கற்பழிப்பு போன்றன மற்றுமொரு வீட்டு வன்முறையின் வடிவத்துடன் தொடர்புபடுகிறது (Oblin & Tonry,1989). ஏனெனில், இவை வாழ்க்கைத் துணைகளுக்கிடையில் அடிக்கடி இடம் பெறுகிறன. இவ்வாறான செயல்களானது துணைவர் மற்றைய துணையினுடைய உடன்பாடின்றி பாலியல் உறவில் ஈடுபடும் போது இடம்பெறுகிறது.

### உளவியல் ரீதியானது

உளவியல் ரீதியான வடிவமானது பாதிக்கப் படுபவரை உளவியல் ரீதியான வலியை உணரச்செய்வதோடு அதனால் மனவடு வையும் ஏற்படுத்தும். இவற்றை பிறருக்கு வெளிப்படையாக பார்க்க முடியாது. இவ் உளவியல் ரீதியான வன்முறை துணைவரின் அடிப்படைத் தேவைகளை இல்லாமல் செய்தல், பாதிக்கப்படுபவரின் வீட்டைவிட்டு வெளியே செல்லும் உரிமையை மறுத்தல் மற்றும் பாதிப்புக்காளானவரை கைவிடுதல் போன்றவற்றையும் உள்ளடக்கும் (Brubaker, 1993; Jagwanth,1994).

### மனவெழுச்சி ரீதியானது

மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோக வடிவத் திற்கான உதாரணமாக, பாதிக்கப்படுபவரை மதிப்பிழக்கச் செய்தல், கோபமூட்டுதல் அல்லது மக்கள் மத்தியில் வைத்து பயனற் றவர் என உணரச் செய்தல். இவ்வன்முறை வடிவமானது பாதிப்புக்குள்ளானவரை மனவெழுச்சி ரீதியாக பாதிக்கும் (Advice Desk for Abused Women,1986).

### உணர்ச்சி ரீதியானது

அவதூறான வார்த்தை பிரயோகம், மனை வியை பிள்ளைகள் முன்னாடியும் குடும்பத் தில் உள்ளவர்கள் முன்னாடியும் உறவினர் கள் முன்னாடியும் அவமரியாதைப்படுத்தல், குடும்பத்தில் நடக்கும் எல்லா தவறுகளுக்கும் மனைவியையே குற்றம் சாட்டுதல், சின்னச்

சின்னத் தவறுகளுக்கும் மனைவியையே குற்றம் சாட்டுதல், மனைவி தவறு செய்யா விட்டாலும் அவளை குற்றவாளியாக உணரவைத்தல், மனைவியின் பெயரை கூறுதல், விவாகரத்து கொடுப்பதாக பயமுறுத்துதல், மனைவியை வேலைக்காரி போல் நடாத்துதல், மனைவியின் ஒவ்வொரு அசைவிலும் கண்டிப்பு தெரிவித்தல், தனது நண்பர்களையும் உறவினர்களையும் பார்க்க விடாது தடுத்தல், குடும்ப விடயத்தில் மனை வியின் அபிப்பிராயத்தை கேட்காது விடல், வேறு திருமணம் செய்வதற்காக மனை வியைத் தவிர்த்தல், மனைவி செய்த வீட்டு வேலைகளை அவமரியாதைப்படுத்தல், மனைவியின் குடும்பப் பிண்ணனியை சுட்டிக்காட்டுதல், மனைவியை கொலை செய்வதாக அச்சுறுத்தல் முதலானவை பெண்களுக்கு ஏற்படும் உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகங்களாகும்.

### பொருளாதார ரீதியானது

மனைவியை வேலைக்கு அனுப்பாமல் தடுத்தல், தற்போது செல்லும் வேலைக்கும் போக வேண்டாமென்று வலுக்கட்டாயப்படுத் தல், மனைவியின் விருப்பத்திற்கு ஏற்ப பொருட்களை தெரிவு செய்யவிடாது தடுத் தல், மனைவியின் பெற்றோர் வீட்டிலிருந்து பணத்தினை கொண்டு வரும்படி கட்டாயப் படுத்தல் முதலானவை பெண்களுக்கு எதிரான பொருளாதார ரீதியான வன்முறை களாக காணப்படுகின்றன.

### வாய்மொழி ரீதியானது

Ketterman (1993) மற்றும்; Evans (1993) போன்றோர் பாதிக்கப்படுபவருக்கு ஏதாவது வசனம் உணர்வு ரீதியான பாதிப்பை விளைவிக்குமாயின் அது சொல் சார்ந்த துஷ்பிரயோகம் என எடுத்துக்காட்டினர். இவ்வகையான பாதிப்பு வாழ்க்கைக் காலத் தில் மகிழ்ச்சியையும், படைப்பாற்றலையும் கட்டுப்படுத்திவிடும். சொல் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த தாக்குதல்களை பொறுத்துக் கொண்டிருக்கின்ற பல மனைவிமாரை கடுமையான சொற்கள் கையால் அடிப்பதை விட அதிகமாக காயப்படுத்துகின்றன (New world Translation of the Holy Scriptures,1996). இத் துஷ்பிரயோக வடிவமும் உணர்வு சார்ந்த மனவடுவை உருவாக்குகிறது. இது ஒரு நபரை நிரந்தரமாக உருக்குலையவும் வைக்கும்.

### உடைமைகளை அழித்தல்

இவ்வகையான வன்முறை மாத்திரம் பாதிக் கப்படுபவருக்கு வலியை விளைவிக்கும். ஆனால் அவனை அல்லது அவளை உடலி யல் ரீதியாக பாதிக்காது (Beam,1998).

## மனித வன்முறையின் பொதுப் படையான அம்சங்கள்

பல்வேறு வகையான மனித வன்முறைகள் ஒரு தொகையான பொதுவான இயல்பு களைப் பகிர்ந்து கொள்கின்றன (Mckendrick & Hoffinan,1990). இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

### முரண்பாடு

அனைத்து வன்முறை வடிவங்களும் முரண் பாடு எனும் ஒரு தனிப்பண்பை பகிர்ந்து கொள்கின்றன. முரண்பாடு நடுநிலையானது. ஆனால் மக்கள் அதனை எதிர்மறையான தாகவும் அழிவுடையதாகவும் வரையறுக் கின்றனர், இது அதிகமாக அழிவு சார்ந்த தாக செயற்படுத்தப்படுவதோடு வன்முறை விளைவையும் ஏற்படுத்துகிறது (Louw & Bekker,1996).

### பலம் அல்லது வலிமை

இது வலிமையின் பயன்பாட்டை சுட்டிக்காட்டு கிறது. இது உருவாக்கப்பட்ட வன்முறையில் ஒரு நபரை ஒரு வழியில் வற்புறுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கான உடல் அல்லது மன பலமாகும். ஒரு நபர் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வழியில் ஒன்றைச் செய்வ தற்கு வலிமை மிக்க ரீதியில் கட்டாயப்படுத் தப்படலாம்.

பயம்

பயமானது மிகையாக அல்லது பழிக்குப்பழி வன்முறையாக உள்ளத்திலிருந்து வர வழைக்கப்படும். இது பயம் இல்லாத சந் தர்ப்பத்தை விட பயமுள்ள நிலையில் தீமை செய்பவரை இன்னும் அதிகமாக வன்முறை யாளராக மாற ஊக்குவிக்கும். மேலும் இது பாதிக்கப்பட்டவரை வன்முறையுடனான பழிக்குப்பழியை மேற்கொள்ள தூண்டும்.
பாதிக்கப்படுபவர் மற்றும் தீமை செய்பவர் அனைத்து வன்முறைச் செயல்களிலும் ஒரு தீமை செய்பவர் மற்றும் ஒரு பாதிக்கப் படுபவர் காணப்படுவர். சில சந்தப்பங்களில் வன்முறையில் யார் பாதிக்கப்பட்டவர், யார் தீமை செய்தவர் என்பது தெளிவாக இருக்காது.

வன்முறை என்பது ஒரு தொடர்பாடல்

Merwe (1989) என்பவர், Mckendrick & Hoffman (1990) ஆல் மேற்கோள் காட்டப் படுகிறார். இவர்களின் வாதம், வன்முறை யானது கட்டாயப்படுத்தல். இது பகை வருடன் தொடர்பாடலை மேற்கொள்வதற் கானதொரு வழியாக மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

வன்செயலின் இயல்பு

ஒரு வன்செயலானது உணர்ச்சி வசப்படாத வகையில் திட்டமிடப்பட்டு செயற்படுத் தப்பட்டதாகவும் இருக்கலாம் அல்லது திடீர் உணர்ச்சி காரணமாக திடீரென எழுச்சி பெற்று தானாகவே நடைபெற்றதாகவும் இருக்கலாம்.

வன்முறையானது உயர் மதிப்பு மற்றும் உரிமையை சீர்குலைக்கும்

எந்தவொரு வன்முறைச் செயலும் ஒரு தனிநபரின் மேன்மையையும், உரிமை யையும் சீர்குலையச் செய்யும் இதில் எவ் வகையான வன்முறை வடிவம் என்பது விடயமல்ல. (உடலியல் ரீதியான, உணர்ச்சி ரீதியான, உளவியல் ரீதியான, பாலியல் ரீதியான, வாய்மொழி ரீதியான அல்லது சொத்துக்களை அழித்தல் போன்ற வன்முறை வடிவங்கள் அனைத்திலும் இது இடம்பெறும்.)

வன்முறை தனிப்பட்ட எல்லையில் வரம்பு மீறி உள்நுழையும்.

பொதுவாக, வன்முறைச் செயல் தனிநபர் களின் தனிப்பட்ட மற்றும் உடல் சார்ந்த எல்லையில் எல்லை மீறி நுழையும்.

வன்முறை எவ்விடத்திலும் நேரிடும்.

வன்முறை வெளிப்பாட்டுக்கான பின்னணி அமைப்பானது பொதுவானதாக அல்லது தனிப்பட்டதாக அமையலாம், ஆனால் வீட்டு வன்முறை பெரும்பாலும் தனிப்பட்டதாகவே இருக்கும்.

வன்முறையானது வேண்டுமென்று செய்யப்படும் எதிர்ச்செயலாக இருக்கும்

வன்முறை பெரும்பாலும் வேண்டுமென்றே செய்யப்படும் எதிர்ச்செயலாக இருக்கும். உதாரணமாக கூடுதலாக பெரியவர்களே அதிகமான வன்முறைச் செயலில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர்.

வன்முறைக்கு உணர்திறன் அற்றிருத் தலின் சாத்தியப்பாடு

சமூக கற்கை (சமூகத்தின் இயல்பு பற்றிய பூரண அறிவு) அல்லது அறிவுபூர்வமான மீள் கட்டமைப்பு போன்ற செயற்பாகளி னூடாகவே வன்முறைக்கு உணர்திறன் அல்லது எதிர்ப்பு அற்றிருத்தலை அடைய முடியும்.

வன்முறையானது சந்ததிகளிற்கிடையே குற்றம் செய்யத் தூண்டும்.

வன்முறைக்கு உள்ளான அல்லது பாதிக்கப் பட்ட குழந்தைகள், பெரியவர்களாகும் போது, அவர்கள் அவ்வன்முறையின் நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்த முனைவர்.

பொதுவாக ஒரு வன்முறைக்குப் பதிலடி யாகவே மற்றுமொரு வன்முறை அமை கிறது.

பெரும்பாலான நிலைமைகளில், வன்முறை யானது இன்னொரு வன்முறைக்குப் பதிலடி யாக அமைகிறது அல்லது ஒரு அடக்கு முறையின் பிரதிபலனாகவே இன்னோர் வன்முறை அமைகிறது.

தாக்குதல் நடத்தை உடைய நபருக்கு இருக்கும் தனிப்பண்புடைய அம்சங்கள்

தாக்குதல் நடத்தையுடைய நபர்கள் பொது வான தனிப்பண்புடைய் இயல்புகளைப் பெற்றிருப்பர். பின்வரும் சில இயல்பம்சங் கள் Storm (2000) என்பவரால் எடுத்துக் காட்டப்பட்டன அவையாவன :

- அவர்களிடம் தன் மதிப்பு குறைவாக இருக்கும்.
- அவர்கள் கடும்போக்குடைய உறவு முறை பற்றிய பழங்கதைகள் அனை த்தையும் நம்புவர்கள்.
- அவர்கள் குடும்பத்தில் ஆண் ஆதிக் கத்தையும், ஆண்மை வாய்ந்த பாலி யல் வகிபங்கு பற்றிய மாற்றமுடி யாத நம்பிக்கையையும் கொண்ட பழமைவாதிகளாக இருப்பர்.
- அவர்கள் தங்களுடைய செயல் களுக்கு மற்றவர்களை குற்றம் சாட்டுவர்.
- அவர்கள் பொறாமை நோயை கொண்டவர்கள்.
- அவர்கள் மதுவை உபயோகிக்கும் போதும், மனைவி தாக்குதலில் இருந்து தப்பிக் கொள்ளும் போதும் மன அழுத்தத்தின் கடுமையான எதிர் விளைவுகளைப் பெறுவர்.
- அவர்கள் தமது சுய கௌரவத்தை மேம்படுத்துவதற்காக பாலியலை அடிக்கடி தீங்கு விளைவிக்கின்ற செயற்பாடாக ஆண்மையைக் குறை க்கும் நோக்கில் பயன்படுத்துவதோடு அவர்கள் இரு பாலியல்புடையவர் களாகவும் இருப்பர்.
- அவர்களுடைய வன்முறை நடத்தை கள் எதிர்மறை விளைவுகளைக் கொண்டது என்பதை அவர்கள் நம்ப மாட்டார்கள்.
- அவர்கள் குறைவான ஏமாற்றத்தின் தொடக்க நிலையில் இருப்பர், கட்டுப் பாட்டின் வெளிப்புற கவனக் குறை பாடுடையவர்கள்.
- அவர்கள் உணர்ச்சி வயப்பட்ட வகையில் மனைவி மற்றும் குழந்தை களில் தங்கியிருப்பர்.
- அவர்கள் ஒரு பிரச்சினையைத் தீர்ப் பதற்கு உகந்த வழிமுறையாக வன் முறையை ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அவர்கள் குடும்பத்தை சரியா கப் பாராமரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப் பட்ட வழியாகவும் அதனைப் பார்ப்பர்.
- வீட்டுப்பிராணிகளையும் குழந்தை களையும் அடிக்கடி துஷ்பிரயோகப் படுத்துதல் அல்லது வன்முறையாக பயமுறுத்துவதை கட்டுப்படுத்தும் நுட்பமாக கொண்டுள்ளனர்.
- அவர்கள் குழந்தைகளாக இருக்கும் போது உடலியல் ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகப் படுத்தப்பட்டிருப்பர் அல்லது அவர்கள் பிறரால் தனிப்பட்ட ரீதியில் நோக் கப்பட்டு துஷ்பிரயோகப்படுத்தப்பட் டிருப்பர்.
- அவர்களுக்கு தொழில் திருப்தி யின்மை, வேலைப்பற்றாக்குறை அல்லது வேலையின்மை போன்றன உச்ச அளவில் காணப்படும், இது காலாச்சார சீர்த்தன்மையுடன் குடும் பத்தை நடாத்திச் செல்வதற்கு ஆற்ற லற்ற பற்றாக்குறையான உணர்வு களுக்கு அவர்களை இட்டுச்செல்லும்.
- அவர்கள் அவர்களுடைய சொந்த குடும்பங்களுடன் நெருங்கிய தொடர் பைப் பேணிக் கொள்வர்.

- அவர்களுடைய உறவுமுறை எதிர் பார்ப்புக்கள் உண்மைக்குப் புறம்பாக இருப்பதோடு, அவர்கள் தங்களது மனைவிமாரை, மனைவிக்கான வகி பங்கின் வரைவிலக்கணத்தின் படி இருப்பதை உறுதிப்படுத்துவதை எதிர் பார்ப்பர். ஆனால் இவ்வாறான எதிர் பார்ப்புக்கள் பல தடவை சொல்லப் படாததாகவே இருக்கும்.
- அவர்கள் ஆயுதங்களுடன் முன்ஈடு பாடு கொண்டிருப்பர்.

Mckendrick & Hoffman (1990) போன்றோர் பின்வரும் இயல்புகளையும் இணைத்தனர்.

- அவர்களுக்கு அவமான உணர்வு, சுய வெறுப்பு, சுய மதிப்பு குறைவு போன்ற பண்புகள் காணப்படும்.
- அவர்கள் தம் வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாட்டை இழந்து விட்டோம் என்கின்ற மனநிலையைக் கொண் டிருப்பார்கள்.
- அவர்கள் கோபமுடையவர்களா கவும், ஆழமான மன அழுத்தத்திற்கு உள்ளானவர்களாகவும் இருப்பர்.
- அவர்கள் நிராகரிப்பு, அறிவார்ந்த செயற்பாடு (பேச்சு, எழுத்து) போன் றவற்றை பொதுவான பாதுகாப்புப் பொறிமுறையாக பயன்படுத்து வார்கள்.
- அவர்கள் தாம் அச்சுறுத்தப்படும் உணர்வுகளுக்கெதிராக பகைமை, பின்வாங்கல் மற்றும் அடிப்படை துஷ்பிரயோகம் என்பவற்றை பாதுகாப்பிற்காக பயன்படுத்துவர்.
- சிலர் குழந்தைகள் போன்று துஷ்பிர யோகப்படுத்தப்படுவர்.

Edleson & Tolman (1994) மேலும் சிலவற்றை இணைத்தனர்.

- அவர்கள் தன்முனைப்புப் பற்றாக் குறையைக் கொண்டிருப்பர்.
- அவர்கள் உளவியல் பிறழ்வுகளைக் கொண்டிருப்பர்.

## வீட்டு வன்முறையின் விளைவுகள்

வீட்டு வன்முறையின் விளைவுகள் ஒரு நீண்ட காலப்பகுதிக்கு பல்வேறு திசை களிலும் பரவிச் செல்லும். தீங்கு செய்பவர் தவிர வேறு பலரின் வாழ்க்கையுடனும் நேரடியாக பாதிக்கப்படுபவரின் வாழ்க்கை யுடனும் இதன் விளைவுகள் தொடர்பு பட்டிருக்கும்.

### பாதிக்கப்பட்டவரில் ஏற்படுத்தும் விளைவுகள்

வீட்டு வன்முறையின் சில உடல்ரீதியான விளைவுகளாக மரணம் மற்றும் காயம் ஏற்படும். வேறு சுகாதாரப் பிரச்சினைகளாக குறைவான சுய மதிப்பு, அவர்களுடைய நெருங்கிய உறவுமுறையின் உறுதியற்ற நிலை, பதகளிப்பு, மனஅழுத்தம் மற்றும் தற்கொலை முயற்சிகள் போன்றன விளைவுகளாகும். வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பலர், விஷேடமாக அதனு டைய மிகத் தீவிரமான வடிவங்களான நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடுக் கோளா றின் இயல்புகளை நோய்க்குறியாக வெளிப் படுத்துவர். இவ்விளைவுகள் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது தாக்குதல் நடத்துபவருக்கு தீவிரமான தீங்கை கொண்டு வருவதை தெரியப்படுத்துகிறது. மேலும் மெய்ப்பாடு சார்ந்த முறைப்பாடுகளையும் கூட இவர்கள் தெரிவிப்பர் (Mckendrick & Hoffinan,1990). வன்முறைச் சூழ்நிலையில் வாழும் பெண், வன்முறைக்குட்படாத தாயை விட பெற்றோருக்கான கோரிக்கைகளை அதிகமாக முன்வைப்பர். பாதிக்கப்பட்ட பெண்கள் இரு முறை கருக்கலைப்புப் பிரச் சினைக்குள்ளாவதோடு நான்கு முறைகள் நிறைக்குறைவான குழந்தைகளைப் பிரசவிக் கின்றார்கள் (Nicro Western Cape,1998).

### பிள்ளைகளில் ஏற்படுத்தும் விளைவுகள்

வீட்டு வன்முறையின் அளவு அதிகரிப்பதற் கேற்ப குடும்ப வலிமையின் அளவு, திருமண வாழ்வின் திருப்தி மற்றும் பெற்றோர் திருப்தி

போன்றன குறைவடைகின்றன. பிள்ளைகள் உளவியல் தீங்கால் பாதிக்கப்படுவதற்கும் நடத்தை மற்றும் மனவெழுச்சி விருத்தியில் பிரச்சினை ஏற்படுவதற்கும் இது ஏதுவாக உள்ளது. பிள்ளைகளும் கூட வன்முறையாளர்களாக உருவாக்கப்படுவர். Hotaling &Sugarman (1986) போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது Finkelhor(1988) என்பவரால் எடுத்துக்காட்டப்படுகிறது. தனது தகப்பன் தாயை அடிப்பதனை உடன் இருந்து கண்ட கணவன்மார் தனது மனைவிமாரை அதனைவிடவும் இரண்டு மடங்கு அதிகமாக அடிப்பதாக கண்டறியப்பட்டது. தனது தாய்மாரால் நேரடியாக துன்புறுத்தப்படுகின்ற அல்லது தாய்மார் துன்புறுத்துவதை உடனிருந்து பார்க்கின்ற சிறுவர்களும் ஒரு வகையான கஷ்டத்தை அனுபவிப்பதால் அவர்களும் மறக்கடிக்கப்பட்ட அல்லது கவனத்திற் கொள்ளப்படாத பாதிப்புக்குள்ளானவர்களாகவே ஆகுகின்றனர். பெற்றோரின் தேவையற்ற கோபம், ஏமாற்றம், உதவியற்ற நிலை போன்றவற்றிற்கு குழந்தைகளே இலக்காகுவர்.

சமுதாயத்தில் ஏற்படுத்தும் விளைவுகள்

வீட்டு வன்முறையானது ஒரு பொருளாதார, சுகாதார மற்றும் சமூகப்பிரச்சினையாகும் (Campbell & Humphreys,1993). Edleson & Tolman (1992:8) போன்றோர், பெண் துஷ்பிரயோகத்திலிருந்து சமுதாயமானது பொருளாதாரச் சுமையை விளைவுகளாக அடைந்து கொள்கிறது எனக்குறிப்பிட்டனர். வீட்டு வன்முறையிலிருந்து இறப்புக்கள் விளைவாகக் கிடைப்பதனூடாக சமுதாயமானது அதனுடைய பெறுமதிமிக்க உறுப்பினர்களை இழந்துவிடுகிறது. வீட்டு வன்முறைக்குள்ளானவர்கள் சில வேளைகளில் அதிகம் பாதிக்கப்படுவதோடு உதவியற்றவர்களாகவும் ஆகிவிடுவர். இதனால் சமூக வாழ்வினை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வதில் தோல்வியடைகின்றனர்.

பெண்களுக்கெதிரான வன்முறையானது, மனித உரிமைப் பிரச்சினைகளில் அதிகமாக சிலாகிக்கப்படுகின்ற ஒன்றாகும்.

பின்வருவன அண்மைக் காலத்தில் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்ட வீட்டு வன்முறையின் பரவல்களாகும்.

- South Africa வில் ஒவ்வொரு வாரமும் நான்கில் ஒரு பெண் தனது ஆண் நண்பனால் அல்லது கணவனால் தாக்கப்படுகிறாள் (Nicro Western Cape,1998).
- ஆண்கள் பங்கு கொள்கின்ற ஆகக் குறைந்தது 46 சதவிகிதமான வன்முறை நிகழ்வுகளில் பெண்களின் கண்காணிப்பின் கீழிருக்கின்ற பிள்ளைகள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுகின்றனர் (VTC Criminology victim survey,1998).
- ஒரு பெண் உண்மையில் வெளியில் இருந்து உதவியை தேடுவதற்கு முன் சராசரியாக 39 தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றாள் (Nicro Western Cape,1998).
- Lawrence (1992) என்பவர் வீட்டு வன்முறையானது மிகவும் பரவலாகியுள்ள தொரு சமூகப்பிரச்சினை என்ற முடிவிற்கு வந்தார். அடிக்கடி நடக்கின்ற வன்முறை பொலிஸை எதிர்த்துச் சண்டையிடுதலாகும். இது ஏனைய அனைத்து வன்முறைகளைவிடவும் மிகவும் பொதுப்படையாக நடக்கின்ற ஒரு வன்முறை வடிவமாகும். இது எவ்வாறெனினும் வன்முறையின் பரவலுக்கு உறுதியான விளக்கம் ஒன்றை வழங்குதல் மிகவும் கடினமாகும். ஏனெனில் துணைகள் துஷ்பிரயோகப்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் புள்ளிவிபரவியல் தரவுகளின் படி திருத்தமற்றவையாகும் (Brehm, 1992). ஒருவரின் ஆய்விலிருந்து மற்றையவரின் ஆய்விற்கு துணை துஷ்பிரயோகப்படுத்தப்படும் கால எல்லையின் வரையறையானது குறிப்பிடத்தக்க மாறலைக் காட்டுகிறது (Doemer & Lab,1995). ஏனெனில் மிக மிக அதிகமான வீட்டு வன்முறைகளானது தனிப்பட்ட ரீதியில் இரகசியமாக நடைபெறுகின்றன (Finkelhor,1988).

பெண்கள் துஷ்பிரயோக உறவுமுறையில் தொடர்ந்தும் வாழ்வதற்கு பல்வேறு வகை யான காரணிகள் ஏதுவாக உள்ளன. Gilles (1997) என்பவர் வீட்டு வன்முறை என்பது ஒரு தடவை இடம்பெறும் நிகழ்வல்ல, இதனால் பெண்கள் தனது துணைவர் மாறி விடுவார் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் துஷ்பிரயோக உறவுமுறையில் தங்கியிருக் கின்றனர் என குறிப்பிட்டார். அவர்கள் எப்போதும் அவர்களுடைய மாற்றத்திற்கான சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புக்களை மீள் மதிப்பீடு செய்து கொண்டே இருப்பர் (Kirkwood,1993). வீட்டு வன்முறையை அனுபவிக்கும் பெரும்பாலான பெண்கள் அதனை ஒப்புக் கொள்வதில்லை (Finkelhor, 1989). அதிகமாக அவளுடைய அல்லது அவனுடைய நண்பர்கள் அவளை அல்லது அவனை அத்துடன் அவனது அல்லது அவளது துணைவரை ‘மகிழ்ச்சியான திருமணம்’ அல்லது ‘சிறந்த ஜோடி’ என பார்க்க வேண்டும் என உணரும் ஒரு நபருக்கு அவரது உறவுமுறை அவ்வா றானதல்ல என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்வதற்கு மிகவும் சிரமப் படுவதாக கண்டறியப்பட்டுள்ளது (Belshaw & Strutt,1984). சில திருமணங்கள் நம்பிக் கையில் கட்டியெழுப்பப்படுகிறன. அத்துடன் அவர்கள் விட்டு விலக வேண்டும் என்ற நிலையில் இந்த எல்லைகள் அவர்களை சோதிக்கின்றது.

அவர்களுக்கு நம்பிக்கை மூலக்கூறுகளை மீண்டும் கட்டியெழுப்புவதும், விடாமுயற் சியுடன் செயலாற்றுவதும் விட்டுவிலகிச் செல்வதை விடவும் மிகவும் முக்கியமான தாகும் (Belshaw & Strutt,1984). சிலர் தொடர்ந்திருப்பதற்கு காரணங்கள் எவை யெனில் தனித்திருப்பது தொடர்பான இனம் புரியாத பயம் மற்றும் எங்கு வாழப் போகிறோம் என்று தெரியாதிருப்பதும் ஆகும். மேலும், அவர்களுக்கான எதிர் காலம் என்ன என்ற மனஅழுத்தம் அதே போல் வேறிடம் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கும் என்ற நம்பிக்கையுமே ஆகும். மேலும் அவர்கள் குடும்பம் மற்றும் நண்பர்களின் எதிர்ப்பை எதிர்கொள்வதற்கு பயப்படுகின்றனர். அவர்கள் தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுகின்றனர். அவர்களுக்கு பல ஆண்டுகளாக தங்களுக்கு பழக்கப்பட்ட வீடு மற்றும் வாழ்க்கை முறையோடு ஒட்டியிருக்க வேண்டும் என்ற எண்ணம் (Belshaw & Strutt). பெரும்பான்மையான பெண்கள் முற்பாது காப்புடன் தொடர்புடைய மற்றும் மாற்று வழிகள் பற்றிய பற்றாக்குறையான அறி வைக் கொண்டுள்ளனர். இதன் விளை வாகவே அவர்கள் தொடர்ந்தும் துஷ்பிர யோக உறவுமுறையில் வாழ்கின்றனர். சில பற்றாக்குறையான சுய மதிப்பு மற்றும் அறிந்து கொள்ளப்பட்ட இயலாமையின் விருத்தி போன்றன அவர்களை நீடித்ததொரு தாக்குதல் சுழற்சியினுள் அகப்படுத்தியுள்ளது (Hoff,1990). பாதிக்கப்பட்ட சிலர் அச்சுறுத் தலான உறவுமுறையில் தொடர்ந்து நிலைத் திருக்கின்றனர். ஏனெனில் பொருளாதாரக் காரணிகள், ஆற்றலின் ஏற்றத்தாழ்வு மற்றும் குறைவான ஆதரவு போன்றவற்றால் அச் சுறுத்தலான உறவுமுறையில் தொடர்ந்தும் வாழ்கின்றனர். பாதுகாப்பிடம் இல்லாத இடங்களும் காணப்படுகின்றன. சில பெண் கள் வீட்டைவிட்டு வெளியேறி பின் மீண்டும் திருப்புவதற்கான காரணங்களாக, கட்டாயப் படுத்தல் அல்லது மீண்டும் இணைவதற்கான வாக்குறுதிகளை துணைவரிடம் இருந்து பெறுவதாலும், பிள்ளைகள் மீதான அக்கறை போன்றன காணப்படுகின்றன (Bowker, 1983).

பெண்கள் வீட்டு வன்முறைக்கு பல வகை யான வழிகளில் பதிலளிக்கின்றனர். அதிக மாக, அவமான உணர்வு மற்றும் பொறுப் புணர்வு, பயத்தினூடான பழிவாங்கல் நட வடிக்கை, சில வருடங்களுக்கு அமைதியாக இருத்தல்(Lauer,1992). இன்னும் சிலர் அமை தியாக இருப்பர். ஏனெனில் அவர்களுடைய கணவனால் செய்யப்படுபவற்றை அவர்கள் திருமண வாழ்வின் ஒரு பகுதி என ஏற்றுக் கொள்வதனாலேயே ஆகும் (Dobash & Dobash,1992).

அவர்களுக்குரிய மனித உரிமைகள் தொடர் பான விழிப்புணர்வற்ற பெண்கள் அல்லது அவர்களுடைய பாதுகாப்பிற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாத பல பெண்கள் அவர்களுக்கு துஷ்பிரயோகம்

இழைப்பவர்களை திருப்திப்படுத்துவதற்கான அல்லது அவர்களை பொருந்திக்கொள் வதற்கான வழிவகைகளை தேடுகின்றனர்.

எவ்வாறு அடுத்து இவ்வாறானதொரு நிகழ்வில் இத்தகைய பாதிப்புக்களை குறைக்கலாம் என்ற வகையில் உதவி மற்றும் பாதுகாப்பிற்கு தேவைப்படுகின்ற சக்தி பற்றிய யோசனையும் கவலையும் அடிக்கடி ஏற்படுகிறது. பெண்கள் அவர் களுடைய புகலிடம் மற்றும் தேவைகளை அடையாத போதும் மறுக்கப்படும் போதும் எதுவும் செய்ய முடியாது என்கின்ற ஆபத்தான நம்பிக்கை பலப்படுத்தப்படுகிறது (Schrnidt,1995).

சில பெண்கள் இவ்வாறான திருமணச் சிக்கல்களுக்கு வெளியிலிருந்து கிடைக்கக் கூடியதாகவுள்ள உதவிகளின் நிலை பற்றிய விழிப்புணர்வற்றவர்களாக உள்ள னர் (Belshaw & Strutt,1984). தொழில் வாண்மை ரீதியான உதவியிலிருருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பல ஜோடிகள் காணப்படுகின்றனர். ஆனா லும் அதனை ஒரு போதும் நாடிச் செல்ல மாட்டார்கள். ஏனெனில் தொழில்வாண்மை யாளர்களின் கடமை பற்றிய தவறான அபிப்பிராயம் மக்களிடம் காணப்படுகிறது. அவர்கள் உறவுமுறையில் தீவிரமான சிக்கல் ஏற்படும் போது மட்டுமே இவ்வாறான உதவிகள் பெறப்பட வேண்டும் என நம்புகின்றனர் (Brehrn,1992). இவ்வாறான சமூக சேவையாளர்களுடன் இணைத்துப் பேசப்படுகின்ற வழுக்கள் காரணமாக சிலர் சமூக சேவையாளர்கள் போன்ற முகவர் களை தொடர்பு கொள்ளவதில்லை (Kirkwood, 1993).

இவ்வாறான சமூக, மருத்துவ, சட்ட ரீதியான நிறுவனங்கள் மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகள் ஆணாதிக் கத்தை அல்லது ஆண்களின் வன்முறையை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக ஏற்றுக்கொள்வதால் அல்லது அதனைக் கவனத்திற் கொள்ளாது அசட்டை செய்வ தாலும் பெண்களையே குறை காண்ப தாலும், இப்பிரச்சினைகளிற்கான தீர்வுக்கு பெண்களையே பொறுப்பேற்கச் செய்வ தாலும் இம்முகவர்களை நாட சில மக்கள் தயக்கம் காட்டுகின்றனர் (Dobash & Dobash,1992). வீட்டு வன்முறையை முறை யிடுவதிலுள்ள தயக்கத்தைக் கருத்திற் கொண்ட நோக்கலை Schmidt (1995) ஆதரிக் கின்றார். மேலும் அவர் பல பெண்கள் பொலிஸாரை அழைக்கப் பயப்படுவது, பொலிஸார் சென்ற பின் எதிர்கொள்ள வேண்டிய அதிகரித்த வன்முறை மீதான பயத்தினாலாகும் என்பதையும் வலியுறுத்து கின்றார். பொதுவாக, பெண்கள் திருமண பந்தத்தில் கருத்து வேறுபாடுகளிற்கு முகங் கொடுப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படுவ தாலும் அவர்கள் அதில் ஈடுபாடு குறைந்த வர்களாக இருப்பதாலும் பொலிஸாரை அழைப்பது ஒரு சாமர்த்தியமற்ற தெரிவாக அவர்களால் நோக்கப்படுகிறது (Bowker, 1983). சிலர் முதல் அழைப்பாக குடும்பம் மற்றும் நண்பர்களின் உதவியைத் தேடு கின்றனர் (Lupton & Gillepsie,1997). அவர் களுள் குறிப்பட்ட எண்ணிக்கையானோரினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இல்லாவிட் டாலும் வேறு சில பெண்கள் அவர்களின் தாய் வீட்டிற்குத் திரும்புகின்றனர். அவர் களிடம் காணப்படுகின்ற தனிப்பட்ட குறை பாடுகள் அவர்களின் குடும்பங்களின் நற் பெயரிற்குக் களங்கம் ஏற்படுத்துவதை அவர் கள் கருத்திற் கொள்வதில்லை (Lupton & Gillepsie,1997).

வேறு சில நிலைமைகளில், பெண்கள் அவர் களின் கணவரைக் கொலை செய்கின்றனர். வருடக்கணக்கான ஆணாதிக்கத்தின் விளைவாகவே இது நடைபெறுகின்றது (Dobash & Dobash,1992). குறிப்பிட்ட எண் ணிக்கையான பெண்கள், அவர்களின் வாழி டம் அவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந் தரத் தீர்வை வழங்காவிட்டாலும், அவர்கள் அங்கேயே அவர்களிற்கொரு புகலிடத்தைத் தேடுகின்றனர். வாழிடங்கள் என்பவை பெண் களிற்கு பாதுகாப்பு, புத்துயிர்ப்பு, உளவள ஆலோசனை மற்றும் ஏனைய ஆதர சேவை களைப் பெறக்கூடியதும் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உறுதி செய்கின்ற இடமாகவும் அமைய வேண்டும் (Bowker,1983). சில பெண் கள் அவர்களாகவே தமது கணவன்மாரின் வலிந்து தாக்கும் குணாதிசயங்களை கண வருக்கு புரியவைக்கின்றனர் அல்லது வேறு

சில முறைசாரா ஆதரவு வலையமைப்புக் களின் உதவியுடன் இதனை மேற்கொள் கின்றனர் (Bowker,1983).

இன்னும் தொடர்ச்சியாகத் துஷ்பிரயோகத் திற்குட்பட்டு வருகின்ற பெண்கள், வன் முறைக்கு எதிராக சவால் விடுப்பதற்கும், அதிலிருந்து தப்புவதற்கான வழியை ஒழுங்கமைப்பதற்கும் முன்வருகிறார்கள் (Dobash & Dobash,1992). இவ்விடயத்தில் ஆண்கள் பெண்களை தோற்கடிக்கச் செய் வது பெண்களால் எதிர்த்து நிற்கப்படுவதால். இவ்வாறான குறிப்பிட்ட எண்ணிக்கையான பெண்கள் வளர்ச்சி அடைகின்றனர்.

## தொகுப்புரை

வீட்டு வன்முறை பற்றிய இவ்வாய்வானது, வன்முறையைத் தோற்றுவிக்கின்ற பல வகையான காரணிகளையும், அதன் வடி வங்களையும் விபரிக்கின்றது. இவ்வன் முறையின் வடிவங்கள் ஒரு கணிசமான பொதுக் காரணிகளைத் தருகின்றன. துன்புறுத்தும் இயல்புடைய ஆண்கள் பொதுப்படையான, தனிப்பட்ட குணாம் சங்களை உடையவர்களாக இருக்கின்றனர். வீட்டு வன்முறையானது ஒரு பரந்தள விலான சமூகப் பிரச்சினையாகக் காணப் படுவதால் அது ஒவ்வொருவரையும் பல் வேறுபட்ட வழிகளில் பாதிக்கின்றது. பெண்கள் பிரச்சினைகளிற்கு நேரடியாக முகங்கொடுத்து அல்லது அவர்களின் கணவன்மாரை விட்டு விலகி இவ்வீட்டு வன்முறைக்கு பதிளிக்கின்றனர். தம்மைத் துன்புறுத்துகின்ற கணவரை விட்டு வில காமல் அவ்வன்முறையில் தொடர்ந்திருப்ப தற்கும் அவர்களிற்கு பல காரணங்கள் உண்டு.

வீட்டு வன்முறையானது பாரியதொரு பிரச் சினையாக இருந்தாலும் அதன் உண்மை யான விஸ்தீரணத்தை அளவிட முடியா துள்ளது. பெறப்பட்ட தகவல்களின் படி உலகில் நாற்பது சதவீதமான பெண்கள் தங்களது வாழ்க்கையின் சில கட்டங்களில் வன்முறையினை சந்தித்துள்ளனர். இது அண்மையில் இல் உலக சுகாதார அமைப் பினால் தொழில் மயமான நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் நாடுகளிலுமிருந்து பெறப்பட்ட சராசரியான தகவலே ஆகும்.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை யானது கலாசார ரீதியாகவும், சமய ரீதியாக வும், சாதி ரீதியாகவும், இன ரீதியாகவும் இடம்பெற்றது. இருப்பினும் வீட்டு வன்முறை யின் இயல்பு மிகவும் பரந்த முறையில் அதிகார பூர்வமாகவும் தனிப்பட்ட ரீதியா கவும் சமூகக் கட்டமைப்பில் வைத்து ஆய்வு செய்யப்படுகின்றது. பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் ஆய்வில் குறிப்பிட்டதை விட அதிகமானது. ஏனெனில், ஆய்வில் பல வன்முறைகள் குறிப்பிடப்படவில்லை. அதிகார பூர்வ பதிவுகளை விட வன்முறை கள் பற்றி தனிப்பட்ட ரீதியாக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளில் உள்ள பதிவுகள் மிக அதிகமாகவே உள்ளது. எனினும் அவர் களும் வன்முறைகளின் உண்மையான அளவினை அளவிட முயற்சித்தனர். பல காரணங்களுக்காக குடும்பத்தில் ஏற்பட்ட வன்முறைகளை ஆய்வாளர்களால் பதிய முடியாமல் போயிற்று என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

▲

## நூற்பெயர்க்கோவை

Barnett, O.W., Muller- perim, C.L and Perirn, R.D. (1997) Family violence across the life span. London: Sage Publications.

Bowker, L.H. (1983) : Beating wife-beating. Toronto: Lexington Books.

Brubaker, T.H. (1993) Family relations: Challenges for the future. London: Sage Publications.

Buzawa, E.S. and Buzawa, C.G. (1996) : Domestic violence: The criminal justice response.

Campbell, J.and Humphreys, J. (1993) Nursing care of survivors of family violence.Chicago: Mosby.

David Levinson (1989) Family violence in a cross cultural perspective, by Newbury Park, California: Sage Publications, Inc.,

Doemer, W. G and Lab, S.P (1995) : Victimology. Ohio: Anderson Publishing Company.

Fidkelhor, D. (1988) Stopping family violence: Research priorities for coming decade. London: Sage Publications.

Frude, N. (1993)Understanding family problems a psychological .approach. New Yark: John WiIey and sons.

Hersen, M. (1988) Handbook of family violence. New York: Plenum Press.

Monachie, M. and Van Zyl, M. ( 1994) : Promoting personal safety for women: Women Set an agenda for policy formulation. Pretoria: Human Science research.

Nisonoff, L., & Bitman, I. (1979). Spouse abuse: Incidence and relationship to selected demographic variables. Victimology: An International Journal, 4(1),

Oblin, L. and Tonry, M. (1989) Family violence. Chicago and London: The University of Chicago Press.

Oblin, L. andTonry, M. (1989)Family violence. Chicago and London: The University of Chicago Press.

Schomstein, S.L. (1997) Domestic violence and health care: What every Professional needs to know. Thousand Oaks: Sage Publication.

Straus M. A. (1979) : Determinants of Violence In the Family ï Towards a Theoretical Integration, New York: Free. Press.

Straus, M. A. (1979). Measuring intrafamily conflict and violence: The Conflict Tactics (CT) scales.Journal of Marriage and the Family, 41,

Straus, M.A., Gelles, R., & Steinmetz. S. (1980). Behind closed doors: Violence in the Americanfamily. New York: Anchor Books.

